
308

ிய பாடத்திட்டம்

# வரலாறு

# தரம் - 7



- குறிப்புகள்
- தேசப்பட விளக்கங்கள்
- பட விளக்கங்கள்
- பயிற்சி வினா – விடைகள்
- மாதிரி வினாத்தாள்கள் (இடைத்தவணை)
- மாதிரி வினாத்தாள்கள் (தவணை)
- வரலாற்றுத் துணுக்குகள்

S. J. ஆதி
B.A (Hons)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பாடத்திட்டம்

# வரலாறு

# தரம் – 7

- குறிப்புகள்
- தேசப்பட விளக்கங்கள்
- பட விளக்கங்கள்
- பயிற்சி வினா – விடைகள்
- மாதிரி வினாத்தாள்கள் (இடைத்தவணை)
- மாதிரி வினாத்தாள்கள் (தவணை)
- வரலாற்றுத் துணுக்குகள்

ஆசிரியர்

S.J. ஆதி B.A (Hons)

Class No: 900
Acc No: 308

வெளியீடு : லோயல் பப்ளிகேசன்

Arasady Public Library
Municipal Council
Batticaloa

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற் பதிப்பு : ஜனவரி 2018

தலைப்பு : வரலாறு - தரம் 7

பக்கங்கள் : 168

ஆசிரியர் : S. J. ஆதி B.A (Hons)
jayathy992@gmail.com

பதிப்புரிமை : லோயல் பப்ளிகேசன்

பதிப்பு : லோயல் அச்சகம்

வெளியீடு : *Loyal Publication*
*125, New Moor Street,*
*Colombo - 12.*

விலை : 275/-

ISBN : 978 - 955 - 38705 - 7 - 5

தொடர்பு : **Dr. A. JOGARAJAH**
**No. 125, New Moor Street,**
**Colombo -12.**

T.P : 011 - 2433874
011 - 4280880
0777 556277

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கல்வி உலகம் சார் அனைவருக்கும் வணக்கம்!....

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய தடைகளைத் தவிர்த்துக் கொள்ளவும் புதிய உபாயங்களை கவனமாக மேற்கொள்வதற்கு வழிகாட்டவும் வரலாற்றுக் கல்வி உதவுகின்றது. இந்த வகையில் கற்றலுக்கு தூண்டல், ஆதரவான ஊடகங்களை வழங்கல், நிலைமைகளை பொருத்தமாக்கல் என்பவை ஒரு மாணவன் கற்றலின் அடைவில் முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு அவசியமான காரணிகளாகும். அதே வேளை மாணவனின் பெறுபேற்றை உயர்த்துவதில் ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் நோக்குதல், அவதானித்தல், ஒரு உந்து சக்தியாகி மூளையில் சிறந்த பதிவுகளை ஏற்படுத்தி விடுதல் போன்ற சிந்தனைகளை மனதில் தாங்கி எனக்கே உரித்தான பாணியில் தேடுகை, ஒழுங்காக்கல் என்னும் நுட்பங்களுடாக பயணம் செய்து தயாரித்த ஒரு படைப்பாக இந்நூலை கல்வி உலகம் சார் அனைவரின் கைகளிலும் தவழ விடுகின்றேன்.

இந்நூல் உருப்பெற ஆதரமாகவும் உதவியாகவும் இருந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் கோடான கோடி நன்றிகள்.குறிப்பாக இந்நூலை அழகுற வடிவமைத்து அச்சிட்டு விநியோகிக்கும் லோயல் பப்ளிகேசன் நிறுவனத்திற்கும் என்னை வளப்படுத்திய என் கல்லூரி அன்னைக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

தொடர்ந்து இந்நூல் தொடர்பாக தாங்கள் வழங்கும் ஆக்கபூர்வமான விமர்சனங்கள் யாவும் என் பிரகாசத் தன்மைக்கானதே என கருதிக்கொள்வேன். ஆதலால் இந்நூல் தொடர்பான கருத்துக்களை எனக்கு அறியத்தர பின் நிற்காதீர்கள். பெரியோர்களே!...

திரு. **S.J.** ஆதி **B.A (Hons)**

**"புகழ் பாடப்படும் போது வானத்தில் பறப்பதுமில்லை**
**இகழப்படும் போது பூமிக்குள் புதைபடுவதுமில்லை"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| அலகு 01 | எமது புராதன வாழ்க்கை முறை | 01 |
| அலகு 02 | எமது கீர்த்தி மிக்க அரசர்கள். | 32 |
| அலகு 03 | எமது கலாசார மரபுரிமைகள் | 68 |
| அலகு 04 | பிற்கால ஆட்சி மையங்கள் | 92 |
| அலகு 05 | ஐரோப்பாவின் புராதன நாகரிகங்கள் | 112 |
| | தேசப்படங்கள் | 118 |
| | மாதிரி வினாத்தாள்கள் | 143 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு 01

# எமது புராதன வாழ்க்கை முறை

**அறிமுகம்**

எமது நாட்டில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையுடன் தொடர்புடைய தகவல்களை அறிந்து கொள்ளும் நோக்கில் இப்பாடமானது வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் பொருளாதார, சமூக பண்பாட்டு நடவடிக்கைகள் ஒவ்வொன்றினூடாகவும் ஆரம்பகால இலங்கையர்களின் வாழ்க்கை முறையை நோக்குவோம்.

**பொருளாதாரம்**

**01) முற்காலத்தில் எம் நாட்டில் வாழ்ந்த மக்கள் வாழ்வாதாரத் திற்காக மேற்கொண்ட தொழில்களைக் குறிப்பிடுக.**

★ விவசாயம்
★ மந்தை வளர்ப்பு
★ வர்த்தகம்
★ கைத்தொழில்

**02) இலங்கையர்களின் புராதன வாழ்க்கை முறை பற்றி அறிந்து கொள்ள உதவும் துறைகளினைக் குறிப்பிடுக?**

★ விவசாயம்
★ வர்த்தகம்
★ கைத்தொழில்

**03) முற்கால மக்களின் வாழ்க்கை முறைப்பண்புகளைக் குறிப்பிடுக?**

★ கிராமிய சமூகமுறை காணப்பட்டது.
★ மிகவும் எளிமையான வாழ்க்கை முறையாகவும் தேவைகள் வரையறுக்கப்பட்டதாகவும் காணப்பட்டது.
★ விவசாயம் வாழ்வாதாரத் தொழிலாகக் காணப்பட்ட அதே வேளை விலங்கு வளர்ப்பு அதன் அங்கமாகக் காணப்பட்டது.
★ முன்னேற்றகரமான வர்த்தகமும் கைத்தொழிலும் நிலவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04) புராதன கால மனிதர்கள் எதிர்நோக்கிய பிரதானமான சவால் எது?**

★ வாழ்வதற்கு தேவையான உணவு, குடிபானங்களை உற்பத்தி செய்து கொள்வது பிரதான சவால் ஆகும்.

**05) புராதன கால இலங்கையர்களின் ஜீவனோபாயமாகக் காணப்பட்ட தொழில் எது?**

★ விவசாயம்

**06) விவசாயத்தின் இரு பிரிவுகளைக் குறிப்பிடுக?.**

★ பயிர்ச் செய்கை

★ மந்தை வளர்ப்பு

**07) பயிர்ச் செய்கைகளின் இருவகைகளையும், அதன் மறுபெயர் களையும் தருக?**

★ நெற்பயிர்ச்செய்கை :- நீர்ப்பாசனப் பயிர்ச்செய்கை
சேற்றுநிலப் பயிர்ச்செய்கை

★ சேனைப்பயிர்ச் செய்கை :- மேட்டுநிலப் பயிர்ச்செய்கை
மழை நீரை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கை




**சேனைப்பயிர்ச் செய்கை**

**08) சேனைப்பயிர்ச் செய்கையின் மறுபெயர்களைத் தருக?**

★ மேட்டுநிலப்பயிர்ச்செய்கை

★ மழை நீரை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச்செய்கை

**09) உலகின் புராதன விவசாய முறை எது?**

★ சேனைப்பயிர்ச்செய்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**10) சேனை என்றால் என்ன?**

★ சேனைப் பயிர்ச்செய்கையின் பொருட்டு காட்டை தீயிட்டு கொழுத்திய பின்னர் துப்பரவு செய்து பயன்படுத்திக் கொள்ளப்படும் நிலம், சேனை எனப்படும்.



நவதெளி சேனை நிலம்

**11) முற்காலத்தில் சேனைப்பயிர்ச் செய்கை எவ்வாறு அழைக்கப்பட்டது?**

★ உம்மக்க ஜாதக நூலில் :- "சேன்"
★ கல்வெட்டுக்களில் :- பிட்டபிம்
★ புத்சரண எனும் நூலில் :- செஹென்
★ அநுராதபுர விவசாயிகளால் :- கனத்த

**அறிந்து கொள்ளுங்கள்**
புத்சரண எனும் நூலை எழுதியவர்
வித்தியா சக்கரவர்த்தி

**12) சேனைச் செய்கைக்காக நிலம் தெரிவு செய்யப்படும் போது கவனத்தில் கொள்ளும் விடயங்கள் எவை?**

★ பெரும் காட்டு நிலப்பகுதியை தெரிவு செய்தல்.
★ அந்நிலம் விவசாயிகள் வாழும் பிரதேசத்திலிருந்து சற்றுத் தூரத்தினைக் கொண்டதாக இருத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**13) சேனை ஒன்றை உருவாக்கிக் கொண்டது தொடர்பாக கதை ஒன்றைக் கொண்டிருக்கும் நூல் எது?**

★ மகாவம்சம்

**14) மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் சேனை தொடர்பான கதையில் உள்ள விடயங்கள் எவை?**

★ காலம் :- காவந்திஸ்ஸ மன்னன் காலத்தில்

★ பிரதேசம் :- உருகுணை

★ குடியிருப்பு :- கிரி

★ கிராமம் :- நிசெல்விடிய

★ விடயம் :- சகோதரர்கள் ஐவர் ஒண்றிணைந்து காடு ஒன்றை சுத்திகரித்து உழுந்து பயிரிடுவதற்கு சேனை ஒன்றை உருவாக்கினார்கள்.

**15) சேனைப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளும் போது சேனைச் செய்கையாளர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை முறையாகக் குறிப்பிடுக.**

★ சேனைப்பயிர்ச் செய்கைக்கான நிலத்தை தெரிவு செய்து கொள்ளல்

★ குறித்த நிலப்பகுதியின் காட்டை அழித்து தீயிட்டுக் கொழுத்தி அதை சுத்திகரித்தல்.

★ மரம் மற்றும் அதன் அடிப்பகுதிகளை பொசுக்கி நிலத்தைப் பண்படுத்துதல்.

★ விலங்குகளிடமிருந்து சேனையைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

★ மழைகாலம் தொடங்கும் போது சேனைகளில் பயிரிட ஆரம்பித்தல்.

★ ஒரு முறையோ அல்லது இரு முறையோ விளைச்சலைப் பெற்றுக் கொண்ட பின்னர் சேனைகளைக் கைவிடுதல்

**16) நவதெளிசேனை என்றால் என்ன?**


★ சேனைப்பயிர்ச் செய்கைக்காக தீயிட்டு உருவாக்கப்பட்ட நிலப்பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17) **சேனைகளுக்கு இடையூறு விளைவிக்கும் விலங்குகளைக் குறிப்பிடுக?**


- ★ யானை
- ★ குரங்கு
- ★ பன்றி
- ★ முள்ளம் பன்றி
- ★ மான்
- ★ மரை



சேனைக்கு இடையூறு விளைவிக்கும் விலங்குகள்

18) **விவசாயிகள் சேனைப்பயிர்ச் செய்கையை பாதுகாக்க மேற் கொள்ளும் நடவடிக்கைகள் எவை?**

- ★ "தண்டுவெட்ட" எனப்படும் கம்புகளினாலான வேலியை அமைத்தல்.
- ★ பாதுாப்புக்குத் தீ மூட்டுதல்.
- ★ மரத்தின் கிளைகளில் "பெல" எனப்படும் பரன்கள் அமைத்தல்.
- ★ ஹெலிகடா எனப்படும் பானையைத் தலையாக கொண்ட வெருளியை நிர்மாணித்தல்.



'தண்டுவெட்ட' எனப்படும் கம்புகளினாலான வேலி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மரத்தின் கிளைகளில் 'பெல' எனப்படும் பரன்கள்



ஹெலிகடா எனப்படும் வெருளி



பாதுகாப்புக்குத் தீ மூட்டுதல்.

**19) மழைக்காலம்தொடங்கும்போது சேனைகளில் பயிரிடப்படும் பயிர்களைக் குறிப்பிடுக?**

- ★ உலர் தானியங்கள் :- திணை சாமை, குரக்கன்
- ★ மரக்கறிகள் :- கத்தரிக்காய், சுண்டக்காய், பூசணி, சாம்பல் வாழை.
- ★ கிழங்குவகைகள் :- வற்றாளை, சிறுகிழங்கு
- ★ ஏனையவை :- பயறு, இஞ்சி, கடுகு, கரைநெல், எள்ளு, பருத்திப்பஞ்சு, கரும்பு

**20) கரை நெல் எனப்படுவது யாது?**

- ★ சேனைகளில் பயிரிடப்படும் நெல் கரைநெல் எனப்படும்.

**21) துட்டகைமுனு மன்னனின் மகன் யார்?**

- ★ சாலிய குமாரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**22) துட்டகைமுனுவின் மகனுக்கு சாலிய குமாரன் என பெயர் சூட்டப்பட்டமைக்கான காரணம் யாது?**

★ அவர் பிறந்த காலத்தில் கரைநெல் பேரளவில் விளைந்தமையால் கரைநெல்லைக் குறிக்கும் "சாலி" எனும் சொல்லைக் கொண்டு அவருக்கு "சாலிய இளவரசன்" என பெயர் சூட்டப்பட்டது.

**23) மேற்குறிப்பிட்ட சம்பவத்திற்கு சான்று பகரும் இலக்கிய மூலாதாரம் எது?**

★ சீஹலவத்து எனும் நூல்

**24) கரைநெல்லைக் குறிப்பிடும் பிறிதொரு சொல் யாது?**

★ சாலி

**25) சேனைப்பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்படும் உபகரணங் களைக் குறிப்பிடுக?**

★ வீச்சரிவாள்

★ மண்வெட்டி

★ அரிவாள்

**26) சேனைப் பயிர்ச் செய்கையின் போது பயன்பாட்டிலிருந்த சொற்பிரயோகங்களையும் அதன் பொருளையும் குறிப்பிடுக?**

★ நவதெளிசேனை :- தீயிடப்பட்டு புதிதாக உருவாக்கப்பட்ட சேனை நிலம்

★ கினியாதிகாவ :- காடுகளுக்கு தீயிட முன்னர் விலங்குகளை விரட்டுவதற்காக எழுப்பப்படும் ஒலி

★ ஹெலிகடா :- பானையைத் தலையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட வெருளி.

**27) சேனைப்பயிர்ச் செய்கைக்காக விதிக்கப்பட்ட வரிகளைக் குறிப்பிடுக?**

★ கெதி அட

★ கெடு கனக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28) சேனைப்பயிர்ச் செய்கைக்கான விதிக்கப்பட்ட வரிகளை நீக்கிய மன்னன் யார்?**

★ நிஸங்கமல்லன்

**நெற்பயிர்ச் செய்கை**

**29) நெற்பயிர்ச் செய்கை வேறு எவ்வாறு அழைக்கப்படும்?**

★ சேற்று நிலப்பயிர்ச் செய்கை

★ நீர்ப்பாசனப் பயிர்ச் செய்கை

**30) சேற்றுநில விவசாயம், நீர்ப்பாசன பயிர்ச்செய்கை என அழைக்கப்பட்டமைக்கான காரணம் யாது?**

★ மழைநீரைத் தேக்கி குளங்களை உருவாக்கி அதிலிருந்து பெறப்படும் அல்லது விநியோகிக்கப்படும் நீரினை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படும் பயிர்ச் செய்கை என்பதால் நீர்ப்பாசனப் பயிர்ச் செய்கை எனப்பட்டது.



நெற்பயிர்ச்செய்கை

**31) குளங்களை மையமாகக் கொண்ட கிராமங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?**

★ குளக்கிராமம்

**32) புராதன கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படும் குளக்கிராமங்களின் நிர்வாகிகளைக் குறிப்பிடுக?**

★ வெவ்ஹமிக

★ வபி ஹமிக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**33) புராதன கால மன்னர்கள் பெருங்குளங்களைக் கட்டியமைக்கான காரணம் யாது?**

- ★ கிராமியக் குளங்களின் நீர் போதியதாக இல்லாமை.
- ★ சனத்தொகை அதிகரிப்பு.
- ★ நிச்சயமற்ற மழைவீழ்ச்சி
- ★ கிடைக்கப் பெற்ற மழைவீழ்ச்சி போதாமை.

**34) முதல்முதல் பாரிய குளங்களை அமைத்த மன்னன் யார்?**

- ★ வசபன்

**35) மின்னேரியாக் குளத்தை நிர்மாணித்தவர் யார்?**


- ★ மகாசேனன்

**36) மின்னேரியாத் தெய்வம் என அழைக்கப்பட்ட மன்னன் யார்?**

- ★ மகாசேனன்

**37) மகாசேன மன்னன் மின்னேரியாத் தெய்வம் என அழைக்கப் பட்டமைக்கான காரணம் யாது?**

- ★ மின்னேரியா போன்ற பாரிய குளங்களை நிர்மாணித்து மக்கள் நலனைப் பேணியமையால் அவ்வாறு அழைக்கப் பட்டார்.



மின்னேரி வாவி

**38) நெற்பயிர்ச் செய்கை பிரதானமாக மேற்கொள்ளப்படும் இரு போகங்களும் எவை?**

- ★ பெரும் போகம் (மகா போகம்)
- ★ சிறு போகம் (யால போகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**39) தோணிகலக் கல்வெட்டு குறிப்பிடும் முப்போகங்களையும் குறிப்பிடுக?**

- ★ பெரும் போகம் (அகலஹச)
- ★ இடைப்போகம் (மெதஹச)
- ★ சிறுபோகம் (பிடதடஹச)

**40) தோணிக்கல கல்வெட்டு எம் மன்னனால் நிர்மாணிக்கப்பட்டது?**


- ★ கீர்த்தி ஸ்ரீ மேவன்

**41) நெல் பயிரிடுவதற்கு விவசாயிகள் மேற்கொண்ட நடவடிக்கை களை முறையாகக் குறிப்பிடுக?**

- ★ நிலத்தைப் பண்படுத்துதல்.
- ★ விவசாயத்திற்குத் தேவையான நீரை தேக்கி வைத்து கொள்வதற்கும் முறையாக நீரை பாய்ச்சுவதற்கும் இயன்ற முறையில் விவசாயிகள் நிலத்தை வடிவமைத்துக் கொண்டனர்.

**42) நிலத்தை உழுதல் என்றால் என்ன?**

- ★ எருமை மாடுகளைப் பிணைத்து ஏருடன் பூட்டி பயிர்ச் செய்கைக்கு பொருத்தமான முறையில் நிலத்தைப் பண்படுத்திக் கொள்ளல் உழுதல் எனப்படும்.



நிலத்தை உழுதல்

**43) பரந்த அளவில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் இடம் எவ்வாறு அழைக்கப்படும்?**

- ★ கெத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**44) நெற்பயிர்ச் செய்கையை பாதுகாத்துக் கொள்வதற்கு மேற் கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் குறிப்பிடுக?**

★ வயலிலும் வரம்பிலும் இடத்துக்கிடம் தென்னோலைகளை நடுதல்.

★ எண்ணெயில் நனைக்கப்பட்ட திரிகளை எரித்தல்.

**45) நெற்பயிர்ச்சி செய்கையின் போது திரிகள் எரிக்கப்பட்டமைக்கான காரணத்தையும் முறையையும் தருக?**

★ முறை :- துணிகளைக் கிழித்து திரிகளாகத் திரித்து இலுப் பெண்ணையில் ஊறவைத்து காஞ்சிரைக் குச்சிகளில் கட்டி எரித்தல்.


★ காரணம் :- ஈக்களைக் கட்டுப்படுத்துவதற்காக

**46) நெற்பயிர்ச் செய்கையின் போது பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் எவை?**


★ ஏர்

★ மட்டப்பலகை


★ அரிவாள்




அரிவாள்



மண்வெட்டி



கத்தி



கோடரி

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**47) நெற்குதிர் எனப்படுவது யாது?**

★ சூடடிக்கப்பட்டு பிரித்தெடுக்கப்பட்ட நெல்லை பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்ட கருவி

**48) நெல் எந்தெந்த வகையில் பதப்படுத்தப்படுகின்றது?**

★ பச்சையரிசி

★ புளுங்கல் அரசி

**49) சேற்றுநிலப் பயிர்ச் செய்கையின் போது பயன்படுத்தப்பட்ட சொற்களையும் பொருளையும் குறிப்பிடுக?**

★ உட்பட்டிக்குவியல் :- அறுவடை செய்யப்பட்ட வேளாண்மையை குவியலாக அடுக்கி வைத்தல்.

★ சூடடித்தல் :- வேளாண்மையைக் குவித்து எருமை மாடுகளைக் கொண்டு மிதித்து நெல்லை வேறாக்கும் செயற்பாடு

★ களம் :- சூடடிக்கப் பயன்படும் இடம்



நெற்குதிர்



ஒன்றுபட்டு அறுவடையை மேற்கொள்ளல்

**விலங்கு வளர்ப்பு**

**50) விலங்கு வளர்ப்பு வேறு எவ்வாறு அழைக்கப்படும்?**

★ கால் நடை வளர்ப்பு

★ மந்தை வளர்ப்பு

**51) புராதன காலத்தில் மந்தை வளர்ப்பின் பொருட்டு வளர்க்கப்பட்ட விலங்குகளைக் குறிப்பிடுக?**

★ ஆடு

★ மாடு

★ பன்றி

★ கோழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**52) புராதன காலத்தில் மாடுகள் வளர்க்கப்பட்டமைக்கான நோக்கங்களைக் குறிப்பிடுக.**

★ உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய பாலைப் பெற்றுக் கொள்ளுதல்.

★ விவசாயத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளுதல்.

★ போக்குவரத்துத் தேவையைப் பூர்தி செய்வதற்கு.



சூடுமிதித்தல்



தவளம் எனப்படும் பொதிமாடுகள்

**53) பாலைப் பெற்றுக் கொள்வதற்காக வளர்க்கப்பட்ட பசு எவ்வாறு அழைக்கப்பட்டது?**

★ கிரிகெரி (நான்காம் காசியப்ப மன்னன் காலக் கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.)

**54) பசுவிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய பஞ்சரப் பொருட்களைக் குறிப்பிடுக?**

★ பால்

★ தயிர்

★ மோர்

★ வெண்ணெய்

★ நெய்

**55) பஞ்சரப் பொருட்கள் வேறு எவ்வாறு அழைக்கப்படும்?**

★ பஸ்கோரச

**56) மாட்டை வளர்ப்பவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்கள்?**

★ கோபாலகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**57) மாடு வளர்க்கும் கிராமம் எவ்வாறு அழைக்கப்படும்?**

★ கோபாலகம்

**58) கோபாலகர் கிராமம் தொடர்பாக மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் விடயம் யாது?**

★ பண்டுகாபய மன்னன் பிள்ளைப் பராயத்தில் சித்தன் எனப்படும் மாடு மேய்ப்பவனின் கிராமமான தொரமடாலாவ எனும் கிராமத்தில் வாழ்ந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

**59) போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும் மாடுகள் எவ்வாறு அழைக்கப்படும்?**

★ வண்டி மாடுகள்

**60) மாடுகளின் முதுகில் பொருட்கள் ஏற்றிச் செல்லும் முறை எவ்வாறு அழைக்கப்படும்?**

★ தவளம்

**கைத்தொழில்**

**61) புராதன இலங்கையில் காணப்பட்ட கைத்தொழிலின் வகைகளைக் குறிப்பிடுக?**

★ உலோகக் கைத்தொழில்

★ மட்பாண்டக் கைத்தொழில்

★ நெசவுக் கைத்தொழில்

★ கரும்புக் கைத்தொழில்

★ தந்தச் செதுக்கல் கைத்தொழில்

**62) உலோகக் கைத்தொழில் மேற்கொள்ளப்பட்ட உலோகவகைகள் எவை?**

★ இரும்பு

★ தங்கம்

★ வெள்ளி

★ செப்பு

**63) இரும்புக் கைத்தொழில் செய்யும் கைவினைக் கலைஞர்களை எவ்வாறு அழைப்பர்?**


★ லோகுரு / கபர (கம்மாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**64) இரும்புக் கைத்தொழிலினூடாக உற்பத்தி செய்யப்பட்ட உபகரணங்கள் எவை?**

* ★ மண்வெட்டி
* ★ கத்தி
* ★ கோடரி
* ★ அரிவாள்
* ★ ஏர்
* ★ கேடயம்
* ★ ஈட்டி
* ★ அம்பு



இரும்பை உருக்கும் சூளை



இரஜகலையில் கண்டெடுக்கப்பட்ட புராதன இரும்பு ஆணிகள்

**65) முற்காலத்தில் உலோகங்களினூடாக உற்பத்தி செய்யப்பட்ட ஆபரணங்கள் எவை?**

* ★ மாலை
* ★ வளையம்
* ★ தோடு
* ★ நெற்றிப்பட்டம்

Arasady Public Library
Municipal Council
Batticaloa.

**66) செப்புத்தொழில் செய்வோர் எவ்வாறு அழைக்கப்படுவர்?**

* ★ ரன்கருவன்

**67) மட்பாண்டங்கள் செய்வோர் முற்காலத்தில் எவ்வாறு அழைக்கப்படுவர்?**

* ★ கும்பகார அல்லது
* ★ கும்பல்லு அல்லது
* ★ குயவர்

Class No: 900
Acc No 308




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**68) மட்பாண்டக் கைத்தொழிலினூடாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைக் குறிப்பிடுக?**

- ★ ஓடு
- ★ மட்பாத்திரங்கள்
- ★ செங்கல்



மட்பாண்ட உற்பத்தி



மட்பாண்டம்

**69) கரும்புக் கைத்தொழிலினூடாக உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திப் பொருட்கள் எவை?**

- ★ பாணி
- ★ கருப்பட்டி
- ★ சீனி

**70) நெசவுக் கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டார்கள்?**

- ★ பெஹெகார

**71) இரத்தினக்கல் பட்டை தீட்டுவோர் எவ்வாறு அழைக்கப்பட்டார்கள்?**

- ★ மணிகார

**72) விஜயன் வருகையின் போது இங்கு நெசவுத்தொழில் இருந்தமைக்கான சான்று எது?**

- ★ விஜயன் வருகையின் போது குவேனி நூல் நூற்றுக் கொண்டிருந்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**73) முற்காலத்தில் வர்த்தகம் மேற்கொள்ளப்பட்ட விதங்கள் எவை?**

★ உள்நாட்டு வர்த்தகம்

★ வெளிநாட்டு வர்த்தகம்

**74) புராதன காலத்தில் உள்நாட்டு வர்த்தகம் எம்முறையில் மேற்கொள்ளப்பட்டது?**

★ பண்டமாற்றுப் பொருளாதார முறையில்

**75) பண்டமாற்றுப் பொருளாதாரம் என்றால் என்ன?**

★ பொருட்களைக் கொடுத்து பொருட்களை பெறுவது பண்டமாற்று பொருளாதாரம் எனப்படும்.

**76) முற்காலத்தில் வர்த்தகத்தின் ஊடாக விருத்தி அடைந்த நகரங்களைக் குறிப்பிடுக?**

★ அநுராதபுரம்

★ மகாகம

**77) முற்காலத்தில் வணிக நகரங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?**

★ நிகம் அல்லது நியம்கம

**78) வர்த்தகத்தில் ஈடுபடும் கூட்டத்தினர் எவ்வாறு அழைக்கப்படுவர்?**

★ வணிக அல்லது வாபர

**79) முற்காலத்தில் செயற்பட்ட வர்த்தக அமைப்புக்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?**

★ புக அல்லது புகய

**80) முற்காலத்தில் இலங்கையில் செயற்பட்ட தென்னிந்திய வர்த்தக அமைப்புக்களைக் குறிப்பிடுக?**

★ நானாதேசிக

★ வலஞ்சியர்

★ ஐந்நூற்றுவர்

**81) முற்காலத்தில் வணிக கிராமங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?**

★ பட்டணகம / படுன்கம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**82) முற்காலத்தில் நகரங்களிலுள்ள கடைகளில் விற்கப்பட்டிருந்த பொருட்கள் சிலவற்றைக் குறிப்பிடுக?**

★ மட்பாண்டங்கள்

★ புடவைகள்

★ அணிகலன்கள்

★ உணவு

★ குடிபானம்

**83) மகாகமவில் இருந்து அநுராதபுரத்திற்கு வந்து வாசனைத் திரவியங்களை வாங்கியதாக குறிப்பிடப்படும் நபர் யார்?**

★ மாமல்லன் சுரநிமல

**84) பதுளைத் தூண் கல்வெட்டில் குறிப்பிடப்படும் சந்தை நிர்வாகம் தொடர்பான சட்டங்களைக் குறிப்பிடுக?**

★ சந்தைக்கும் கொண்டு வரும் பொருட்களை இடைவழியில் சென்று கொள்வனவு செய்யக்கூடாது.

★ அனுமதி பெறாத தராசுகள், படிகளை பயன்படுத்தக் கூடாது.

★ வெற்றிலை, பாக்கு என்பவற்றை குறிப்பிட்ட மட்பாண்டங்களினுள் வைத்து விற்க வேண்டும்.

★ சந்தைக்கு கொண்டு வரும் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டால் அன்றி அதை சந்தைக்குக் குறுக்காகக் கொண்டு சென்றால் வரி அறவிடல் தவிர்த்தல் வேண்டும்.

**85) புராதன கால சந்தை முறையாக நிர்வகிக்கப்பட்டது என்பதற்கான சட்டங்களை வெளிப்படுத்தும் கல்வெட்டு எது?**

★ 4ம் உதயமன்னனின் கல்வெட்டு (சில நூல்களில் 3ம் உதயன் எனக் குறிப்பிடப்படுகின்றது.)

★ பதுளை தூண் கல்வெட்டு அல்லது ஹோபிட்டிகம தூண் கல்வெட்டு அல்லது சொர பொர வாவிக் கல்வெட்டு

**86) ஆரம்பகார இலங்கையில் உள்நாட்டு வர்த்தகம் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டமைக்கான ஆதாரங்களைக் குறிப்பிடுக?**

★ வர்த்தக நகரங்கள் காணப்பட்டமை.

★ உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைப்புகள் காணப் பட்டமை.

★ வணிக கிராமங்கள் காணப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ ஹோபிட்டிக்கம சந்தை தொடர்பான விடயங்கள் காணப் பட்டமை.
★ அநுராதபுரத்தின் தெற்குவாயிலின் அருகே கால சுமண, எனும் வர்த்தக சந்தை காணப்பட்டமை.
★ மிகிந்தலையில் குண்டலினி எனும் சந்தை காணப்பட்டமை.

**87) புராதன காலத்தில் இலங்கை வெளிநாடுகளுடன் வெற்றிகரமான வர்த்தக தொடர்பை கொண்டிருப்பதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகளைக் குறிப்பிடுக?**

★ இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்திருந்தமை.
★ கிழக்கு, மேற்கு வர்த்தகப் பாதையின் மத்தியில் இலங்கை அமைந்திருந்தமை.
★ இலங்கை பல்வேறுபட்ட துறைமுகங்களைக் கொண்டிருந்தமை.
★ இலங்கை பெறுமதி வாய்ந்த வர்த்தகப் பொருட்களையும் வாசனைத்திரவியங்களையும் கொண்டிருந்தமை.

**88) இலங்கையுடன் முற்காலத்தில் வர்த்தகத் தொடர்பினைக் கொண்டிருந்த வெளிநாடுகளைக் குறிப்பிடுக?**

★ இந்தியா
★ சீனா
★ உரோம்
★ பாரசீகம்
★ அரேபியா
★ தென்கிழக்காசிய நாடுகள் (பர்மா, தாய்லாந்து)

**89) முற்காலத்தில் இலங்கையில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களைக் குறிப்பிடுக?**

★ யானைத்தந்தம்
★ முத்து
★ இரத்தினக்கல்
★ வாசனைத்திரவியங்கள்
★ மருந்துவகைகள்
★ பெறுமதிவாய்ந்த மரங்கள்
★ யானை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**90) முற்காலத்தில் இலங்கை இரத்தினக்கற்களுக்கு பிரசித்தி பெற்று இருந்தமையால் எவ்வாறு அழைக்கப்பட்டது?**

★ இரத்தினதுவீபம்

**91) முற்காலத்தில் வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் எவை?**


★ பீங்கான்
★ பட்டுத்துணி
★ நறுமணப்பொருட்கள்
★ குதிரை

**92) முற்காலத்தில் இலங்கையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் பிரசித்திபெற்றிருந்த துறைமுகங்களைக் குறிப்பிடுக?**


★ மாதோட்டம் (மாந்தை, மன்னார்)
★ கோகர்ண (திருகோணமலை)
★ கொடவாய (அம்பாந்தோட்டை)

**93) முற்காலத்தில் இலங்கை வெளிநாடுகளுடன் வர்த்தக உறவை மேற்கொண்டிருந்தமைக்கான சான்றுகளைக் குறிப்பிடுக?**

★ இலங்கையில் பல்வேறுபட்ட வெளிநாட்டு நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை.
★ பாதிகாபய மன்னன் ரூவன் வெலிசாயவை அலங்கரிப்பதற்காக உரோமாபுரியிலிருந்து கண்ணாடி மணிகளைப் பெற்றுக் கொண்டுவர தூதுவர்களை அனுப்பியமை.
★ இந்தியா, பாரசீகம் போன்ற நாடுகளின் கப்பல்கள் இலங்கைக்கு வந்து போனதாக குறிப்பிடப்படுகிறது.
★ இலங்கைக்கு சொந்தமான கப்பல்கள் சீனத்துறைமுகங்களில் காணப்பட்டதாக அவ் நாட்டு மூலாதாரங்களில் குறிப்பிடப்படுகிறது.




சீன மட்பாண்டங்கள்



சீன நாணயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முற்காலத்தில் இலங்கையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் பிரசித்திபெற்றிருந்த துறைமுகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**94) இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தை நிர்வாகிப்பதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரிகளைக் குறிப்பிடுக?**

★ சுங்க அதிகாரிகள்

**95) சுங்க அதிகாரிகளின் கடமைகளைக் குறிப்பிடுக?**


★ கப்பல்களிலிருந்து தீர்வை (வரி) அறவிடுதல்

**96) இலங்கை துறைமுகத்தில் சுங்கவரிகள் அறவிடப்பட்டமைக்கான சான்று எங்கு காணப்படுகிறது?**

★ கொடவாய

**ஹஸ் எபு கஹபண நாணயம்**

★ இலங்கையில் பயன்படுத்தப்பட்ட முதல் நாணயம்.
★ இது 2000 ஆண்டுகளுக்கு முன்னர் பயன்பாட்டிலிருந்தது.
★ இந் நாணயம் வெள்ளி உலோகத்தினைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.
★ இந் நாணயத்தில் மரம் யானை சூரியன் எனும் குறியீடுகள் காணப்படுகின்றது.
★ அம்பாறை ரஜகல பிரதேச ஆய்வின் போது இந்நாணயம் இனங்காணப்பட்டது.



ஹஸ் எபு கஹபண நாணயம்

**கலாச்சாரம்**

**97) இலங்கையில் வாழும் மக்கள் குழுக்களை அல்லது இனங்களை தருக?**

★ தமிழர்
★ முஸ்லீம்
★ சிங்களவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**98) எமது நாடு பன்மைக் கலாசாரப் பண்புகளை கொண்டிருந்தமைக்கான காரணம்?**

★ எமது நாட்டில் வெவ்வேறு கலாசாரங்களைக் கொண்ட மக்கள் குழுக்கள் வாழ்ந்தமையினால் எமது நாடு பன்மைக் கலாசாரங்களைக் கொண்டிருந்தது.

**99) கலாசாரம் என்றால் என்ன?**

★ குறிப்பிட்டதொரு சமூகத்தில் வாழ்கின்ற மக்கள் குழுவினரின் நடத்தை, நம்பிக்கைகள், சமூகப்பழக்கங்கள், ஆடை ஆபரணங்கள், உணவுப் பழக்கங்கள், விழுமியங்கள், இரசனைகள் ஆகிய பண்புகளின் ஒன்றிணைவே கலாசாரம் எனப்படும்.

**100) பௌத்த சமயம் எம்மன்னன் காலத்தில் இலங்கையில் அறிமுகமானது?**

★ தேவநம்பியதீசன்

**101) பௌத்த சமயம் இலங்கையில் அறிமுகமானதால் இலங்கை சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?**

★ முறையானதொரு சமயம் அறிமுகமானமை

★ சமூகத்திற்கு ஒழுக்கமும் போதனையும் கிடைக்கப் பெற்றமை.

★ ஒருவருக்கொருவர் உதவி புரியும் அன்னியோன்னியமான வாழ்வு முறை வளர்ச்சி பெற்றமை.

★ பொதுப்பணிகளில் ஒற்றுமையுடன் ஒன்றுபட்டு செயற்படும் முறை ஆரம்பமானமை.

**அத்தம் முறை**

**102) அத்தம் முறை என்றால் என்ன?**

★ உழைப்புக்கு உழைப்பு பரிமாறிக் கொள்ளும் முறை

**103) அத்தம் முறையினால் கிடைக்கப்பெற்ற நன்மைகள் எவை?**

★ ஒருவரோடு ஒருவர் நட்புறவுடனும் ஒத்துழைப்புடனும் உதவி புரிந்து வாழும் பண்பு வளர்ச்சியுற்றமை.

★ விவசாயத்திற்குத் தேவையான தொழில்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தமை.

★ ஏனையோர் புரிந்த உதவிக்கு பதிலுதவி புரியும் மனப்பாங்கு வளர்ச்சியுற்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**104) அநுராதபுர காலத்தில் மன்னர்களும் விவசாயத்தில் ஈடுபட்டமைக்கான சான்றுகளைக் குறிப்பிடுக?**

★ அநுராதபுரத்தை ஆண்ட மகாசூலி மகாதிஸ்ஸ மன்னன் விவசாயியாக வேடம் பூண்டு வயலொன்றில் அறுவடை செய்ததாக மகாவம்சம் குறிப்பிடுகிறது.

## திருமணம்

**105) புராதன சமூகத்தில் திருமணம் மேற்கொள்ளப்பட்ட முறைகளைக் குறிப்பிடுக?**

★ புராதன சமூகத்தில் திருமணம் என்பது கௌரவமான தொன்றாகக் காணப்பட்டது.

★ குடும்பத்திற்கும் குலத்திற்கும் பொருத்தமான முறையில் திருமணம் மேற்கொள்ளப்பட்டது.

★ பெற்றோரின் விருப்புடனும் ஆசீர்வாதத்துடனுமே திருமணம் மேற்கொள்ளப்பட்டது.

★ சம்பிரதாயங்கள், மரபுகளுக்கு அமைவாக திருமணம் மேற்கொள்ளப்பட்டது.

★ எளிமையான முறையிலும், கௌரவமான முறையிலும் திருமணம் மேற்கொள்ளப்பட்டது.

**106) புராதன சமூகத்தில் பெண்கள் பெற்ற முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக?**

★ சாலிய இளவரசனின் மனைவியான அசோகமாலா சுவையான உணவு சமைத்ததாக சத்தர் மாலங்கார எனும் நூலில் குறிப்பிடப்படுகிறது.

★ சமையல் கலையில் சிறந்து விளங்கிய பெண்களை மதுபாச்சிகா என அழைத்தமை.

## மரணச்சடங்கு

**107) புராதனகாலத்தில் நிலவிய மரணச்சடங்கு முறைகளைக் குறிப்பிடுக?**

★ இறுதிக்கிரியைகளை மேற்கொள்ளுதல்.

★ அஸ்தியைப் புதைத்தல்

★ சடலங்களை காட்டிலுள்ள கல்லறையில் வைத்தல்.

★ மரண ஊர்வலங்கள் வழிபாட்டுத் தலங்களின் முன்னால் அமைதியாகச் செல்லல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**108) மரணச்சடங்கு தொடர்பாக மகாவம்சம் வெளிப்படுத்தும் விடயங்களைக் குறிப்பிடுக?**

★ பண்டுகாபய மன்னன் காலத்தில் பிணங்களை எடுத்துச் செல்வதற்காக 150 பேர் புலையர்களாக நியமிக்கப்பட்டனர்.

★ சூத்திரர்களுக்கென்று தனியாக மயானங்கள் இருந்தமை.

## பழக்கவழக்கங்களும் பண்பாடும்.

**109) தனது தாயாருக்கு பணி விடைகள் புரிந்ததாக மகாவம்சத்தால் குறிப்பிடப்படும் மன்னன் யார்?**

★ 8ம் அக்கபோதி

**110) 8ம் அக்கபோதி மன்னர் தனது தாயாருக்கு புரிந்த பணி விடைகளைக் குறிப்பிடுக?**

★ தலைக்கு எண்ணெய் தடவி, முடியைச்சீவி, வியர்வை துடைத்து வாசனைத் திரவியங்களைப் பூசி, நகத்தைச் சுத்திகரித்து, விரல்களை சுத்திகரித்து அவரை ஆறுதல்படுத்தியமை.

★ தனது தாயாருக்கு சௌகரியமான ஆடை அணிவித்து தனது கைகளாலேயே தனது தாயாரின் துணிகளைக் கழுவியமை.

**111) புராதன கால மக்களின் பழக்கவழக்கங்கள் எவை?**

★ தமது கடமைகளில் பொறுப்புடன் செயற்படுதல்.

★ மூத்தோரை மதித்தல்.

★ மூத்தோர்களைக் கௌரவித்தல்.


★ தாய்மாரைக் கவனித்தல்.

★ சமயப் போதனைகளுக்கு அமைவாக வாழ்க்கைகளை நடாத்துதல்.

★ தான தர்மங்களைப் புரிதல்.

★ நல்ல குடிமக்களாக வாழ்தல்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) சேனைப்பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய புராதன முறை எது?
i. விவசாயம் ii. கைத்தொழில்
iii. வர்த்தகம் iv. பாதுகாப்பு

02) மேட்டுநில பயிர்ச்செய்கை என்று அழைக்கப்படுவது யாது?
i. நெற்பயிர்செய்கை ii. சேனைப்பயிர்ச் செய்கை
iii. சேற்றுநிலப் பயிர்ச்செய்கை iv. படிக்கட்டு பயிர்ச்செய்கை

03) காவந்தீச மன்னன் காலத்தில் சேனைப்பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டமை பற்றி ஆதாரங்கள் கூறும் நூல்?
i. மகாவம்சம் ii. தீபவம்சம்
iii. சூளவம்சம் iv. ஜாதகநூல்

04) காடுகளுக்கு தீயிடமுன்னர் அங்குள்ள விலங்குகளை விரட்ட பயன்டுத்திய ஒலி எது?
i. நவதெனிசேனை ii. கெலிகட
iii. கினியாதிகாவ iv. வெப்ஹமிக

05) நெற்ப்பயிர்செய்கையின் போகங்கள் பற்றி கூறும் கல்வெட்டு?
i. கல்பொத்த கல்வெட்டு
ii. தோணிக்கல பாறைக்கல்வெட்டு
iii. வெஸ்ஸகிரிய கல்வெட்டு
iv. பனாகடுவ செப்பேடு

06) "அஹலகச" என அழைக்கப்படும் போகம் யாது?
i. சிறுபோகம் ii. இடைப்போகம்
iii. பெரும்போகம் iv. மெதகச

07) சேனைப்பயிர்ச்செய்கையில் குறிப்பிடப்பட்ட நெல் எவ்வாறு குறிப்பிடப்பட்டது?
i. காட்டுநெல் ii. மேட்டுநெல்
iii. தரைநெல் iv. கரைநெல்

08) சாலிய குமாரன் யாருடைய மகன்?
i. பராக்கிரமபாகு ii. பண்டுகாபயன்
iii. துட்டகைமுனு iv. வசபன்

09) குளக்கிராமங்களை அமைத்தவர்களை குறிக்கும் பதம்?
i. கிராமிக ii. வெவ்கமிக
iii. அரசன் iv. பிக்குமார்

10) மின்னேரியா வாவியை உருவாக்கிய மன்னன்?
i. விமலதர்மசூரியன் ii. 1ம் பராக்கிரமபாகு
iii. மகாசேனன் iv. காவந்தீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) பால்மாடுகள் எவ்வாறு குறிப்பிப்பட்டன?
i. கிரிகெரி ii. தீகிரி
iii. பஸ்கோரச iv. கிரிபத்

12) இலங்கையில் முதலில் பாவணையில் இருந்த நாணயம்?
i. கஸஎபு கஹபண ii. வெள்ளி நாணயம்
iii. செப்பு நாணயம் iv. தங்க நாணயம்

13) முன்னைய காலத்தில் வணிக நகரங்களாக இருந்தவை யாவை?
i. கண்டி, யாழ்ப்பாணம் ii. பொலநறுவை, அநுராதபுரம்
iii. அநுராதபுரம், தம்பதெனியா iv. மாகம, அநுராதபுரம்

14) "புக" என்று குறிப்பிடப்பட்ட அமைப்பு எது?
i. நிர்வாக அமைப்பு ii. அரசசபை
iii. வர்த்தக அமைப்பு iv. நீதித்துறை

15) பதுளை தூண் கல்வெட்டை உருவாக்கிய மன்னன்?
i. வசபன் ii. 4ம் உதயமன்னன்
iii. இராஜசிங்கன் iv. காசியப்பன்

16) சுரநிமல எனும் மன்னன் எப் பிரதேசத்தை சேர்ந்தவன்?
i. மாகம ii. மஹியங்களை
iii. பொலநறுவை iv. அநுராதபுரம்

17) வெளிநாட்டு வியாபாரத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த துறைமுகங்கள் எது?
i. மன்னார், திருகோணமலை, அநுராதபுரம்
ii. பொலநறுவை, வன்னி, வவுனியா
iii. மன்னார், அம்பாந்தோட்டை, திருகோணமலை
iv. அம்பாந்தோட்டை, திருகோணமலை, கொழும்பு

18) பாதிகாபய மன்னன் கண்ணாடி பளிங்குகளை பெற்றுக்கொண்ட இடம் எது?
i. கொழும்பு ii. உரோமாபுரி
iii. அநுராதபுரம் iv. பிரான்ஸ்

19) இரும்பு தொழில் செய்வோர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
i. துலாதார ii. குயவர்
iii. கொல்லர் iv. நெசவாளர்

20) விவசாயியாக வேடம் பூண்ட மன்னன் யார்?
i. மகாதிஸ்ஸ மன்னன்
ii. தேவநம்பியதீசன்
iii. பண்டுகாபயன்
iv. வசபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21) சமயல் கலையில் சிறப்பாக விளங்கிய பெண்கள் கல்வெட்டு மூலாதாரங்களில் எவ்வாறு சிறப்பிக்கப்பட்டனர்?
i. அரசி ii. பதுப்பாச்சிகா
iii. பிக்குணி iv. பணிப்பெண்

22) இலங்கை ஆரம்ப காலத்தில் வர்த்தக தொடர்பை மேற்கொண்ட நாடுகள்?
i. இந்தியா, சீனா, மடகஸ்கார்
ii. கிரேக்கம், இத்தாலி, பிரித்தானியா
iii. சீனா, பாரசீகம், கிரேக்கம்
iv. பாரசீகம், பர்மா, சிங்கப்பூர்

23) சேனைப்பயிர்ச் செய்கையை "சேன்" என்று குறிப்பிடும் நூல் யாது?
i. உம்மக்க ஜாதக நூல் ii. ராஜவலிய
iii. மகாவம்சம் iv. பூஜாவலிய

24) தீயிடப்பட்ட காணி அழைக்கப்பட்ட விதம்?
i. பிட்டபிம் ii. நவதெனி
iii. பரண் iv. காணி

25) பசுவில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட உணவுகள் எவ்வாறு அழைக்கப்பட்டது?
i. போசனை பொருட்கள் ii. பஸ்கோரச
iii. அத்சுணு iv. அமுது

26) தவளம் முறையுடன் தொடர்புடைய விலங்கு எது?
i. பன்றி ii. எருமை
iii. மாடு iv. புலி

27) சூடிக்கப் பயன்படும் இடத்தின் பெயர் யாது?
i. களம் ii. குடிசை
iii. தொட்டி iv. வயல்

28) கும்பகார என குறிப்பிடப்பட்ட கைத்தொழில் செய்யும் நபர் யார்?
i. இரத்தினக்கல் அகழ்வோர்
ii. மட்பாண்டம் செய்வோர்
iii. இரும்பு தொழில் செய்வோர்
iv. விலங்கு வேளாண்மையில் ஈடுபடுவோர்.

29) சுங்கத்தீர்வை அறவிடும் அதிகாரிகள் அழைக்கப்பட்ட விதம்?
i. சுங்க அதிகாரி
ii. கம்மாளர்
iii. நெசவாளர்
iv. குயவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30) எட்டாம் அக்கபோதி மன்னனின் பணிவிடைகள் பற்றி கூறும் நூல்?

i. தாதுவம்சம் ii. மகாவம்சம்

iii. சூளவம்சம் iv. தீபவம்சம்

31) இலங்கைக்கு சொந்தமான கப்பல்கள் காணப்படுவதாக மூலாதாரங்களில் குறிப்பிடப்படும் துறைமுகம் எது?

i. திருகோணமலை துறைமுகம்

ii. காங்கேசன் துறைமுகம்

iii. சீனத்துறைமுகம்

iv. லங்காப்பட்டினம்

32) பண்டுகாபயமன்னன் காலத்தில் பிணங்களை எடுத்து செல்வதற்க்கு நியமிக்கப்பட்டவர்கள் யார்?

i. புலையர்கள் ii. உறவினர்கள்

iii. பணியாளர்கள் iv. படைவீரர்கள்

33) உலகின் புராதன விவசாய முறையாக காணப்படுவது எது?

i. மந்தைவளர்ப்பு ii. நெற்பயிர்ச்செய்கை

iii. சேனைப்பயிர்ச்செய்கை iv. வீட்டுத் தோட்டம்

34) மகாசேனன் "மின்னேரியா தெய்வம்" என அழைக்கப் படுவதற்கான பிரதான காரணம் யாது?

i. விகாரைகள் அமைத்தமையால்

ii. வர்த்தகத்தில் பணியாற்றியமையால்

iii. அரசபணிகள், சமூகப்பணிகள் மேற்கொண்டமையால்

iv. நீர்ப்பாசனத் துறைக்கு புரிந்த பணிகளால்

35) பண்டுகாபயமன்னன் சிறுவயதில் வாழ்ந்த கிராமம் எது?

i. தொரமடலாவ ii. கசீகாரகம

iii. மாகம iv. பட்டாணகம

36) பண்டமாற்று முறை எனப்படுவது யாது?

i. பொருட்களுக்கு பதிலாக பொருட்களை கொடுப்பது

ii. பணத்திற்குப்பதிலாக பொருட்களை கொடுப்பது

iii. பொருட்களை இலவசமாக கொடுக்கும் முறை

iv. காசுக்குப் பதிலாக பொருட்களை கொடுப்பது

37) "நிகம்" என குறிப்பிடப்படுவது எது?

i. குளக்கிராமங்கள் ii. வணிக நகரங்கள்

iii. சேனை நிலங்கள் iv. பண்டைய கிராமங்கள்

38) "கொடவாய" என அழைக்கப்படும் இடம் எது?

i. மன்னார் ii. அநுராதபுரம்

iii. அம்பாறை iv. அம்பாந்தோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39) "இரத்தினதுவீபம்" என அழைக்கப்படும் நாடு எது?
   i. இந்தியா   ii. இலங்கை
   iii. இத்தாலி   iv. சீனா
40) அத்தம் முறை என்றால் என்ன?
   i. விவசாயத்தில் உள்ள ஒரு முறை
   ii. குளங்கள் அமைக்கும் படிமுறை
   iii. உழைப்புக்கு உழைப்பை பரிமாற்றி கொள்வது
   iv. அரசன் ஆட்சி செய்யும் முறை பற்றியது.

**பின்வரும் வினாக்களுக்கு சரி (✓) பிழை (X) இடுக**

41) முப்போகங்களில் "மெதஹஸ" எனும் போகம் சிறுபோகத்தை குறிக்கின்றது ( )
42) முற்கால இலங்கையில் வர்த்தகம் இரண்டு விதமாக நடைபெற்றது. ( )
43) ரூபன்வெலிசாய தாதுகோபத்தின் அலங்காரத்தில் ஈடுபட்ட மன்னன் 1ம் பராக்கிரமபாகு மன்னன் ஆகும். ( )
44) தேவநம்பியதீசனின் காலத்தில் இந்து சமயம் அறிமுகமானது ( )
45) இலங்கை ஆரம்பகாலத்தில் இருந்தே வெளிநாடுகளுடன் வர்த்தக தொடர்பில் ஈடுபட்டது ( )

**இடைவெளி நிரப்புக**

46) ஆதிகாலத்திலிருந்தே ..................... பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.
47) முற்காலத்திலல் சமையல்கலையில் சிறப்பு பெற்ற பெண்கள் ..................... என்று குறிப்பிடப்பட்டுள்ளனர்.
48) விவசாயியாக வேடம் பூண்ட அநுராதபுர மன்னன் ..................... ஆவான்.
49) இலங்கை நாடானது ..................... மத்தியில் அமைந்துள்ளது.
50) ஹோபிட்டிகம சந்தையுடன் தொடர்புடைய மன்னன் ..................... ஆவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 1 | 2) | 2 | 3) | 1 | 4) | 3 | 5) | 2 |
| 6) | 3 | 7) | 4 | 8) | 3 | 9) | 2 | 10) | 3 |
| 11) | 1 | 12) | 1 | 13) | 4 | 14) | 3 | 15) | 2 |
| 16) | 1 | 17) | 3 | 18) | 2 | 19) | 3 | 20) | 1 |
| 21) | 2 | 22) | 3 | 23) | 1 | 24) | 2 | 25) | 2 |
| 26) | 3 | 27) | 1 | 28) | 2 | 29) | 1 | 30) | 2 |
| 31) | 3 | 32) | 1 | 33) | 3 | 34) | 4 | 35) | 1 |
| 36) | 1 | 37) | 2 | 38) | 4 | 39) | 2 | 40) | 3 |
| 41) | ✗ | 42) | ✓ | 43) | ✗ | 44) | ✗ | 45) | ✓ |


46) சேனைப்பயிர்ச் செய்கை 47) மதுப்பாச்சிகா

48) மகாதிஸ்ஸ மன்னன் 49) இந்துசமுத்திரம்

50) 4ம் உதயமன்னன்.



புராதனகால வெளிநாட்டு நாணயங்கள்



மகிந்ததேரரின் வருகையைச் சித்திரிக்கும் ஓவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு 02

# எமது கீர்த்தி மிக்க அரசர்கள்.

**அறிமுகம்**

அநுராதபுர காலத்தின் முற்பகுதியில் எமது நாட்டிலிருந்த சிறந்த ஆட்சியாளர்களை தரம் 06 இல் கற்றதைத் தொடர்ந்து அநுராதபுர காலத்தின் இறுதிப்பகுதியிலும் மற்றும் பொலன்னறுவைக் காலத்திலும் எமது நாட்டின் நலன் கருதி பணியாற்றிய மன்னர்களை இங்கு நோக்குவோம்.

**01) அநுராதபுர காலத்தின் நீண்டகாலம் ஆட்சி செய்த அரச வம்சங்கள் எவை?**

★ இலம்பகர்ண வம்சம்

★ மோரிய வம்சம்

**02) வசபன் எவ் வம்சத்தைச் சேர்ந்தவன்?**

★ இலம்பகர்ண வம்சம்

**03) தாதுசேனன் எவ் வம்சத்தைச் சேர்ந்தவன்?**

★ மோரிய வம்சம்

**04) இலம்பகர்ண மற்றும் மோரிய வம்சங்களிடையே மோதல் நிலவிய கால கட்டங்களில் அவதானிக்கக்கூடிய அரசியல் இயல்புகளைக் குறிப்பிடுக?**

★ உள்நாட்டு மோதல்கள் காரணமாக நாட்டில் நிலையான ஆட்சியின்மை.

★ போர் காரணமாக நாட்டின் செல்வம் பெருமளவில் அழிவுற்றமை.

★ ஆட்சி அதிகாரத்தைப் பெறும் பொருட்டு இலம்பகர்ண, மோரிய வம்சத் தலைவர்கள் தென்னிந்தியப் படைகளை வரவழைத்தமை.

★ அரசியல் மோதல்கள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**05) மானவர்மன் அரசனாவதற்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னரி லிருந்து அரசியல் ரீதியாக மோதிக் கொண்ட வம்சங்கள் எவை?**

★ மோரிய வம்சம்
★ இலம்பகர்ண வம்சம்

**06) 2ம் காசியப்பன் எத்தனையாம் ஆண்டளவில் ஆட்சிக்கு வந்து எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்?**

★ கி.பி 650 ஆண்டளவில் ஆட்சிக்கு வந்தான்.
★ 9 ஆண்டுகள் ஆட்சி செய்து இறுதியில் நோயினால் மரணமடைந்தான்.

**இலம்பகர்ண வம்சத்து மன்னர்கள் ஒரு சிலர்**

★ வசபன்
★ கஜபாகு
★ வொகாரிக தீசன்
★ ஸ்ரீ சங்கபோதி

**மோரிய வம்சத்து மன்னர்கள் ஒரு சிலர்**

★ தாதுசேனன்
★ காசியப்பன்

**மானவர்ம மன்னன்**

★ ஆட்சிக்காலம் :- கி.பி 684 - 718
★ ஆட்சி ஆண்டுகள் :- 35 ஆண்டுகள்
★ தந்தை :- இரண்டாம் காசியப்பன்
★ மனைவி :- சங்காதேவி
★ தஞ்சமடைந்தது :- இந்தியாவின் பல்லவ அரசிடம்
★ தஞ்சம் வழங்கிய ஆட்சியாளர் :- 1ம் நரசிங்க வர்மன்
★ இவனுக்கு எதிராகப் போர் தொடுத்தது :- 2ம்தாடோபதீசன்

**07) மானவர்ம மன்னன் இந்தியாவுக்குத் தப்பி ஓடியமைக்கான காரணம் யாது?**

★ 2ம் தாடோபதீசன் மானவர்மனை தேடிக் கொண்டிருந்ததால் இந்தியாவுக்குத் தப்பி ஓடி பல்லவ மன்னன் 1ம் நரசிங்க வர்மனிடம் தஞ்சமடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08) மானவர்ம மன்னனுக்கு ஆதரவாக நரசிங்கவர்மன் படை அனுப்பியமைக்கான காரணம்?**

★ மானவர்மன் பல்லவ அரசனின் போர்களில் உதவியதால் மானவர்மன் மீது நல்லெண்ணம் கொண்ட நரசிங்கவர்மன் அதற்கு நன்றிக்கடனாக படையை அனுப்பினான்.

**09) மானவர்மனுக்கு உதவி வழங்கிய பல்லவ அரசர்களைக் குறிப்பிடுக.**

★ *1ம் நரசிங்கவர்மன்*

★ *2ம் நரசிங்கவர்மன்*

**10) மானவர்மன் யாருக்கு எதிராகப் போர் தொடுத்த போது உதவிக்கு வந்த பல்லவப்படை இந்தியாவிற்குத் திரும்பியது?**

★ தடோபதீசனுக்கு

**11) மானவர்மனுக்கு உதவியாக வந்த முதலாம் நரசிங்கவர்மனின் படை மீள இந்தியாவிற்கு சென்றமைக்கான காரணம் யாது?**

★ இந்தியாவின் பல்லவ மன்னன் நோயுற்றமை.

**12) 1ம் நரசிங்கவர்மனின் படை மீளத் திரும்பியதைத் தொடர்ந்து மானவர்மன் தனது குறிக்கோளை நிறைவேற்ற எத்தனை ஆண்டுகள் காத்திருந்தான்?**

★ *20 ஆண்டுகள்*

**13) இரண்டாம் தடவையில் 2ம் நரசிங்கவர்மனின் படை உதவி பெற்று வந்த மானவர்மன் எம் மன்னனைத் தோற்கடித்தான்?**

★ ஹத்ததாட மன்னனை

**14) ஹத்ததாட மன்னனிடமிருந்து மானவர்மன் எத்தனையாம் ஆண்டு ஆட்சியைக் கைப்பற்றினான்?**

★ *கி.பி 684ம் ஆண்டில்*

**15) மானவர்மன் அரசனாவதற்கு முன்னர் எத்தனை ஆண்டுகள் வரை நாட்டின் உள்நாட்டுப் பூசல்கள் இடம் பெற்றன?**

★ *50 ஆண்டுகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**16) அரச உரிமை தொடர்பாக மரபு முறை ஆரம்பிக்கப்படுகையின் போது ஆட்சியாளன் யார்?**

★ மானவர்மன்

**17) அநுராதபுர காலத்தின் இறுதிவரை நிலவிய அரச வம்சம் எது?**

★ மானவர்ம அரசவம்சம்

**18) அநுராதபுரத்தில் 300 ஆண்டுகள் வரை நிலவிய அரசவம்சம் யாது?**

★ மானவர்ம அரசவம்சம்

**மானவர்மனின் மரணத்தின் பின்னர் ஆட்சிப்பீடமேறிய சிலர்**

★ மானவர்மன் :- கி.பி 684 - 718

★ 5ம் அக்போ :- கி.பி 718 - 724

★ 3ம் காசியப்பன் :- கி.பி 724 - 730

★ 1ம் மகிந்தன் :- கி.பி 730 - 733

**முதலாம் சேனன்**

★ ஆட்சிக்காலம் :- கி.பி 833 - 853

★ தந்தை :- 2ம் தப்புலன்

★ சகோதரர்கள் :- 9ம் அக்போதி, மகிந்தன், உதயன்

★ வம்சம் :- மானவர்மவம்சம்

★ ஆட்சி ஆண்டுகள் :- 20 ஆண்டுகள்

★ ஆக்கிரமித்த இனம் :- பாண்டியர் (வம்சம்)

★ ஆக்கிரமித்தவன் :- ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபவன்

★ பாண்டிய ஆக்கிரமிப்பின் போது தப்பி ஓடிய இடம் :- மலையரட்டை

**19) 2ம் தப்புலன் எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தான்?**

★ 16 ஆண்டுகள் (கி.பி 815 - 831)

**2ம் தப்புல மன்னனின் புதல்வர்கள்**

★ 9ம் அக்போதி

★ 1ம் சேனன்

★ மகிந்தன்

★ காசியப்பன்

★ உதயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**20) 1ம் சேனனின் படைக்காக பாண்டியரை எதிர்த்து களத்திற்குச் சென்ற 1ம் சேனனின் சகோதரர்களைக் குறிப்பிடுக.**

★ மகிந்தன்

★ காசியப்பன்

**21) பாண்டியமன்னனான ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபன் இலங்கையை ஆக்கிரமித்தமைக்கான காரணம் யாது?**


★ இலங்கையிலிருந்து பெறுமதியான பொருட்களைக் கொள்ளையடிப்பதே பிரதான நோக்கமாகும்.

**22) 1ம் சேனன் எவ்விகாரைகளுக்கு அண்மையில் கட்டடங்களை அமைத்தான்?**

★ ரிட்டிகல

★ ஜேத்தவனராம

★ அபயகிரி



ரிட்டிகலப் பாதை

**23) பாண்டியர்களிடையேயான போரில் மரணமடைந்த 1ம் சேனனின் சகோதரர்கள் யாவர்?**

★ மகிந்தன்

★ காசியப்பன்

**24) 1ம் சேனன் மற்றும் பாண்டியர்களிடையேயான போரில் இரு சகோதரர்கள் மரணமடைந்ததைத் தொடர்ந்து இளவரசனாக நியமிக்கப்பட்டவர் யார்?**

★ உதயன்

**25) உதயன் நோயினால் மரணமானதைத் தொடர்ந்து யுவராஜாவாக நியமிக்கப்பட்டு உருகுணைப் பிரதேசத்தின் ஆட்சியாளனானவன் யார்?**

★ 2ம் சேனன் (மதுராதுணு எனச் சிறப்பிக்கப்பட்டவர்)

**2ம் சேனன்**

★ ஆட்சிக்காலம் :- கி.பி 853 - 887

★ தந்தை :- ஆதிபாத காசியப்பன்

★ முன்னைய ஆட்சியாளன் :- 1ம் சேனன்


★ ஆட்சி ஆண்டுகள் :- 35 ஆண்டுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**26) 2ம் சேனன் புத்த சாசனத்திற்கு மேலதிகமாக ஆற்றிய பணிகளைக் குறிப்பிடுக எவை?**

- ★ அரசியல் ரீதியாக அமைதியான சூழலை ஏற்படுத்தியமை.
- ★ பொருளாதார, புத்தசாசனத்துறையில் பாரிய பணிகளை மேற்கொண்டமை.
- ★ ஆக்கிரமிப்பினால் அழிந்து போனவைகளை மீளக் கட்டியெழுப்பியமை.
- ★ மிகிந்தலையில் வைத்திய மனையை ஸ்தாபித்தமை.
- ★ மகாவலிகங்கையின் மணிமேகலா அணைகட்டைப் புனரமைத்தமை.
- ★ மின்னேரியாக் குளத்தில் மதகு ஒன்றைக் கட்டியமை.



மிகிந்தலைப் புராதன வைத்திய சாலையின் இடிபாடுகள்.

**27) 2ம் சேனனிடம் படையுதவி கோரிவந்த இந்தியாவின் பாண்டிய மன்னன் யார்?**

- ★ 2ம் வரகுணவர்மன்

**28) 2ம் சேனன் பாண்டிய நாட்டை ஆக்கிரமிக்க விரும்பியமைக்கான காரணம் யாது?**

- ★ 1ம் சேனனின் காலத்தில் பாண்டியரின் ஆக்கிரமிப்பினால் பெறுமதியான சொத்துக்கள் அபகரித்துச் செல்லப்பட்டன. அதனால் ஏற்பட்ட அபகீர்த்தியைப் போக்க பாண்டிய நாட்டை ஆக்கிரமிக்க விரும்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**29) 2ம் சேன மன்னன் பாண்டிய நாட்டை ஆக்கிரமிப்பதற்கு ஏதுவாக அமைந்த சந்தர்ப்பம் யாது?**

★ பாண்டிய நாட்டிலிருந்து 2ம் வரகுணவர்மன் படையுதவிகோரி 2ம் சேனனிடம் வந்தமை.

**30) 2ம் சேனனின் காலத்தில் பாண்டிய நாட்டினை ஆக்கிரமிக்க அனுப்பப்பட்ட தளபதி யார்?**

★ குட்டக

**31) குட்டக எனும் தளபதியினால் ஆக்கிரமிக்கப்பட்ட பாண்டியரின் தலைநகர் எது?**

★ மதுரை

**32) குட்டகத் தளபதியின் தாக்குதலில் மரணமடைந்த பாண்டிய மன்னன் யார்?**

★ ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லபவன்

**33) இலங்கைப்படையினரால் பாண்டிய தேசத்தின் மன்னர் ஆக்கப்பட்டவர் யார்?**

★ வரகுணவர்மன்

**34) 2ம் சேனன் பாண்டிய நாட்டை ஆக்கிரமித்து அடைந்த வெற்றி பற்றிய தகவல்களைக் வெளிப்படுத்தும் கல்வெட்டு?**

★ மாவட்டம் :- அநுராதபுரம்

★ குறிப்பிடும் விடயம் :- குட்டா, செனவிரதாணன் என பாண்டிய நாட்டை ஆக்கிரமித்த தளபதி தொடர்பாக குறிப்பிடுகின்றது.

★ இனங்காணப்பட்டது :- இரிபின்னியாவில்

## அரசாட்சி அமைப்பு முறை

**35) முற்காலத்தில் நிலவிய நிர்வாக முறைகளைக் குறிப்பிடுக?**

★ மத்திய ஆட்சி

★ பிரதேச ஆட்சி

**36) மத்திய ஆட்சி என்றால் என்ன?**

★ மன்னனும் மன்னனுக்கு உதவும் அதிகாரிகளும் நாடு முழுவதையும் தமது அதிகாரத்திற்கு உட்படுத்தும் ஆட்சி முறை ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**37) பிரதேச ஆட்சி என்றால் என்ன?**

★ மன்னனின் அதிகாரத்திற்கு மேலதிகமாக ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் பொறுப்பாக ஆட்சி அதிகாரிகளை நியமித்து மேற்கொள்ளும் ஆட்சிமுறை ஆகும்.

**38) மத்திய ஆட்சியின் உயர் நிர்வாகியாகவும் தலைவராகவும் கருதப்பட்டவர் யார்?**

★ மன்னன்

**39) நாட்டில் நிலவிய அரசுரிமைப் பாரம்பரியங்களில் பிரதானமான வைகளைக் குறிப்பிடுக?**

★ மூத்த சகோதரனுக்குப் பின் இளைய சகோதரனுக்கு ஆட்சியுரிமை கிடைத்தல்.
(உதாரணம் - துட்டகைமுனுவுக்குப் பின் சத்தாதீசன்)

★ தந்தையிடமிருந்து மகனுக்கு அரச உரிமை கிடைத்தல். (காவந்திஸ்ஸன் - துட்டகைமுனு, பண்டுகாபயன் - மூத்த சிவன்)

**40) எதிர்கால ஆட்சியுரிமையைப் பெறும் இளவரசர்களுக்கு பயிற்றுவிக்கப்பட்ட விடயங்களைக் குறிப்பிடுக?**

★ உயர்ந்த கல்வியறிவைப் பெற்றுக் கொடுத்தமை.

★ மொழியறிவு மற்றும் ஆவணங்கள் குறித்த பாரம்பரியக் கல்வியைப் பிக்குகளிடமிருந்து பெற்றுக் கொடுத்தமை.

★ வில் வித்தை மற்றும் வாள் வித்தை என்பன அத்துறைசார் நிபுணர்களால் பயிற்றுவிக்கப்பட்டமை.

**41) மத்திய ஆட்சியில் உயர் நிர்வாகியாக விளங்கும் மன்னனின் கடமைகள் எவை?**

★ நாட்டில் சட்டத்தையும் அமைதியையும் பேணல்.

★ உள்நாட்டு வெளிநாட்டு பகைவர்களின் தொல்லைகளிலிருந்து நாட்டைப் பாதுகாத்தல்.

★ மத்திய ஆட்சிக்கும் பிரதேச நிர்வாகத்திற்கும் உரிய அதிகாரிகளை நியமித்தல்.

★ நாட்டின் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தல் மற்றும் வரி விதித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**42) அரசாட்சி நடவடிக்கைகளின் போது மன்னனுக்கு உதவும் அதிகாரிகளாக விளங்கியவர்களைக் குறிப்பிடுக?**

★ யுவராஜன் - எதிர்கால அரசனாகும் உரிமை பெற்றவன்

★ அஷஅதெக - குதிரைப்பணிப்பாளர்

★ சேனாதிபதி

★ அதிதெக - யானைப் பணிப்பாளர்

★ பொருளாளர் - படகாரிக

★ ஆவணப்படுத்துபவர் - மஹலே

**43) அநுராதபுர யுகக் கல்வெட்டுக்களில் பணிப்பாளர் எவ்வாறு அழைக்கப்பட்டார்?**

★ அதெக வரு

**44) குதிரைகள் குறித்த விடயங்களுக்காக நியமிக்கப்பட்ட பிரதானி யார்?**

★ அஷஅதெக

**45) யானைகள் குறித்த விடயங்களுக்காக நியமிக்கப்பட்ட பிரதானி யார்?**

★ அதி அதெக

**46) மானவர்மன் அரச காலத்தில் அரச உரிமை பெறப்பட்ட வரிசைக் கிரமத்தினைக் குறிப்பிடுக?**

★ ஏப்பா (ஆதிபாத - மன்னனின் மகன் நியமிக்கப்படுவார்)

★ மாப்பா (மகாதிபாத - அரசனின் தம்பி நியமிக்கப்படுவார்)

★ மன்னன்.

## பிரதேச ஆட்சி

**47) பிரதேச ஆட்சி என்றால் என்ன?**

★ மன்னனின் தலைமையில் நடத்தப்பட்ட ஆட்சிக்கு மேலதிகமாக அந்தந்தப் பிரதேசங்களுக்குப் பொறுப்பான அதிகாரிகளின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுவதாகும்.

**48) திசைகளுக்கேற்ப பிரிக்கப்பட்டிருந்த ஆட்சிப்பகுதிக்கு மேலதிகமாகக் காணப்பட்ட ஆட்சிப்பகுதி யாது?**

★ ரட / ரட்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**49) அனுராதபுர நகர அராசதானிக் காலப்பகுதியில் பிரதேச நிர்வாகத்திற்காக நாடு பிரிக்கப்பட்ட முறையினைக் குறிப்பிடுக?**

★ வடக்கு - உத்தரபஸ்ஸ
★ கிழக்கு - பாச்சினபஸ்ஸ
★ தெற்கு - தக்கனபஸ்ஸ
★ மேற்கு - பஸ்சிமபஸ்ஸ

**50) ரட என்பதன் நிர்வாக அதிகாரி எவ்வாறு அழைக்கப்பட்டார்?**

★ ரட்லது / ரட்டலத்தன்

**51) அநுராதபுர காலப்பகுதியில் வெவ்வேறு ஆட்சி அதிகாரிகளின் கீழ்காணப்பட்ட பிரதேசங்களைக் குறிப்பிடுக.**

★ மலையரட்டை
★ மாயரட்டை
★ உருகுணை

**52) நாட்டின் மிகச்சிறிய நிர்வாக அலகு யாது?**

★ கிராமம்

**53) அநுராதபுர யுக முன்னரைக் காலத்தில் காணப்பட்ட கிராம நிர்வாகிகள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?**

★ கமிக / கிராமிக

**54) அநுராதபுர யுகத்தின் பின்னரைக் காலப்பகுதியில் கிராம நிர்வாகிகள் எவ்வாறு அழைக்கப்பட்டார்?**

★ கம்லத்தன்


**அரச கொள்கையும் அரச சமூக நலன்புரித் திட்டங்களும்**

**55) மானவர்ம ஆட்சிக்காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட அரச கொள்கைகள் எவை?**

★ நாட்டின் பாதுகாப்பைத் திட்டமிடல்
★ சட்டத்தையும் சமாதானத்தையும் பேணல்
★ பொருளாதார மேம்பாட்டை உருவாக்கல்
★ புத்தசாசன முன்னேற்றத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்
★ நாட்டின் பாதுகாப்பைத் திட்டமிடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனுராதபுர நகர அராசதானிக் காலப்பகுதியில்
பிரதேச நிர்வாகத்திற்காக நாடு பிரிக்கப்பட்ட முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**56) நாட்டைப் பாதுகாப்பதற்காக மன்னனுக்குதவிய அதிகாரிகளைக் குறிப்பிடுக?**

★ சேனாதிபதி
★ படையினர்
★ பிரதேச ஆட்சியாளர்கள்

**57) அநுராதபுர யுகத்தின் முன்னரைக்காலப் பகுதியில் மன்னனின் படைகளைக் குறிப்பிடுக?**

★ யானைப்படை
★ குதிரைப்படை
★ இரதப்படை
★ காலாட்படை

**58) தென்னிந்தியப்படை வீரர்களைக் கொண்ட சம்பளம் பெற்ற இராணுவக்குழுவொன்று எம் மன்னன் ஆட்சிக்காலப் பகுதியில் இலங்கையிலிருந்தது?**

★ மானவர்ம மன்னனின் காலத்தில்

**59) இலங்கை அரசர்கள் நாட்டின் பாதுகாப்புக்காக நகர நிர்மாணத்தின் போது மேற்கொண்ட பாதுகாப்பு உபாயங்களைக் குறிப்பிடுக?**

★ நகர நிர்மானத்தின் போது அவற்றின் பாதுகாப்புக்குறித்துக் கவனம் செலுத்தியமை.
★ நகரமானது வாயிற்கதவு, மதில் என்பவற்றைக் கொண்டு அமைக்கப்பட்டமை.
★ கோட்டைகளை நிர்மாணித்ததும் பாதுகாப்பு காவலர்களை நியமித்தமையும்.

**சட்டத்தையும் சமாதானத்தையும் பேணல்**

**60) மானவர்மன் காலத்தில் நடைமுறையிலிருந்த சட்டங்கள் எவை?**

★ காணி உரிமை குறித்த சட்டம்
★ வர்த்தகம் சம்பந்தமான சட்டம்.
★ விவசாயம் மற்றும் வரி சம்பந்தமான சட்டம்
★ குற்றவியல் குறித்த சட்டம்.

**61) கி.பி 10 ஆம் நூற்றாண்டில் நடைமுறையிலிருந்த சட்டதிட்டங்களைக் குறிப்பிடும் கல்வெட்டு எது?**

★ வேவெல் கட்டிய கல்வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**62) அந்தாணித்தூண்கள் எனப்படுவது யாது?**

★ அனுராதபுர யுகத்தின் பின்னரைப்பகுதியில் மன்னர்களோ அல்லது உயர் அதிகாரிகளோ சிற்சில நபர்களுக்கும் நிறுவனங்களுக்கும் விசேட அதிகாரங்களையும் வரப்பிரசாதங்களையும் வழங்கியமையை வெளிப்படுத்தும் நோக்கில் பொறிக்கப்படும் தூண்.

**பொருளாதார மேம்பாட்டை உருவாக்கல்.**

**63) அநுராதபுர யுக மன்னர்கள் மக்களின் நல் வாழ்க்கைக்கும் சுபீட்சத்தக்குமாக அக்கறை செலுத்திய பிரதான விடயம் யாது?**

★ குளங்கள் மற்றும் கால்வாய்களை அமைப்பதிலும் அதனைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதிலும்.

**64) மன்னன் நிர்வாக நடவடிக்கைகளின் போதும் வரி விதிக்கும் போதும் எதனை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டியிருந்தது?**

★ பெரசிறிதவை

**65) பெரசிறித என்பது யாது?**

★ பெரசிறித என்பது முன்பு மன்னர்கள் கடைப்பிடித்து ஏற்றுக் கொண்ட கொள்கை.

**66) முற்கால மன்னர்கள் பெரசிறித என்பதை முக்கியமான ஒன்றாகக் கருதியமைக்கான சான்று யாது?**

★ அனுராதபுர யுகத்தின் பின்னரைக் காலத்தில் சில மன்னர்கள் தாம் பெரசிறிதவை மீறாமல் செயற்பட்டதாக கல்வெட்டுக்களில் எழுதியுள்ளனர்.

**67) எவ்வம்சத்தின் ஆட்சிக்காலத்தில் நாட்டின் சிறந்த ஒரு முகாமைத்துவக் கொள்கை நிலவியதற்கான சான்று காணப்படுகிறது?**

★ மானவர்ம வம்சத்தின் ஆட்சிக்காலத்தில்

**68) புராதன காலத்தில் நிலவிய அடிப்படைக் கொள்கை வெளிப்படுத்தும் முக்கிய ஆவணம் எது? அது யாருடையது?**

★ மிகிந்தலைச் சுவர்க் கல்வெட்டு

★ 4ம் மஹிந்த மன்னனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**69) மிகிந்தலைச்சுவர் கல்வெட்டில் குறிப்பிடும் பிரதான விடயம்?**

★ மிகிந்தலை விகாரையில் உள்ளக நிர்வாகம் மற்றும் பௌத்த குருமார்கள் பின்பற்ற வேண்டிய பழக்கவழக்கங்கள் அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**70) மிகிந்தலை விகாரையின் வரவு செலவு குறித்து ஆவணம் ஒன்றைத் தயார் செய்தமையை வெளிப்படுத்தும் கல்வெட்டு எது?**


★ மிகிந்தலைச் சுவர்க் கல்வெட்டு

**71) மிகிந்தலை விகாரையின் வரவுசெலவு குறித்து மிகிந்தலைச் சுவர்க்கல்வெட்டு வெளிப்படுத்தும் விடயங்கள் எவை?**

★ நாள்தோறும் விகாரைகளுக்குக் கிடைக்கும் வருமானத்தை நாளாந்த அறிக்கையாக எழுதுதல்

★ மாதக் கடைசியில் செலவு முழுவதையும் வேறொரு கையேட்டில் மாதாந்த அறிக்கையாக தயாரித்தல்.

★ வருடாந்த இறுதியில் வருடாந்த வரவு செலவு ஆவணம் ஒன்று தயாரித்தல்.



நான்காம் மகிந்த மன்னனின் மிகிந்தலைக் கல்வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**72) அநுராதபுர யுகத்தில் மன்னர்கள் சமூகநலன் குறித்து விசேட கவனம் செலுத்தியமைக்கான சான்று?**

**புத்ததாச மன்னன் -**

★ சகல பத்துக் கிராமங்களுக்கும் ஒவ்வொரு வைத்தியர் வீதம் நியமித்து மருத்துவம் செய்வித்தமை.

★ சாரனார்த்த சங்கிரஹாய எனும் வைத்திய நூலை எழுதியமை.

★ மூலிகைத் தோட்டத்தினை உருவாக்கியமை.

**முதலாம் உபதிஸ்ஸ மன்னன் -**

★ பார்வை இழந்தவர்களுக்கும் நோயாளிகளுக்கும் வைத்தியசாலைகளையும் தான சாலைகளையும் நிறுவியமை.

**முதலாம் உதய மன்னன் -**

★ பொலன்னறுவையிலும் பதவியாலும் வைத்தியசாலைகளை நிறுவி அவற்றை நடாத்திச் செல்வதற்கு காணிகளை வழங்கியமை.

**ஐந்தாம் காசியப்ப மன்னன் -**

★ தொற்று நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக அநுராதபுர நகரத்தில் வைத்தியசாலையை நிறுவியதுடன் நகரத்தில் சிகிச்சை நிலையங்களை அமைத்தமை.

**பௌத்த சாசனத்தின் அபிவிருத்தி**

**73) புராதனகால மன்னர்கள்பௌத்தசமய விருத்திக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை?**

★ பௌத்த குருமார்களின் அறிவுரைப்படி ஆட்சி நடாத்தியமை.

★ புதிய விகாரைகளை நிறுவியமையும் சிதைவடைந்த விகாரைகளைப் புனரமைத்தமையும்.

★ விகாரைகளைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான நிலபுலன்களையும் கிராமங்களையும் வழங்கியமை.

★ பிக்குகளின் கல்வி நடவடிக்கைகளுக்காக பிரிவெனாக்களை உருவாக்கியமை.

**74) இலங்கை மீது நேரடித் தாக்கத்தை ஏற்படுத்திய தென்னிந்திய அரசுக்களைக் குறிப்பிடுக?**


★ பாண்டிய அரசு

★ பல்லவ அரசு

★ சோழ அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இலங்கை மீது தாக்கத்தை ஏற்படுத்திய தென்னிந்திய அரசுகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**75) பாண்டிய அரசு பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக?**

★ தென்னிந்தியாவின் கிழக்கு கரையோரமாக இலங்கைக்கு மிக அருகில் அமைந்திருந்தமை.

★ கி.பி 6ம் நூற்றாண்டு முதல் பலம் வாய்ந்த அரசாகக் காணப்பட்டமை.

★ பாண்டிய அரசின் தலைநகர் மதுரையாகும்.

★ இலங்கை மீது பாண்டிய மன்னன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் ஆக்கிரமிப்பினை மேற்கொண்டான்.

★ ஸ்ரீமாற ஸ்ரீவல்லவனின் காலத்தில் இந்தியா முழுவதும் பாண்டியரின் ஆதிக்கம் பரவியது.

**76) பல்லவ அரசு பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக?**

★ தென்னிந்தியாவில் சோழ அரசு இருந்த நிலப்பரப்புக்கு அருகே இது இருந்தது.

★ தென்னிந்தியாவில் முதன்முதலாகப் பாரிய பேரரசு ஒன்றைக் கட்டியெழுப்பியது பல்லவர்கள் ஆவார்.

★ கி.பி 7 - 9ம் நூற்றாண்டு காலப்பகுதியில் பல்லவரின் அதிகாரம் தென் இந்தியாவில் நிலை கொண்டிருந்தது.

**77) சோழ அரசு பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக ?**

★ பாண்டிய அரசுக்கு வடக்கே தென்னிந்தியாவின் கிழக்குக் கரைக்கு அருகில் அமைந்திருந்தமை.

★ சோழர்கள் சில சந்தர்ப்பங்களில் பாண்டிய அரசுக்கு எதிராக ஆக்கிரமிப்பு மேற்கொண்டிருந்தனர்.

★ கி.பி 9-10 நூற்றாண்டுகளில் மாபெரும் பேரரசு ஒன்றை கட்டியெழுப்பியமை.

★ இராஜ ராஜ சோழன், இராசேந்திர சோழன் போன்ற சோழ மன்னர்களால் இலங்கையின் அநுராதபுரம் வீழ்ச்சியடைந்தது.

★ சோழர்களின் தலைநகர் தஞ்சாவூராகும்.

**78) இலங்கை அரசர்கள் தென்னிந்திய அரசர்களின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுபட மேற்கொண்ட நடவடிக்கைகள் எவை?**

★ பாண்டியருக்கு எதிராக பல்லவருடனும் சோழர்களுக்கு எதிராக பாண்டியர்களுடனும் ஒன்றிணைந்து செயற்பட்டமை.

★ இராஷ்ட்ரகூடர் எனும் மற்றொரு இந்திய அரசு எழுச்சி அடையும் போது அந்நாட்டுடன் ஒற்றுமையாகச் செயற்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**79) அநுராதபுர இராசதானி வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் எவை?**

★ அநுராதபுர இறுதிக்காலத்தில் பலவீனமான மன்னர்கள் ஆட்சிபீடம் ஏறியமை.

★ மத்திய ஆட்சி பலவீனமடைந்து உள்ளக மோதல்கள் உக்கிரமடைந்தமை.

★ காலத்திற்குக் காலம் இலங்கைக்கு வருகை தந்த இந்தியப்படைகள் அநுராதபுரத்தில் தங்கியிருந்ததால் அவர்கள் அந்நியரின் ஆக்கிரமிப்பின் போது சிங்கள மன்னர்களுக்கு எதிராக உதவி புரிந்தமை.

★ நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தமையால் படையினருக்கு சம்பளம் கொடுக்க மன்னனால் முடியாமை.

★ சோழருடைய ஆக்கிரமிப்பு.

**80) சோழர்கள் இலங்கையை ஆக்கிரமிக்கும் போது அநுராதபுரத்தின் மன்னராகப் பதவி வகித்தவர் யார்?**

★ 5ம் மகிந்தன்

**81) சோழர்கள் இலங்கையை ஆக்கிரமிக்கும் போது 5ம் மகிந்தன் பாதுகாப்புத் தேடி தப்பி ஓடிய இடம் எது?**

★ உருகுணை

**82) அநுராதபுர இராசதானி வீழ்ச்சியடைந்த ஆண்டு யாது?**

★ கி.பி 1017

**83) இலங்கையில் எத்தனை ஆண்டுகளாக சோழரின் ஆட்சி நிலவியது?**

★ 77 வருடங்களாக

**84) சோழர்களின் ஆட்சியிலிருந்து இலங்கை நாட்டை மீட்டெடுத்தவர் யார்?**

★ 1ம் விஜயபாகு

**85) முதலாம் இராஜேந்திர சோழனால் கைது செய்யப்பட்ட அநுராதபுர ஆட்சியாளன் யார்?**

★ 5ம் மகிந்தன் (1017)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**86) இலங்கை மீதான சோழர் படையெடுப்பு பற்றிய தகவல்களைக் குறிப்பிடுக?**

- ★ முதலில் படையெடுத்தது - கி.பி 993ல் இராசராச சோழன்
- ★ இரண்டாவது படையெடுத்தது - கி.பி 1017ல் இராசேந்திர சோழன்
- ★ சோழர்கள் கைப்பற்றிய பகுதிக்கு இட்ட பெயர் மும்முடிச்சோழ மண்டலம்
- ★ ஆட்சிக்காலம் - கி.பி 993 - 1070
- ★ சோழப்பகுதியின் தலைநகரம் - ஜனநாதமங்கலபுரம்
- ★ உறுதிப்படுத்தும் சாசனம் - ஊர்காவற்றுறை கல்வெட்டு

**5ம் மகிந்தன்**

- ★ அரச - அநுராதபரம்
- ★ சிறப்பு - அநுராதபுர இறுதி அரசன்
- ★ ஆட்சிக் காலம் - கி.பி. 982 - 1017
- ★ இறப்பு - கி.பி. 1029 (சோழர் கைதியாக)
- ★ ஆக்கிரமித்தோர் - இரசராசசோழன் - 993 இல்
  இராஜேந்திர சோழன் - 1017 இல்
- ★ எதிர்கொண்டது - சோழர் படையெடுப்பு.
- ★ தப்பி ஓடியது - உருகுணைக்கு.

**மகா விஜயபாகு**

- ★ ஆட்சிக்காலம் - கி.பி 1055 - கி.பி 1110
- ★ புகழ் பெயர் - விடுதலை வீரன் (சூளவம்சம்)
- ★ தாய் - லோகிதா தேவி
- ★ தந்தை - மொகலலானன்
- ★ இயற்பெயர் - கீர்த்திகுமாரன் அல்லது கீத்தி
- ★ சகோதரர்கள் - சித்ரா, ரக்பித, மிஹிந்து
- ★ உதவி புரிந்தவர் - புதல்னா, புத்தராஜ
- ★ ஆட்சிமையம் - 1வது கதிர்காமம் 1053ல்
  2வது பொலனறுவை
- ★ வரலாற்று மூலம் - மகாவம்சம்,
  அம்பகமுவ கல்வெட்டு,
  பனாகடுவ செப்பேடு,
- ★ எதிரான கலகங்கள்- குட்டகல புரட்சி,
  மூன்று சகோதரர்கள் கலகம்,
  வேளைக்காரப்புரட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**87) சோழர்களால் கொலை செய்யப்படுவதற்காக பலமுறை தேடப்பட்டு வந்தவர் யார்?**

★ 5ம் மகிந்தனின் மகன் காசியப்பன் (விக்கிரமபாகு)

**88) இலங்கையர்கள் எவ் இடத்தை மையமாகக் கொண்டு சோழர் எதிர்ப்பு இயக்கமொன்றைக் கட்டியெழுப்பினர்?**

★ உருகுணையை

**89) உருகுணையில் தமக்கு எதிரான அரசியல் சக்தி கட்டியெழுப் பப்படுவதை தடுக்க சோழர் மேற்கொண்ட தந்திரோபாய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக?**

★ இடையிடையே உருகுணை நோக்கிப் படையெடுத்து உருகுணையின் வளங்களை அழித்தமை.

★ உருகுணை அரசிற்கு உரிமையுடையவர்களை கொலை செய்தமை.

**90) உருகுணையின் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கு 1ம்விஜயபாகுவிற்கு உதவி புரிந்தவர் யார்?**

★ சித்னாரும்பிப் புதல்னா / புத்தராஜ

**91) கதிர்காமத்தை ஆட்சிமையமாகக் கொண்டு 1ம் விஜயபாகு அரசனாவதற்கு மேற்கொண்ட நடவடிக்கை யாது?**

★ உருகுணையின் ஆட்சியாளனாக இருந்த கேசதாது காசியப்பனைத் தோற்கடித்தமை

**92) 1ம் விஜயபாகுவின் வெளிநாட்டுக் கொள்கைகள் எவை?**

★ இந்தியாவில் எதிரி இராச்சியங்களுடன் நட்புறவை வளர்த்துக் கொண்டமை.

★ கலிங்க நாட்டுடன் நட்புறவைப் பேணும் நோக்கில் கலிங்க இளவரசி திரிலோக சுந்தரியைத் திருமணம் செய்தமை.

★ தனது தங்கையான மித்தா இளவரசியை பாண்டிய நாட்டு இளவரசனுக்கு திருமணம் செய்து கொடுத்து பாண்டிய நாட்டுடன் நட்பு பூண்டமை.

★ மேலைச் சாளுக்கிய அரச வம்சத்துடன் பரிசுப் பண்டங்களை அனுப்பி நட்புறவை வளர்த்தமை.

★ புத்தசாசன வளர்ச்சிக்காக பர்மாவுடன் தொடர்பை பேணியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**93) 1ம் விஜயபாகுவின் சமய நடவடிக்கைகளைக் குறிப்பிடுக?**

★ பர்மா(மியன்மார்)விலிருந்து பிக்குகளை வரவழைத்து உபசம்பதா விழாவை நடாத்தியமை.

★ 3 மாடிகளைக் கொண்ட தலதாமாளிகையை அமைத்தமை.

★ சிவனொளிபாதமலைக்கான பாதைகளை அமைத்து கிலிமலை என்ற கிராமத்தையும் வழங்கியமை. (ஆதாரம் அம்பகமுவ கல்வெட்டு)

★ அநுராதபுரம் மற்றும் உருகுணையிலுள்ள விகாரைகள் புனரமைத்தமை.

**94) 1ம் விஜயபாகுவின் அரசியல் சாதனைகளைக் குறிப்பிடுக.**

★ 1070ம் ஆண்டு முதல் 40 வருடங்கள் பொலன்னறுவையை தலைநகராகக் கொண்டு இலங்கையை ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்தமை.

★ பாரம்பரிய முறையிலான நிர்வாகம் மீண்டும் உருவாக்கப்பட்டமை.

★ முதன் முறையாக மகாதித்தவில் கடற்காவலரண்களை உருவாக்கியமை.

★ 70 ஆண்டுகளாக நீடித்த சோழராட்சியிலிருந்து நாட்டை மீட்டெடுத்தமை.

★ அநுராதபுரத்தில் அரசமாளிகை ஒன்றை நிர்மாணித்தான்.

**95) முதல் தடவையாக பொலநறுவை மீது தாக்குதலைத் தொடுத்த முதலாம் விஜயபாகு தோல்வியடைந்தமையால் பின்வாங்கிய இடம் எது?**

★ வாகிரி கல (கேகாலை மாவட்டம்)

**96) மன்னன் விஜயபாகுவிடமிருந்து பெறக்கூடிய முன்மாதிரிகளைக் குறிப்பிடுக?**

★ சவால்கள் பலவற்றையும் வெற்றி கொண்ட உறுதித்தன்மை.

★ ஒழிவு மறைவற்ற நேர்மைத்திறன்.


★ செய்ந்நன்றி மிக்க திறன்.

★ தோல்விகளைக் கண்டு பின்னடையாது தொடர்ந்து முயற்சிக்கும் குணாம்சம்.

★ தாய் நாட்டைப் பாதுகாக்கும் தன்மை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விஜயபாகு மன்னனால் அநுராதபுரத்தில் அமைக்கப்பட்ட அரசமாளிகையின் சிதைவு

**பனாகடுவ செப்பேடு**


- ★ காலப்பகுதி - கி.பி. 11 - 12ம் நூற்றண்டு.
- ★ கண்டறியப்பட்டது - தென்பகுதியின் மொரவக்க கோரளையில் பானகடுவ கிராமத்தில்
- ★ வெளிப்படுத்தும் விடயம் - 1ம் விஜயபாகு மன்னனின் இளமைக் காலம் முதலான விபரங்கள்
- ★ பயன்படுத்தப்பட்ட உலோகம் - செப்பு



பனகடுவச் செப்பேடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விஜயபாக மன்னனின் பொலன்னறுவை மீதான படையெடுப்புப் பாதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விஜயபாகு மன்னனி உயர் பண்பு தொடர்பாக அம்பகமுவ கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவைகள்**

| | |
|---|---|
| ★ மும்மணிக்கு | - பணிவிடை |
| ★ ஆசான்களுக்கு | - அடிபணிதல் |
| ★ தார்மீக மக்களுக்கு | - மரியாதை |
| ★ கல்விமான்களுக்கு | - சௌபாக்கியம் |
| ★ உறவினர்களுக்கு | - அனுசரணை |
| ★ நண்பர்களுக்கு | - நட்பு |
| ★ பகைவருக்கு | - தோல்வி |
| ★ அனைத்து உயிரினங்களுக்கு | - கருணை |
| ★ சபைக்கு | - அறிவு |
| ★ தமக்கு | - நிறைவு |

**மகா பராக்கிரமபாகு**

| | |
|---|---|
| ★ தாய் | : இரத்னாவலி |
| ★ தந்தை | : 1ம் மானாபரண (மித்தா இளவரசியின் மகன்) |
| ★ பிறப்பு | : தக்கிண தேசம் தெதிகம பிரதேசம் (புங்ககாம) |
| ★ வளர்ப்பு | : கீர்த்தி ஸ்ரீ மேகன் (சிறியதந்தை) |
| ★ புகழ் | : சூளவம்ச நாயகன் |
| ★ மனைவியர் | : ரூபாவதி, லீலா வதி |

**97) 1ம் விஜயபாகுவின் பின் இலங்கையில் எவ் வம்சத்தவர்களிடையே அரசுரிமை குறித்த மோதல்கள் இடம்பெற்றன?**

★ பாண்டிய வம்சம்
★ கலிங்க வம்சம்

**98) 1ம் விஜயபாகுவின் மரணத்தின் பின் இலங்கையில் தோன்றிய ஆட்சிமையங்கள் எவை?**


★ இராசரட்டை
★ தக்கணதேசம்
★ உருகுணை

**99) மகா பராக்கிரமபாகு பிறந்த இடத்தில் அமைக்கப்பட்ட விகாரை யாது?**

★ தெதிகம கொட்ட வெஹர அல்லது
★ சூதிகர சைத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தெதிகம கொட்ட வெஹர

**100) பராக்கிரமபாகுவின் இளமைக்காலத்தில் இலங்கையில் நிலவிய ஆட்சி மையங்களில் ஆட்சியாளர்கள் மாறிய விதத்தினைக் குறிப்பிடுக?**

★ தக்கணதேசம் - கீர்த்தி ஸ்ரீ மேவன் → 1ம் பராக்கிரமபாகு

★ பொலநறுவை - விக்கிரமபாகு → 2ம் கஜபாகு

★ உருகுணை - ஸ்ரீ வல்லபன் → 2ம் மானபரணன்

**101) குருனாகல் மாவட்டத்தில் சங்கமுவ விகாரையில் கண்டுபிடிக்கப் பட்ட கல்வெட்டிலுள்ள விடயம் யாது?**

★ தக்கணதேசத்தின் 1ம் பராக்கிரமபாகுவிற்கும் பொலன்நறுவையில் ஆட்சிபுரிந்த 2ம் கஜபாகுவிற்கும் இடையில் உறுகுணையில் ஆட்சி செய்த 2ம் மானபரணனுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கை இதன்படி முதலில் ஒருவர் இறந்த பின் மற்றையவருக்கு ஆட்சி உரிமை.

**102) பராக்கிரமபாகு மன்னன் இலங்கையை ஐக்கியப்படுத்த எடுத்த முயற்சிகளைக் குறிப்பிடுக?**

★ கீர்த்தி ஸ்ரீ மேவன் இறந்ததும் தக்கண தேசத்திற்கு அரசனாகியமை. (தலைநகரம் - பராக்கிரமபுர) (கி.பி 1140)

★ இராசரட்டையின் (பொலன்னறுவை) அதிகாரத்தை 2ம் கஜபாகுவின் மரணத்தைத் தொடர்ந்து கைப்பற்றியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ 2ம் மானபரனின் இறப்பைத் தொடர்ந்து தாய் சுகலாதேவி யின் தலைமையில் வந்த உருகுணைப் படையைத் தோற்கடித்தமை.

★ கி.பி 1160ல் இலங்கையை ஒன்றுபடுத்தியமை.



மகாபராக்கிரமபாகுவின் அரசமாளிகையின் சிதைவு

**103) 1ம் பராக்கிரமபாகுவின் பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகளைக் குறிப்பிடுக?**

★ தெதறு ஓயாவில் கொட்டபத்த, சூக்கர நிஜ்கர, தோரதக்கித எனும் இடங்களில் அணைகளை அமைத்து நீர்ப்பாசண வசதியை ஏற்படுத்தியமை.

★ களுகங்கை, பெந்தரகங்கை என்பவற்றிற்கிடையே அமைந்துள்ள பஸ்துன் கோறளையின் சதுப்பு நிலங்களின் நீரை வழிந்தோடச் செய்து அவ்விடங்களை அபிவிருத்தி செய்தமை.


★ பொலநறுவையில் மாபெரும் சாதனையாகத் தோப்பாவாவி, தும்புடுளுவாவி, ஆகியவற்றை இணைத்து பராக்கிரம சமுத்திரத்தை உருவாக்கியமை.

★ இவரது காலத்தில் 3910 கால்வாய்களும், 163 குளங்களும் அமைக்கப்பட்டதாக சூளவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

★ வானிலிருந்து விழுகின்ற ஒரு துளி நீரையேனும் பயன்படுத்தாது கடலில் விடக்கூடாது. எந்தவொரு இடத்திலும் விவசாயத்திற்குப் பயன்படாத சிறு நிலமேனும் இருக்கக்கூடாது எனும் உரிய சிந்தனைகளுடன் செய்யப்பட்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகா பராக்கிரமபாக மன்னரின் அரசசபையின் சிதைவு



பராக்கிரமசமுத்திரம்

**104) 1ம் பராக்கிரமபாகுவின் பௌத்தசாசனப் பணிகளைக் குறிப்பிடுக?**

★ பிளவுபட்டிருந்த பௌத்த பிக்குகளை ஒன்றுபடுத்தியமை.

★ பொலநறுவை கதிகாவத என்ற பெயரில் திம்புகலாகல காசியப்பதேரரின் வழிகாட்டலில் பிக்குகளின் ஒழுக்க நெறிக்கோவையை உருவாக்கியமை. (உத்தரராம விகாரையில் கற்தூணில் எழுதப்பட்டுள்ளமை.)

★ பொத்குல்விகாரை, கிரிவிகாரை, பபலுவிகாரை போன்ற விகாரைகளை நிர்மாணித்தமை.


★ பிரமாண்டமான புத்தர்சிலையாக லங்கா திலக புத்தர் சிலையை உருவாக்கியமை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கல்விகாரைப் புத்தர்சிலை



பொத்குல் விகாரை



கிரி விகாரை



பபலு விகாரை

**105) 1ம் பராக்கிரமபாகுவின் வெளிநாட்டுக் கொள்கைகளைக் குறிப்பிடுக?**

★ தென்னிந்திய பாண்டிய மன்னன் குலசேகரனுக்கு எதிராக ஆக்கிரமிப்பை மேற்கொண்டமை.

★ பர்மாவுக்கு எதிராக ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டன.

**106) 1ம் பராக்கிரமபாகு வெளிநாடுகளுக்கு தனது படைகளை அனுப்பியமைக்கான காரணங்களைக் குறிப்பிடுக?**

★ பாண்டிய சிம்மாசனத்திற்காக போட்டியிட்ட பராக்கிரம பாண்டியனின் வேண்டுகோளுக்கேற்ப லங்காபுர, ஜகத்விஜய சேனாதிபதிகளின் கீழ் படையனுப்பப்பட்டது.

★ பர்மாவின் மன்னன் அலவுங்சித் என்பவரின் காலத்தில் இடம்பெற்ற சமய வர்த்தகப் பிணக்கு காரணமாக நகர கிரி கீர்த்தி எனும் தளபதி தலைமையில் கி.பி 1164ல் கடற்படை அனுப்பப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**107) 1ம் பராக்கிரமபாகுவின் வெளிநாட்டுக் கொள்கைகள் எக் கல்வெட்டில் குறிக்கப்பட்டுளது?**

★ தெவனக் கல்வெட்டில் இவை குறிப்பிடப்பட்டுள்ளது.

**நிசங்கமல்லன்**

★ தாய் : பார்வதிதேவி
★ தந்தை : ஜயகோப மன்னன்
★ வம்சம் : கலிங்க வம்சம்
★ ஆட்சிக்காலம் : 1187 - 1196
★ குலம் : இஸ்வாகுகுலம்
★ முதற்பதவி : 2ம் விஜயபாகுவின் உபராஜன்
★ புகழ் பெயர் : கொடைமுதல்வன் அல்லது தானமுதல்வன்
★ பொலநறுவையை அறிமுகப்படுத்திய பெயர் : கலிங்கபுரம்

**108) நிசங்க மல்ல மன்னன் ஆட்சியுரிமையைக் கைப்பற்றிய விதம்?**

★ பராக்கிரமபாகுவிற்கு பின்னர் அவனது சகோதரியின் மகனான 2ம் விஜயபாகு ஆட்சிபீடம் ஏறினான். ஆயினும் ஒரு வருடத்திலேயே 6ம் மகிந்தன் என்பவன் அரசனாகினான். அவன் ஆட்சிப்பீடமேறி 5 நாட்களில் அவனைக் கொன்று நிசங்கமல்லன் அரசனானான்.



நிசங்கமல்ல மன்னனின் அரசசபைச் சிதைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**109) நிசங்கமல்ல மன்னன் தனது ஆட்சிக்காலத்தில் எதிர்நோக்கிய சவால்களைக் குறிப்பிடுக?**

★ வெளிநாட்டில் பிறந்த, கலிங்க வம்சத்தைச் சேர்ந்தவனாகக் காணப்பட்டமை.

★ பராக்கிரமபாகுவின் சிறந்த சேனாதிபதிகளைத் தன்வசப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டமை.

★ பாண்டியர்களின் எழுச்சியைத் தடுக்க வேண்டி ஏற்பட்டமை.

★ உருகுணையைத் தன்வசமாக்கிக் கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டமை.

★ சிம்மாசனத்திற்கு உரிமை கோரிய இளவரசர்களும் பலம் வாய்ந்த சேனாதிபதிகளும் அரசனுக்கு எதிராகச் செயலாற்றியமை.

**110) நிசங்கமல்ல மன்னன் தான் எதிர்கொண்ட சவால்களை முறியடிக்க மேற்கொண்ட சமயப்பணிகளைக் குறிப்பிடுக?**

★ பௌத்த மதத்திற்கு பேராதரவு வழங்கியமை.

★ ரன்கொத்விகாரை, வட்டதாகே, நிஸங்கலதா மண்டபம் போன்றவைகளை நிறுவியமை.

★ தம்புள்ளை விகாரை, சிவனொலிபாதமலை எனுமிடங்களுக்கு யாத்திரைகளை மேற்கொண்டு உதவிகளை வழங்கியமை.

★ நிசங்கமல்ல இராஜசபை மண்டபம் என்பவற்றையும் நிறுவியமை.

**111) நிசங்கமல்ல மன்னன் தான் எதிர்கொண்ட சவால்களை முறியடிக்க மேற்கொண்ட பொருளாதாரப் பணிகளைக் குறிப்பிடுக?**

★ நாட்டு மக்களை வரிச்சுமையிலிருந்து விடுவித்தமை

★ வருடாவருடம் துலாபாரக் கொடைகளை வழங்கியமை.

★ வறுமையால் வாடிய மக்களுக்கு நன்கொடைகள் வழங்கியமை

★ சிறுகுளங்களைப் புனரமைத்தமை.

★ திருடர், பகைவர் தொல்லைகள் நீக்கியமை.

★ எளியோரை கவனித்தமை.

துலாபாரக் கொடை என்பது ஒருவரின் உடலின் நிறைக்குச் சமனாக வழங்கப்படும் கொடையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**112) நிசங்கமல்ல மன்னனின் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக?**


★ இலங்கை வரலாற்றில் அதிக கல்வெட்டுக்களை உருவாக்கியமை.
★ மிக நீளமான கல்வெட்டுக்களில் முதன்மையான கல்பொத்த கல்வெட்டை உருவாக்கியமை.
★ உடல் எடைக்கு வழங்கப்படும் துலாபாரம் என்ற பெயரிலான தானத்தை வழங்கியமை.

**113) நிசங்கமல்ல மன்னனுடைய பிரதான கல்வெட்டுக்கள் எவை?**

★ பொலநறுவை வட்டதாகே
★ தம்புள்ளை பாறைக் கல்வெட்டு
★ வாது ரூப்பே கல்வெட்டு
★ கல்பொத்த
★ வலிஹத்த

**114) நிசங்கமல்ல மன்னனால் நிறுவப்பட்ட கட்டடங்களைக் குறிப்பிடுக.**

★ ரன்கொத்
★ வட்டதாகே
★ நிசங்கலதா மண்டபம்
★ நிசங்கமல்ல இராஜ சபை மண்டபம்.



கல்பொத்த கல்வெட்டு

**1ம் பராக்கிரமபாகு தொடர்பான விபரங்கள் காணப்படும் மூலாதாரங்கள்**

★ தெவனகல கல்வெட்டு
★ சங்கமுவ விகாரை கல்வெட்டு
★ சூளவம்சம்
★ கல்விகாரை சுவர்க்கல்வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி - 01

01) இலம்பகர்ண வம்சத்தை சேர்ந்த மன்னன் யார்?
i. துட்டகைமுனு ii. வசபன்
iii. முதலாம் சேனன் iv. மானவர்மன்

02) இலம்பகர்ண, மோரிய வமசத்தலைவர்கள் வரவழைத்த படை எது?
i. தென் இந்தியப்படை ii. வட இந்தியப்படை
iii. கிழக்கிந்தியப்படை iv. மேற்கிந்தியப்படை

03) 2ம் காசியப்ப மன்னனின் மகன் யார்?
i. வசபன் ii. 1ம் சேனன்
iii. மானவர்மன் iv. பண்டுகாபயன்

04) மானவர்மமன்னன் இந்தியாவுக்கு தப்பி ஓடிச்செல்ல காரணமானவன் யார்?
i. காசியப்பன் ii. தாடோபதீசன்
iii. தேவநம்பியதீசன் iv. பண்டுகாபயன்

05) முதலாம் சேனன் மன்னன் எம்மன்னனுடைய மகனாவான்?
i. மானவர்மன் ii. 2ம் காசியப்பன்
iii. 2ம் தப்புலமன்னன் iv. வசபன்

06) 1ம் சேனனின் படையை தோற்கடித்த மன்னன் யார்?
i. ஸ்ரீமாற ஸ்ரீ வல்லபன் ii. 2ம் சேனன்
iii. 1ம் சேனன் iv. மானவர்ம மன்னன்

07) 1ம் சேனன் தப்பி ஓடிய இடம் யாது?
i. யாழ்ப்பாணம் ii. மலையரட்டை
iii. அநுராதபுரம் iv. பொலநறுவை

08) சேனன் இளவரசன் எப்பிரதேசத்தில்ஆட்சி அதிகாரத்தைப் பொறுப்பேற்றான்?
i. உருகுணை ii. மலையரட்டை
iii. யாழ்ப்பாணம் iv. கோட்டை

09) 2ம் சேனமன்னனின் ஆட்சிக்காலம் பின்வருவனவற்றுள் எது?
i. கி.பி 887 - 583 ii. கி.பி 530 - 670
iii. கி.மு 853 - 887 iv. கி.பி 853 - 887

10) குட்டக எனும் தளபதியின் படையை பாண்டிய நாட்டுக்கு அனுப்பிய மன்னன் யார்?
i. ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லவன்
ii. 1ம் சேனன்
iii. 2ம் சேனன்
iv. மானவர்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) இலங்கைப்படையினரால் பாண்டிய நாட்டின் சிம்மாசனத்திற்கு நியமிக்கப்பட்டவன் யார்?
i. ஸ்ரீ மாற ஸ்ரீ வல்லவன் ii. வரகுணவர்மன்
iii. பாண்டியமன்னன் iv. 1ம் சேனன்

12) "இரிபின்னியாவ" எனும் இடத்தில் கிடைத்த கல்வெட்டு எப்பிரதேசத்துக்கு உரியது?
i. குருணாகல் ii. அம்பாந்தோட்டை
iii. அநுராதபுரம் iv. உருகுணை

13) மத்திய ஆட்சியின்தலைவராக கருதப்படுபவர் யார்?
i. பிரதமர் ii. அமைச்சர்
iii. குருமார் iv. மன்னன்

14) அநுராதபுரத்தில் இருந்த அரசுரிமை முறை பின்வருவனவற்றுள் எது?
i. தந்தைக்குப் பின் மகனுக்கு அரசுரிமை
ii. தந்தைக்குப் பின் தாய்க்கு அரசுரிமை
iii. இளைய சகோதரனுக்கு பின் மூத்த சகோதரனுக்கு
iv. தந்தைக்கு பின் மருமகளுக்கு

15) குதிரைப் பணியாளரை குறிக்கும் சொற்பதம் எது?
i. ஹதி அதெக
ii. அஹ அதெக
iii. ரூப அதெக
iv. அஸ்வ அதெக

16) நாட்டின் மிகச்சிறிய நிர்வாக அலகு எது?
i. நகரம் ii. நாடு
iii. கிராமம் iv. பிரதேசம்

17) அநுராதபுர யுகத்தின் பின்னரைப்பகுதியில் கிராமத்தலைவர்கள் அழைக்கப்பட்ட விதம் யாது?
i. கம்லத்தன் ii. பருமக
iii. கமிக iv. அரசன்

18) அந்தாணி தூண் கல்வெட்டு எனப்படுவது எக்கல்வெட்டு வகையாகும்?
i. வரிகள் தொடர்பானது ii. அரச கொடுப்பனவு தொடர்பானது
iii. சட்டங்கள் தொடர்பானது iv. அரசுரிமை தொடர்பானது

19) மன்னர்கள் முன்பு கடைப்பிடித்து ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் எவ்வாறு குறிப்பிடப்படும்?
i. பெரசிரித ii. சட்டம்
iii. கொள்கை iv. அரசுரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) மிகிந்தலை சுவர்க்கல்வெட்டுடன் தொடர்புடைய மன்னனை குறிப்பிடுக?

i. 4ம் மகிந்த மன்னன் ii. 2ம் இராஜசிங்கன்

iii. 1ம் சேனன் iv. காசியப்பன்

21) விகாரையின் செயற்பாடுகளுக்காக நாள்தோறும் செலவாகும் செலவினை பதியும் ஆவணம் யாது?

i. ஏடுகள் ii. கல் வெட்டுக்கள்

iii. பஞ்ஷிகா புத்தகம் iv. சுவடிகள்

22) பத்துக்கிராமங்களுக்கு ஒருவைத்தியரை நியமித்த மன்னன் யார்?

i. 4ம் மகிந்தன் ii. 2ம் காசியப்பன்

iii. தாதுசேனன் iv. புத்ததாச மன்னன்

23) தொற்று நோயாளிகளுக்கு வைத்தியசாலையை நிறுவிய மன்னன் யார்?

i. 5ம் காசியப்பன் ii. 4ம் மகிந்தன்

iii. புத்ததாச மன்னன் iv. 1ம் உதய மன்னன்

24) பாண்டிய அரசு எவ் நூற்றாண்டின் பலம் வாய்ந்ததாக உருவெடுத்தது?

i. 6ம் நூற்றாண்டு ii. 3ம் நூற்றாண்டு

iii. 2ம் நூற்றாண்டு iv. 4ம் நூற்றாண்டு

25) பல்லவ இராச்சியத்தின் தலைநகரம்எது?

i. சென்னை ii. பாண்டியநாடு

iii. காஞ்சிபுரம் iv. பாண்டி சேரி

26) தென்னிந்தியாவில் பாரிய பேரரசை உருவாக்கியவர்கள் யார்?

i. பல்லவர்கள் ii. சேரர்

iii. சோழர் iv. பாண்டியர்கள்

27) எம்மன்னனின் ஆட்சிக்காலத்தில் மத்திய அரசு பலவீனமடைந்தது?

i. 2ம் சேனன்

ii. 5ம் காசியப்பன்

iii. 5ம் மகிந்தன்

iv. 1ம் சேனன்

28) அநுராதபுர அரசு வீழ்ச்சியடைய காரணமான மன்னர்கள் யாவர்?

i. இராஜராஜன், இராஜேந்திரன்

ii. இராஜராஜன், மானவர்மன்

iii. இராஜேந்திரன், மானவர்மன்

iv. மானவர்மன், 1ம் சேனன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29) 5ம் மகிந்த மன்னன் பாதுகாப்பு தேடி தப்பி ஓடிய இடம் எது?
i. அநுராதபுரம் ii. மாத்தறை
iii. உருகுணை iv. பொலநறுவை

30) அநுராதபுர இராசதானி எப்போது வீழ்ச்சியடைந்தது?
i. 1710 ii. 1017 iii. 1110 iv. 2110

31) சோழர்களிடமிருந்து நாட்டை மீட்டெடுத்து இலங்கையர்களின் நன்மதிப்பை கட்டியெழுப்பிய மன்னன் யார்?
i. பண்டுகாபயன் ii. வசபன்
iii. 1ம் காசியப்பன் iv. 1ம் விஜயபாகு

32) கீர்த்தி எனும் பெயரில் அழைக்கப்பட்ட மன்னன் யார்?
i. 1ம் விஜயபாகு ii. 1ம் பராக்கிரமபாகு
iii. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் iv. வசபன்

33) 5ம் மகிந்த மன்னன் எத்தனையாம்ஆண்டு மரணமடைந்தான்?
i. கி.பி 1010 ii. கி.மு 1011
iii. கி.பி 1029 iv. கி.மு 1029

34) பனாகடுவ செப்பேட்டில் குறிப்பிடப்படும்சித்தாறும்பி புத்தநாயக்க தொடர்பாக குறிப்பிடப்படும் மன்னன் யார்?
i. 1ம் இராஜசிங்கன் ii. வசபன்
iii. 1ம் விஜயபாகு iv. பராக்கிரமபாகு

35) 1ம் விஜயபாகு ஆட்சிமையமாகக் கொண்ட இடம் யாது?
i. சந்தானகம ii. கதிர்காமம்
iii. கண்டி iv. அநுராதபுரம்

36) மூன்றடுக்கு தலதாமாளிகை அமைக்கப்பட்ட இடம் எது?
i. அநுராதபுரம் ii. பொலநறுவை
iii. கொழும்பு iv. கண்டி

37) விஜயபாகு மன்னனின் உயர் குணாம்சங்கள் பற்றி விபரிக்கப்பட்டுள்ள கல்வெட்டு எது?
i. அம்பகமுவ கல்வெட்டு ii. வெஸ்ஸகிரிய கல்வெட்டு
iii. ஹேப்பிட்டிகம கல்வெட்டு iv. மிகிந்தலை கல்வெட்டு

38) பராக்கிரமபாகு பிறந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள விகாரை எது?
i. லங்காதிலக விகாரை ii. சுதிகர விகாரை
iii. பொத்குல் விகாரை iv. பொலனறுவை விகாரை

39) "வானிலிருந்து விழும் ஒரு துளி நீரேனும் வீணாகக் கடலை அடையக்கூடாது" என கூறிய மன்னன் யார்?
i. மகாபராக்கிரமபாகு ii. துட்டகைமுனு
iii. வசபன் iv. பண்டுகாபயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40) எத்தனையாம் ஆண்டு பர்மாவை ஆக்கிரமிப்பதற்கு பராக்கிரமபாகு நடவடிக்கை எடுத்தான்?
i. கி.பி 1116 ii. கி.பி 1164
iii. கி.பி 1163 iv. கி.பி 2673

**பின்வரும் வினாக்களுக்கு சரி (✓) பிழை (✗) இடுக**

41) மானாபரணன் பராக்கிரமபாகுவின் தந்தை ஆவார்( )
42) பராக்கிரமபாகுவிற்க்கும் பண்டுகாபயமன்னனுக்கும் இடையே உடன் படிக்கை இடம்பெற்றது. ( )
43) 70 ஆண்டுகளுக்கு மேலாக இராசரட்டை சோழராட்சியின் கீழ் இருந்தது. ( )
44) 1ம் விஜயபாகு மன்னன் 40 வருடங்கள் இலங்கையை ஆட்சி புரிந்துள்ளான். ( )
45) தக்கிண தேசத்தின் ஆட்சியாளனாக வசபன் ஆட்சிபுரிந்துள்ளார். ( )

**இடைவெளி நிரப்புக**

46) 1ம் விஜயபாகு மன்னன் ................................... நாட்டை மீட்டான்.
47) 1ம் பராக்கிரமபாகுவை அடுத்து ................................... சிறந்த ஆட்சியாளனாவான்.
48) பாண்டிய நாட்டை ................................... ஆக்கிரமித்தான்.
49) இளவரசி ................................... மகன் மானாபரணன் ஆவார்.
50) மானாபரணன் ................................... தப்பி சென்றான்.

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 2 | 2) | 1 | 3) | 3 | 4) | 2 | 5) | 3 |
| 6) | 1 | 7) | 2 | 8) | 1 | 9) | 4 | 10) | 3 |
| 11) | 2 | 12) | 3 | 13) | 4 | 14) | 1 | 15) | 2 |
| 16) | 3 | 17) | 1 | 18) | 2 | 19) | 1 | 20) | 1 |
| 21) | 3 | 22) | 4 | 23) | 1 | 24) | 1 | 25) | 3 |
| 26) | 1 | 27) | 3 | 28) | 1 | 29) | 3 | 30) | 2 |
| 31) | 4 | 32) | 1 | 33) | 3 | 34) | 3 | 35) | 2 |
| 36) | 2 | 37) | 1 | 38) | 2 | 39) | 1 | 40) | 2 |
| 41) | ✓ | 42) | ✗ | 43) | ✓ | 44) | ✓ | 45) | ✗ |

46) சோழரிடமிருந்து 47) நிஸ்ஸங்கமல்லன்
48) 2ம் சேனன் 49) மித்தாவின்
50) உருகுணைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு 03

# எமது கலாசார மரபுரிமைகள்

**அறிமுகம்.**

அநுராதபுரம், பொலன்னறுவை போன்ற பழைய நகரங்களைப் பற்றிப் பேசும் போது எமது புராதன கலாசாரம் பற்றிய நினைவுகள் எழுகின்றன. இதனடிப்படையில் எமது முன்னோர்களால் நிர்மாணிக்கப்பட்டவைகளின் எச்சங்கள் பலவும் இனங்காணப்படுகின்றன. அவை எல்லாம் தேசிய சொத்துக்களாகக் கருதிப் பாதுகாக்கப்படுகின்றன.

**01) எமது தேசிய கலாசார மரபுரிமை என்றால் என்ன?**

★ எமது தேசிய சொத்துக்களாகக் கருதி பாதுகாக்கப்படும் அனைத்தும் தேசிய கலாசார மரபுரிமை எனப்படும்.

**02) கலாசார மரபுரிமைகளின் பிரதான இருவகைப்பாடுகளும் எவை?**

★ தொட்டுணரக்கூடிய மரபுரிமைகள்

★ தொட்டுணரமுடியாத மரபுரிமைகள்

**03) தொட்டுணரக்கூடிய கலாசாரமரபுரிமைகளைக் குறிப்பிடுக?**

★ சமய வழிபாட்டுத் தலங்கள்


★ அரச மாளிகைகள்

★ கோட்டைகள்

★ பூங்காக்கள்

★ நீர்ப்பாசன நிர்மாணங்கள்


★ பழைய நூல்கள்



நிசங்கலதா மண்டபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரன்மசு பூங்கா

**04) தொட்டுணர முடியாத மரபுரிமைகளைக் குறிப்பிடுக?**


★ பெரியோரை வணங்குதல்
★ சமய வழிபாட்டில் ஈடுபடல்
★ சம்பிரதாயங்கள்
★ மொழிகள்
★ நாட்டார் பாடல்கள்
★ ஆடல்கள்
★ கலை தொடர்பான அறிவு
★ பழக்க வழக்கங்கள்
★ நம்பிக்கைகள்

**05) உலகக் கலாசார மரபுரிமை என்றால் என்ன?**

★ ஒரு நாட்டிலிருக்கும் கலாசார மரபுரிமைகள் அந்நாட்டிற்கு மட்டுமன்றி முழு மனித குலத்திற்கும் உரித்தான மரபுரிமையாகக் கொள்ளப்பட்டால் அது உலகக் கலாசார மரபுரிமை எனப்படும்.

**06) உலகக் கலாசார மரபுரிமைகளை அடையாளப்படுத்தும் அமைப்பு எது?**

★ யுனெஸ்கோ (UNESCO) (ஐக்கிய நாடுகள்சபையின் விஞ்ஞான பண்பாட்டு அமைப்பு)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07) கி.பி 2011 ஆண்டளவில் யுனெஸ்கோ நிறுவனத்தினால் எத்தனை உலக கலாசார மரபுரிமைகள் பட்டியற்படுத்தப்பட்டன?**

★ கி.பி. 704

**08) இலங்கையில் உள்ள உலகக் கலாசார மரபுரிமைகள் எத்தனை?**

★ 6

**09) யுனஸ்கோ நிறுவனம் உலகக் கலாசார மரபுரிமைகளை தெரிவு செய்யும் போது கவனத்திற் கொள்ளும் விடயங்கள் எவை?**

★ மனிதனின் உன்னதமான ஆக்கத்திறனுள்ள அல்லது அறிவினை வெளிப்படுத்தும் ஆக்கங்கள்.

★ யாதேனுமொரு கலாசாரத்திற்கு உரித்தான கட்டடக்கலை, நகர அமைப்பு, கலை, தொழில்நுட்பம் என்பவற்றின் வளர்ச்சியைக் காட்டும் ஆக்கங்கள்.


★ தற்போது காணப்படும் அல்லது அழிந்துள்ள பண்பாட்டில் அவ்வாறான பண்பாடு நிலவியமைக் காட்டும் சான்றாக இருத்தல்.

★ மனித வரலாற்றில் முக்கிய சந்தர்ப்பங்களை எடுத்துக் காட்டும் கட்டடங்கள் அல்லது தொழில்நுடபம் தொடர்பானவையாக இருத்தல்.

★ தவிர்க்க முடியாத காரணங்களால் அழிவுக்குள்ளாகும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளான பழைய பண்பாட்டு நிலங்கள் அல்லது சமூக வசிப்பிடங்கள் அல்லது அதற்குரிய நினைவுச் சின்னமாக இருத்தல்.

**10) உலக மரபுரிமையான மொஹஞ்சதாரோ நகர் அமைந்துள்ள இடம் யாது?**

★ பாகிஸ்தான்



பழைய மொஹஞ்சதாரோ நகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சீனப் பெருஞ்சுவர்

**11) இலங்கையில் அமைந்துள்ள உலக கலாசார மரபுரிமைகளைக் குறிப்பிடுக?**

- ★ பழைய அநுராதபுர நகரம்
- ★ பழைய பொலநறுவை நகரம்
- ★ சிகிரியா
- ★ ரன்கிரி தம்புள்ளை விகாரை
- ★ கண்டி தலதாமாளிகை
- ★ காலிக்கோட்டை

**12) இலங்கையின் மிகப்புராதன தலைநகர் எது?**

- ★ அநுராதபுரம்

**13) அநுராதபுரத்தில் அமைந்துள்ள கட்டட நிர்மானங்களை குறிப்பிடுக?**

- ★ ஸ்ரீமகாபோதி
- ★ ருவன்வெலிசாய
- ★ லோவமகாபாய
- ★ அபயகிரி
- ★ ஜேதவனராம
- ★ குட்டம் பொய்கை
- ★ இசுறுமுனிய
- ★ ரன்மசு உயன பூங்கா

**14) அநுராதபுரம் உலக மரபுரிமையாக இணைத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு யாது?**

- ★ கி.பி. 1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழைய அநுராதபுர நகரம்

**15) 12ம், 13ம் நூற்றாண்டுகளில் சிறந்து விளங்கிய இலங்கையின் தலைநகர் எது?**

- ★ பொலன்னறுவை

**16) பொலன்னறுவையில் காணப்படும் கட்டட நிர்மாணங்களைக் குறிப்பிடுக?**


- ★ வட்டதாகே
- ★ திவங்க சிலை மனை
- ★ அரசமாளிகை
- ★ சத்மகள் பிரசாதய
- ★ கல்விகாரை
- ★ ரன்கொத் விகாரை
- ★ சிவதேவாலயம்
- ★ பராக்கிரம சமுத்திரம்
- ★ நிசங்கலதா விகாரை
- ★ ரன்கொத் விகாரை
- ★ கிரி விகாரை
- ★ லங்கா திலக விகாரை

**17) பொலன்னறுவை நகரம் எத்தனையாம் ஆண்டில் உலக கலாசார மரபுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டது?**

- ★ கி.பி 1982



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பண்டைய பொலன்னறுவை நகரம்

**18) சிகிரியா எம் மன்னனால் கட்டப்பட்டது?**


★ காசியப்பன்

**19) சிகிரியாவின் சிறப்பம்சங்களைக் குறிப்பிடுக?**

★ பழைய கோட்டை
★ பளிங்குச்சுவர்
★ குன்றின் உச்சியில் அரச மாளிகை
★ கிறுக்கல் கவிதையும் சிகிரியா ஓவியமும்
★ பாதுகாப்பான சுற்று மதிலும் அகழியும்

**20) உலக கலாசார மரபுரிமையாக சிகிரியா இணைக்கப்பட்ட ஆண்டு யாது?**

★ கி.பி.1982



சீகிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**21) இலங்கையின் சித்திரங்களுடனான குகை விகாரையாக கருதப்படுவது எது?**

★ தம்புள்ளை ரஜமகாவிகாரை

**22) தம்புள்ளை ரஜமகாவிகாரை எத்தனையாம் ஆண்டு உலக கலாசார மரபுரிமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது?**

★ கி.பி. 1991



தம்புள்ளை ரஜமகாவிகாரை

**23) காலிக் கோட்டையை சிறிய அளவில் நிர்மாணித்த ஆட்சியாளர் யார்?**

★ போர்த்துக்கேயர்

**24) போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட காலிக்கோட்டையை பாதுகாப்பான தாகவும், பலமிக்கதாகவும் நிர்மாணித்த ஐரோப்பியர் யார்?**

★ ஒல்லாந்தர்

**25) காலிக்கோட்டை உலககலாசார மரபுரிமையாக இணைத்து கொள்ளப்பட்ட ஆண்டு யாது?**

★ கி.பி. 1988

**26) இலங்கையின் இறுதி இராசதானி எது?**

★ கண்டி

**27) கண்டி இராசதானி உலக கலாசார மரபுரிமையாக ஏற்றுக் கொர்ளப்பட்ட ஆண்டு யாது?**

★ கி.பி. 1988




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28) கண்டி நகரில் காணப்படும் கட்டட நிர்மாணங்களைத் தருக?**


★ தலதாமாளிகை

★ பழைய அரசமாளிகை

★ மகுல் மடுவ மண்டபம்



காலிக்கோட்டை



கண்டி நகரம்

**29) காசியப்பனுடைய தந்தை யார்?**

★ தாதுசேனன்

**30) காசியப்பன் யாருக்கு எதிராக சிகிரியாவை நிர்மாணித்தான்?**

★ சகோதரர் முகலனுக்கு எதிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**31) சிகிரியாவின் கட்டடக்கலை பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக?**

★ கடல் மட்டத்திலிருந்து 1214 அடி உயரத்தில் அமைந்துள்ளமை.


★ குன்றின் உச்சியில் 3 ஏக்கர் பரப்பளவில் அரச மாளிகை அமைந்தள்ளது.

★ கிழக்கு, மேற்கு திசையில் பாதுகாப்பு மதிலும், அகழியும் காணப்படுகின்றமை.


★ குன்றின் உச்சி வரை படிக்கட்டு, பாதுகாப்புச்சுவர் மற்றும் பளிங்குச் சுவர்கள் அமைக்கப்பட்டமை.



சீகிரிய நகர நிர்மாணம்



பளிங்குச் சுவர்



சிங்கத்தின் பாதமும் படிக்கட்டுக்களும்

**32) சிகிரியாவின் பூங்கா பற்றிய விடயங்களைத் தருக?**


★ இது மகுள் உயன என அழைக்கப்படுகிறது.

★ இப் பூங்காவை பரணவிதான என்னும் வரலாற்று ஆசிரியர் பிரமத வனம் என பெயரிட்டுள்ளார்.

★ சிகிரியாப்பூங்கா நீர்ப்பூங்காவுடன் கூடியதாக காணப் படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிகிரியா பூங்கா

**33) சிகிரியா ஓவியம் பற்றிய விடயங்களைத் தருக?**

★ சிகிரியா ஓவியங்களிலுள்ள பெண்கள் அப்சரசுகள், அல்லது அணங்குகள் என அழைக்கப்பட்டனர்.

★ இவ் ஓவியங்கள் மின்னல், முகில் போன்றவற்றை குறியீடுகளாக கொண்டமைந்துள்ளது.

★ சிகிரியா ஓவியங்கள் இந்தியாவின் அஜந்தா கலை மரபை ஒத்துக்காணப்படுகின்றன.

★ இச்சிகிரியா ஓவியங்கள் 1500 ஆண்டுகள் பழமை வாய்ந்தவையாகும்.



சீகிரிய ஓவியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**34) சிகிரியா பொய்கை மற்றும் அதன் தொழில்நுட்பம்பற்றிய விடயங்களைத் தருக?**

★ சிகிரியாவின் நீர்மலர் மிகச் சிறந்த தொழில்நுட்ப படைப்பாகும்.


★ 600 அடி உயரத்திலிருந்து வேகமாகப்பாய்ந்தோடும் நீரோட்டத்தை திடீரென தடை செய்வதன் மூலம் அந்நீரை மேலெழச் செய்தல்.

★ மேலெழுந்து நீரைதுளை செய்த கற்களைப் பதித்து அதனூடாக வெளியேற்றுவதன் மூலம் நீரை அலங்காரம் செய்தல்.

★ துளைகளினூடாக மேலெழுந்து நீரை வெவ்வேறு உயரங்களில் வெளியேறச் செய்வதற்காக அத்துளைகளின் விட்டங்கள் கூட்டி அல்லது குறைக்கப்படல்.



நீர் மலர்



நீராடும் தடாகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**35) தொட்டுணரமுடியாத மரபுரிமை என்றால் என்ன?**

★ பரம்பரை பரம்பரையாக மக்கள் குழுவால் முன்னெடுத்துச் செல்லப்படும் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் போன்ற கலாசார மரபுரிமைகள் தொட்டுணர முடியாத மரபுரிமை எனப்படும்.

**36) யுனெஸ்கோ நிறுவனம் தொட்டுணரமுடியாத மரபுரிமைகளை இனங்காணும் போது கவனத்திற்கொள்ளும் விடயங்கள் எவை?**

★ நாட்டார் மொழிவழக்கும் கருத்துவெளிப்பாடும்.

★ அரங்கக்கலைகள், நாட்டார் பாடல்கள், நாட்டார் இசை

★ சமூகப்பழக்கவழக்கங்கள், வழிபாடுகள், நம்பிக்கைகள், விழாக்கள்.

★ இயற்கையும் சுற்றாடலிலிருந்து பெறும் அறிவும் பழக்கமும்.

★ மரபு ரீதியான கலைநுட்பங்கள்.

**37) நாட்டார் மொழிவழக்கில் கருத்து வெளிப்பாடு தொடர்பான விடயங்களைக் குறிப்பிடுக?**

★ சிங்கள் மொழிக்கு 2500 ஆண்டு கால வரலாறு உண்டு.

★ தமிழ் மொழிக்கு வரையறுக்கப்படாத நீண்டகால வரலாறு உண்டு.

**38) புராதன இலங்கையில் துட்டகைமுனு மன்னன் காலத்தில் அரங்கக்கலை நிலவியமைக்கான சான்றுகளைக் குறிப்பிடுக?**

★ ருவன் வெலிசாயத் தூபிக்கு அடிக்கல் நாட்டும் வைபவத்திற்கு துட்டகைமுனு மன்னர் நடனப் பெண்களும் வாத்தியங்களும் கொண்ட குழுவினால் அழைத்து வரப்பட்டதாக மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது.

**39) இலங்கையின் புராதன அரங்கக் கலை தொடர்பான விடயங்களை ஆராயும் போது அறிந்து கொள்ளக்கூடிய மன்னர்களைக் குறிப்பிடுக.**

★ துட்டகைமுனு

★ 1ம் பராக்கிரமபாகு

★ 2ம் பராக்கிரமபாகு

**40) ஆடல், பாடலில் சிறந்து விளங்கிய பெண் என மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் பராக்கிரமபாகுவின் மனைவி யார்?**

★ ருபவதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**41) இலங்கையில் முற்காலத்தில் காணப்பட்ட ஆடல், பாடல்கள் தொடர்பான ஆதாரங்களை வெளிப்படுத்தும் இலக்கியங்களைக் குறிப்பிடுக?**

★ மகாவம்சம்

★ கவிசிலுமின

★ சத்தர்மாலங்கார

**42) பல்வேறு ஆடல், பாடல்கள், மதுர கீதங்களுடன் விழாக்கள் நடத்தியதாக மகாவம்சத்தால் கூறப்படும் மன்னன் யார்?**

★ 2ம் பராக்கிரமபாகு

**43) இலங்கையின் முற்காலத்தில் ஆடல் பாடல்களின் போது பயன்படுத்தப்பட்ட சங்கீத உபகரணங்களைக் குறிப்பிடுக.**

★ மேளங்கள்

★ வீணை

★ குழல்

**44) அநுராதபுரப் பகுதியில் எம் மன்னன் தொடர்பான நாட்டார் பாடலொன்று வழக்கத்தில் உள்ளது?**

★ தாதுசேன மன்னன் (கலாவாவி அமைத்தமை பற்றி)

**45) புராதன கால இலங்கையில் பாடப்பட்ட நாட்டார் பாடல்களின் வகைகளைக் குறிப்பிடுக?**

★ விவசாயப்பாடல்

★ வண்டிப்பாடல்

★ மீனவர்பாடல்

★ சுரங்கப்பாடல்

**46) நாட்டார் பாடல்களில் பாடப்பட்ட கருப்பொருள்களைக் குறிப்பிடுக?**

★ பெற்றோர் பெரியோரின் குண நலன்களைப் பாடுதல்.

★ தாலாட்டுதல்.

★ இளைய பரம்பரையை நல்வழியில் கொண்டு வரல்.

★ பசியை வெளிப்படுத்தல்.

★ உறவினர்களிடையே தொடர்புகளை வெளிப்படுத்தல்.

★ பண்டைய மக்களின் அனுபவங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**47) புராதன இலங்கையில் தொட்டுணர முடியாத மரபுரிமைகளாகக் காணப்பட்ட பழக்கவழக்கங்களைக் குறிப்பிடுக?**

★ பெற்றோர், ஆசிரியரை வணங்கல்
★ கைகழுவி உணவுண்ணல்
★ ஜீவராசிகளுக்குக் கருணை காட்டல்
★ ஏழை, எளியவருக்கு உதவுதல்
★ மரியாதை செலுத்தல்

**48) பண்டைய சமூகத்தில் மனிதனின் பிறப்பிலிருந்து கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் வரை பின்பற்றப்படும் சடங்கு நிகழ்வுகள் அல்லது சம்பிரதாய நிகழ்வுகளைக் குறிப்பிடுக?**



★ பெயர் வைத்தல்
★ காதுகுத்தல்
★ சோறூட்டல்
★ ஏடு தொடக்கல்

**49) இராசரட்டை நாகரிக காலத்தில் பின்பற்றப்பட்ட பிரதான வைபவங்களைக் குறிப்பிடுக?**

★ வெசாக்விழா
★ நீர் விளையாட்டு விழா
★ ஏர் பூட்டு விழா

**50) தற்காலத்தில் வருடாந்தம் கொண்டாடப்படும் பௌத்த விழாக்களைக் குறிப்பிடுக?**

★ வெசாக் விழா
★ எசலப் பெரஹரா
★ உப சம்பதா சடங்கு
★ சிங்களப் புதுவருடப் பிறப்பு

எசல பெரஹரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**51) இந்தக்களின் மரபு ரீதியான வருடாந்த வைபவங்களைக் குறிப்பிடுக?**

★ சித்திரை வருடப்பிறப்பு
★ தைப் பொங்கல்
★ தீபாவளி

**52) இஸ்லாமிய மக்களின் வைபவங்கள்?**

★ ரம்ழான்

**53) கிறிஸ்தவ மக்களின் வைபவங்களைக் குறிப்பிடுக?**

★ நத்தார்
★ பெரிய வெள்ளி
★ உயிர்த்த ஞாயிறு

**55) இலங்கையரிடம் மரபு ரீதியாகக் காணப்படும் அறிவுப்பழக்க வழக்கங்களைத் தருக?**

★ நீர்ப்பாசனத் துறை - குளம் அமைத்தல், மடைக்கதவு, கால்வாய் அமைத்தல்.
★ விவசாயத்துறை - விதை விதைத்தல், பயிர்களை பாதுகாத்தல், அறுவடை செய்தல்
★ கைத்தொழில் துறை - தச்சுத் தொழில், இரத்தினக்கல் தொழில்.
★ மரபு ரீதியான வைத்தியத்துறை

**56) இலங்கையின் மரபுரீதியான கலைநுட்பங்களைக் குறிப்பிடுக?**


★ சுவர் ஓவியம்
★ பாய் பின்னல்
★ முகமுடி தயாரிப்பு
★ பொம்மலாட்டம்
★ கலை
★ பித்தளைப் பாத்திரம் தயாரிப்பு.
★ மெழுகுக்கலை

**57) முகமூடி செய்வதில் பிரசித்திபெற்ற இடங்களைக் குறிப்பிடுக?**


★ அம்பலாங்கொடை
★ உடுபில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




புல்லால் தயாரிக்கப்பட்ட கைப் பைகள்



பித்தளை செதுக்கல் கலை



முக மூடிகள்



பாய் இழைத்தல்

**58) ஆரம்ப கால இலங்கையில் முகமூடிகள் பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.**

★ சாந்திகர்ம சடங்குகளின் பொருட்டும் கூத்துக்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டமை.

★ பிசாசுகளினதும் தேவர்களினதும் உருவங்களுக்காக பயன்படுத்தப்பட்டமை.

★ பயத்தையும் மகிமையையும் காட்டுவதற்கு முகமூடிகள் பயன்படுத்தப்பட்டமை.

**59) அரக்கு சித்திரக்கலைக்கு பிரசித்தி பெற்ற இடம் யாது?**

★ மத்திய மலை நாடு

**60) அரக்கு எவ்வாறு பெற்றுக் கொள்ளப்படுகிறது?**


★ கெப்பெட்டியா எனும் செடியில் வாழும் லாக்ஷா எனும் சிற்றுயிரினத்திலிருந்து பெறப்படும் பசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**61) அரக்கு சித்திரக்கலையினூடாக உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் எவை?**

- ★ ஊன்றுகோல்
- ★ கைத்தடி
- ★ மரத்தினாலான வெற்றிலைத்தட்டம்
- ★ மரத்தினாலான சாடிகள்
- ★ வீட்டுப்பாவனைப் பொருட்கள்
- ★ விசிறிக் கைபிடி
- ★ ஆலவட்டம்
- ★ ஏட்டுச்சுவடி
- ★ அட்டை அலங்காரம்




அரக்குச் சித்திரக்கலை

**62) எமது பண்பாட்டுப் பாரம்பரியங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவங்களைக் குறிப்பிடுக?**

- ★ முன்னோர்களின் ஆக்கத்திறன், திறமை, அனுபவம், மனப்பாங்கு போன்றவைகளை வெளிப்படுத்துவதனால் அதனை எதிர்கால சந்ததியினர் அனுபவிக்கும்பொருட்டு பாதுகாத்தல் வேண்டும்.
- ★ இலங்கைக்குரித்தான கலாச்சாரத்தை உலகத்திற்கு எடுத்தியம்ப அவற்றைப் பாதுகாத்தல் வேண்டும்.
- ★ சுற்றுலாக் கைத்தொழில் வளர்ச்சியை அதிகரிக்கும் பொருட்டு பாதுகாத்தல் வேண்டும்.
- ★ எமது பாரம்பரியங்களை பாதுகாப்பதனூடாக இன்றைய சமுதாயத்தின் நிலைத்திருப்பிற்கு அவற்றைப் பயன்படுத்த முடியும்.
- ★ நற்பண்புகள் பழக்க வழக்கங்களைப் பாதுகாப்பதன் மூலம் தற்கால சமூகத்தினை பாதுகாத்துக்கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இலங்கையில் உலகக் கலாசார மரபுரிமைகள் காணப்படும் இடங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01) ரன்மசு பூங்கா அமைந்துள்ள இடம் யாது?
i. பொலநறுவை ii. அநுராதபுரம்
iii. கண்டி iv. கொழும்பு

02) ஐக்கிய நாடுகள் சபையின் விஞ்ஞான பண்பாட்டு அமைப்பு எது?
i. யுனஸ்கோ ii. யுனிசெப்
iii. ஐக்கியநாடுகள் சபை iv. விஞ்ஞான அமைப்பு

03) உலகப் பெருஞ்சுவர் அமைந்துள்ள இடம் யாது?
i. யப்பான் ii. இந்தியா
iii. சீனா iv. இலங்கை

04) இலங்கையின் புராதன தலைநகரம் எது?
i. அநுராதபுரம் ii. கண்டி
iii. கொழும்பு iv. பொலநறுவை

05) அநுராதபுரம் உலகமரபுரிமை பட்டியலில் சேர்க்கப்பட்ட ஆண்டு?
i. *1997* ii. *1982* iii. *1896* iv. *1892*

06) சிகிரியா எம் மன்னனால் நிறுவப்பட்டது?
i. காசியப்பன் ii. பராக்கிரமபாகு
iii. வசபன் iv. பண்டுகாபயன்

07) 1982ம் ஆண்டு உலக மரபுரிமைக்கு உட்படுத்தப்படாத இடம் எது?
i. பழைய அநுராதபுரநகரம்
ii. சிகிரியா
iii. ரஜமஹாவிகாரை
iv. பண்டைய பொலனறுவை நகரம்

08) காலிக்கோட்டை முதலில் யாரால் கட்டப்பட்டது?
i. பிரித்தானியரால்
ii. போர்த்துக்கேயரால்
iii. ஒல்லாந்தரால்
iv. மன்னர்களால்

09) தாதுசேனனைக் கொலை செய்து அரசினை பெற்றவன் யார்?
i. முகலானன் ii. 1ம் சேனன்
iii. காசியப்பன் iv. 2ம் சேனன்

10) ருவன்வெலிசாயவிற்கு அடிக்கல் நாட்டுவதற்கு வரவழைக்கப்பட்ட மன்னன் யார்?
i. துட்டகைமுனு ii. பண்டுகாபயன்
iii. வசபன் iv. பராக்கிரமபாகு

11) தாதுசேனனால் அமைக்கப்பட்ட வாவி யாது?
i. ஹிருளுவாவி ii. கந்தளாய்
iii. கலாவாவி iv. திஸ்ஸவாவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12) வெசாக்விழா, ஏர்பூட்டுவிழா என்பன எவ் நாகரிக காலத்தில் நடைபெற்றது?

i. இந்து நாகரிக காலம்
ii. இராசரட்டை நாகரிகம்
iii. தென்மேற்கு நாகரிகம்
iv. பௌத்த நாகரிகம்

13) முகமூடிகளில் பெரும்பாலும் எவ்வாறான உருவங்கள் செய்யப்பட்டன.

i. பிசாசுகளினதும், அரசர்களினதும்
ii. அரசர்களினதும், அரசிகளினதும்
iii. பிக்குமார்களினதும், பிசாசுகளினதும்
iv. தேவர்களினதும், பிசாசுகளினதும்

14) இலங்கையில் முகமூடிகள் செய்வதில் பிரசித்தி பெற்ற பிரதேசங்கள் எவை?

i. உடுபில, புத்தளம்
ii. கொழும்பு, யாழ்ப்பாணம்
iii. அம்பலாங்கொட, உடுபில
iv. அம்பாந்தோட்டை, அம்பலாங்கொட

15) மத்திய மலைநாடு எக்கலைக்கு பிரசித்தி பெற்றது?

i. முகமூடி செய்யும் கலைக்கு
ii. பொம்பலாட்டம்
iii. அரக்கு சித்திரக்கலை
iv. பித்தளை செதுக்கல் கலை

16) அரக்கு சித்திரக்கலைக்கு பயன்படும் செடியின் பெயர் யாது?

i. முல்லை　　ii. கெப்பெட்டியா
iii. காட்டுச்செடி　　iv. பூஞ்செடி

17) கலாசார மரபுரிமைகள் எத்தனை வகைப்படும்?

i. இரண்டு　　ii. ஆறு
iii. நான்கு　　iv. பல

18) உலக மரபுரிமையாக ஆறு இடங்களை உலகுக்கு வழங்கிய நாடு எது?

i. இந்தியா　　ii. சீனா
iii. இலங்கை　　iv. பிரான்ஸ்

19) முற்காலத்தில் எவ்வாறு மழை நீரை சேமித்தனர்?

i. குளங்கள், அணைகள் என்பவற்றின் மூலம்
ii. வயல்களில் சேமித்தனர்
iii. தொட்டிகளை அமைத்து
iv. குழிகளை அமைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20) நிசங்கலதா மண்டபம் எங்கு அமைந்துள்ளது?
i. அநுராதபுரம் ii. புத்தளம்
iii. பொலனறுவை iv. யாழ்ப்பாணம்

21) எம்மால் தொடக்கூடியவையாக இருக்கும் பாரம்பரியங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?
i. தொட்டுணரக்கூடிய பாரம்பரியங்கள்
ii. தொட்டுணரமுடியாத பாரம்பரியங்கள்
iii. பாரம்பரியங்கள்
iv. கலாசாரம்

22) பின்வருவனவற்றுள் தொட்டுணர முடியாத பாரம்பரியம் எது?
i. கலை அம்சங்கள் ii. பெரியோரை வணங்குதல்
iii. குளங்கள் iv. கால்வாய்கள்

23) உலகில் சிறிய தீவாக காணப்படும் நாடு எது?
i. இந்தியா ii. அவுஸ்ரேலியா
iii. இத்தாலி iv. இலங்கை

24) உலகில் இலங்கையின் தனித்துவத்தை காண்பதற்கு பின்வருவனவற்றுள் எது உதவுகின்றது?
i. கலாசார மரபுரிமை
ii. கலை அம்சங்கள்
iii. இலங்கையின் அமைவிடம்
iv. பாரம்பரியங்கள்

25) கி.பி 2011 யுனஸ்கோ அமைப்பினால் எத்தனை கலாசார மரபுரிமை உலக மரபுரிமையாக அடையாளங் காணப்பட்டது?
i. 704 ii. 705
iii. 707 iv. 706

26) மொஹஞ்சதாரோ நகர் எவ் நாட்டில் உள்ளது?
i. இத்தாலி ii. பிரான்ஸ்
iii. பாக்கிஸ்தான் iv. சீனா

27) பொலநறுவை மிகவும் சிறந்த நகராக விளங்கிய நூற்றாண்டு எது?
i. 11ம், 13ம் நூற்றாண்டு ii. 12ம், 13ம் நூற்றாண்டு
iii. 13ம், 14ம் நூற்றாண்டு iv. 15ம், 16ம் நூற்றாண்டு

28) தம்புள்ளை ரஜமஹாவிகாரை உலக மரபுரிமைப்பட்டியலில் சேர்க்கப்பட்டதன் காரணம் யாது?
i. சிறப்பு வாய்ந்த சித்திரங்களின் காரணமாக
ii. பெரிய விகாரை என்பதால்
iii. மிகவும்அழகானது என்பதால்
iv. நீண்டகால வரலாற்றையுடையது என்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29) காலிக் கோட்டை உலகமரபுரிமையாக்கப்பட்ட ஆண்டு எது?
i. 1986 ii. 1896 iii. 1988 iv. 1898

30) "மகுல் உயன்" என்ற பூங்காவை "பிரமதவனம்" என பெயரிட்டவர் யார்?
i. துட்டகைமுனு ii. பரணவிதான
iii. காசியப்பன் iv. வசபன்

31) சிகிரியாவில் காணப்படும் படைப்புகளில் 1500 ஆண்டு கால பழமை வாய்ந்த அம்சம் எது?
i. நீர்ப்பூங்கா
ii. சிகிரிய குன்று
iii. பெண்களின் உருவம்
iv. சிகிரியாவின் பாதுகாப்பு சுவர்

32) தமிழ் மொழியினாலும் முற்காலத்தில் நிலவிய ஏனைய மொழியினாலும் தாக்கம் பெற்ற மொழி எது?
i. சிங்களம் ii. சமஸ்கிருதம்
iii. ஆங்கிலம் iv. டச்சு

33) தற்போது சிங்களக் கலாச்சாரத்துடன் தொடர்புடைய நாட்டில் நிலவும் கலை எது?
i. நாட்டியக்கலை ii. அரங்க கலை
iii. சித்திரக்கலை iv. கூத்துக்கலை

34) 1ம் பராக்கிரமபாகு மன்னனின் மனைவியான ரூபாவதி பற்றி கூறும் நூல் எது?
i. சூளவம்சம் ii. தீபவம்சம்
iii. இராஜவலிய iv. மகாவம்சம்

35) தாதுசேன மன்னன் கலாவாவி அமைத்தமை பற்றி நாட்டார் பாடல் எப்பிரதேசத்தில் வழக்கில் உள்ளது?
i. புத்தளம் ii. அநுராதபுரம்
iii. பொலனறுவை iv. மட்டக்களப்பு

36) பௌத்த பழக்கவழக்கங்களுக்கு முதலிடம் கொடுத்து நடைபெறும் வைபம் எது?
i. சிங்களபுதுவருடம் ii. தைப்பொங்கல்
iii. ரம்ழான் பெருநாள் iv. நத்தார் பண்டிகை

37) முகமூடிகள் எதற்காக செய்யப்பட்டன?
i. சடங்குகளின் பொருட்டு, கூத்துகளின் பொருட்டு
ii. விளையாடுவதற்கு
iii. அழகிற்கு
iv. சடங்கு சம்பிரதாயத்திற்கு அன்றி வேறு தேவைகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

38) ஊன்றுகோல், கைத்தடி, ஆலவட்டம் முதலியவற்றை உற்பத்தி செய்யப் பயன்படும் கைத்தொழில் யாது?
i. முகமூடி கைத்தொழில் ii. மெழுகு கைத்தொழில்
iii. இரும்பு கைத்தொழில் iv. அரக்கு கைத்தொழில்

39) அதிகளவிலான கலாச்சரர உரிமைகளை கொண்ட நாடு பின்வருவனவற்றுள் எது?
i. இத்தாலி ii. பிரான்ஸ்
iii. இலங்கை iv. சீனா

40) காலிக் கோட்டை பாதுகாப்பு அரணாகப் பலமிக்கதாக யாரால் கட்டப்பட்டது?
i. போர்த்துக்கேயர் ii. பிரித்தானியர்
iii. பிரான்சியர் iv. ஒல்லாந்தர்

**சரியாயின் (✓) பிழையாயின் (X) எனவும் அடையாளம் இடுக**

41) 1978 தலதாமாளிகை உள்ளிட்ட கண்டி நகரம் உலக மரபுரிமைபட்டியலில் சேர்க்கப்பட்டது. ( )
42) மகுல்மடுவ மண்டபம் கண்டி நகரில் காணப்படுகிறது. ( )
43) இலங்கையின் புராதன தலைநகரம் கொழும்பு ஆகும். ( )
44) சீனப்பெருஞ்சுவர் பண்டைய பாதுகாப்புச் சுவராக குறிப்பிடப்பட்டுள்ளது ( )
45) துட்டகைமுனு மன்னனால் நிறுவப்பட்ட சிகிரியாவிற்கு பல கதைகள் உண்டு. ( )

**இடைவெளி நிரப்புக**

46) சிங்கள மொழிக்கு ................... ஆண்டுகள் அளவிலான வரலாறு உண்டு.
47) இலங்கை நீண்ட ..................... உடைய நாடு ஆகும்.
48) இலங்கையின் தனித்துவத்தை எடுத்துக்காட்ட நாம் ..................... பாதுகாக்க வேண்டும்.
49) லோவமகாபாய, அபயகிரிய என்பன ..................... நகரத்தில் காணன்கூடியதாக உள்ளது.
50) சிகிரியா 1982ம் ஆண்டு ......................... ஆக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 2 | 2) | 1 | 3) | 3 | 4) | 1 | 5) | 2 |
| 6) | 1 | 7) | 3 | 8) | 2 | 9) | 3 | 10) | 1 |
| 11) | 3 | 12) | 2 | 13) | 4 | 14) | 3 | 15) | 3 |
| 16) | 2 | 17) | 1 | 18) | 3 | 19) | 1 | 20) | 3 |
| 21) | 1 | 22) | 2 | 23) | 4 | 24) | 1 | 25) | 3 |
| 26) | 3 | 27) | 2 | 28) | 1 | 29) | 3 | 30) | 2 |
| 31) | 3 | 32) | 1 | 33) | 2 | 34) | 4 | 35) | 2 |
| 36) | 1 | 37) | 1 | 38) | 4 | 39) | 3 | 40) | 4 |
| 41) | ✗ | 42) | ✓ | 43) | ✗ | 44) | ✓ | 45) | ✗ |


46) 2500 47) வரலாற்றை

48) கலாசார மரபுரிமைகளை

49) அநுராதபுர 50) உலகமரபுரிமை



தூபாராம



அபயகிரி விகாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலகு 04

# பிற்கால ஆட்சி மையங்கள்

**அறிமுகம்.**
இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இலங்கையில் ஐந்து தலைநகரங்கள் உருவாகின. இவையாவும் காலத்திற்குக் காலம் இடம்மாறி நாட்டின் பொருளாதார, அரசியல் சமூக நடவடிக்கைகளில் பல்வேறுபட்ட தாக்கங்களை ஏற்படுத்தியது.

**01) இலங்கையின் முதல் இராசதானி எது?**
- ★ அநுராதபுரம்

**02) அநுராதபுரம் எத்தனை ஆண்டுகள் தலைநகராக இருந்தது?**
- ★ *1500* ஆண்டுகள்

**03) இலங்கை வரலாற்றில் நீண்ட காலம் தலைநகராக விளங்கிய இராசதானி எது?**
- ★ அநுராதபுரம்

**04) இராசரட்டை நாகரிகத்துக்கு உட்படும் தலைநகரங்கள் எவை?**
- ★ அநுராதபுரம்
- ★ பொலநறுவை

**05) இராசரட்டை நாகரிகம் முழுமையாக வீழ்ச்சியடைந்த ஆண்டு யாது?**
- ★ கி.பி *1215*

**06) இராசரட்டையின் வீழ்ச்சியினைத் தொடர்ந்து புதிதாகத் தோற்றம் பெற்ற தலைநகரங்கள் எவை?**
- ★ தம்பதெனியா
- ★ யாப்பகுவ
- ★ குருநாகல்
- ★ கம்பளை
- ★ கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07) பொலநறுவையை ஆட்சி செய்த மிகப்பிரதானமான மன்னர்கள் யாவர்?**

★ *1ம் விஜயபாகு*

★ *1ம் பராக்கிரமபாகு*

★ *நிஸங்கமல்லன்*

**08) இராசரட்டை நாகரிகம் வீழ்ச்சியடைந்தமைக்கான உடனடிக் காரணம் யாது?**

★ *1215ல் ஏற்பட்ட கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு*

**அநுராதபுரம்**

★ தலைநகரம் - அநுராதபுரம்

★ முதல் அரசன் - பண்டுகாபயன்

★ கடைசி அரசன் - 5ம் மகிந்தன்

★ புகழ் பெயர்கள் - முதல்நகர், வரலாற்று நகர், பௌத்த நகர், தொண்மை நகர்,

★ வீழ்ச்சிக்குக் காரணம் - சோழர் கி.பி.993 இல் படையெடுத்தல்

**பொலன்னறுவை**

★ தலைநகரம் - பொலன்னறுவை

★ முதல் அரசன் - 1ம் விஜயபாகு

★ கடைசி அரசன் - பராக்கிரம பாண்டியன்

★ புகழ் பெயர்கள் - செழிப்பு நகரம், விவசாய நகரம், தானியக் களஞ்சிய நகரம், சோழர் கலை நகரம்.

★ வீழ்ச்சிக்குக் காரணம் - கி.பி. 1215இல் கலிங்க நாட்டு மாகன் படை யெடுத்தல்

**09) கலிங்கமாகன் ஆக்கிரமிக்கும் போது பொலநறுவையில் ஆட்சிபுரிந்த மன்னன் யார்?**


★ பராக்கிரமபாண்டியன்

**கலிங்க மாகன் ஆக்கிரமிப்பு**


கி.பி. 1215ம் ஆண்டு 24,000 மலாய வீரர்களுடன் இலங்கை மீது படையெடுத்து வந்த மாகன் பராக்கிரம பாண்டியனைக் கைது செய்ததுடன் நாட்டில் நாச வேலைகளைச் செய்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அநுராதபுர நகரத் திட்ட வரைபு



பொலன்னறுவை நகரத்திட்ட வரைபு

**10) இராசரட்டை நாகரிகத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து மக்கள் இடம்பெயர்ந்து சென்ற இடம் யாது?**

★ இலங்கையின் தென்மேற்கு

**11) பொலன்னறுவையில் கலிங்க மாகன் ஆட்சிபுரியும் போது தோற்றம் பெற்ற ஏனைய பிராந்திய அரசுகளையும் அதன் தலைவர் களையும் தருக?**

★ மினிப்பே - சங்கத்தளபதி (கந்தனியக்குன்று)
★ யாப்பகுவ - சுபதளபதி
★ உறுகுணை - புவனேகபாகு ஆதிபாத (கோவிந்தமலை)
★ தம்பதெனியா - விஜயபாகு

**12) கலிங்கமாகனின் படையினர் தெற்கு நோக்கி வருவதற்கு எதிராகத் துணிந்து செயற்பட்ட தலைவர் யார்?**


★ 3ம் விஜயபாகு (வன்னிராஜா)

**13) தென்மேற்குப் பகுதிகளில் காலத்துக்குக் காலம் இராச்சியங்கள் உருவாகியமைக்கான பாதுகாப்புக் காரணங்கள் எவை?**

★ பொலன்னறுவை இராசதானி வீழ்ச்சியுற்ற பின் உருவாகிய அரச வம்சங்களுக்கிடைய மோதல் ஏற்பட்டமையால் காலத்திற்குக் காலம் புதிய இராசதானி தோற்றம் பெற்றமை
★ அந்நிய நாடுகளிலிருந்து எழுந்த ஆக்கிரமிப்பு, அச்சுறுத்தல்கள், என்பவற்றிலிருந்து தலைநகர்களைப் பாதுகாத்துக் கொள்ள இராசதானிகள் இடம்பெயர்ந்தமை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**14) இராசதானிகள் காலத்திற்குக் காலம் தோற்றம் பெற்றமைக்கான பொருளாதாரக் காரணங்கள் எவை?**

- ★ உலகில் நிலவிய வர்த்தக நடவடிக்கைகளுக்கு ஏதுவான திரவியங்கள் ஈரவலயத்தில் அதிகமாக விளைவதால் இராசதானிகள் தோற்றம் பெற்றன.
- ★ இராசரட்டை நீர்ப்பாசனத்தொகுதி அழிவுற்றமையால் அப் பகுதியினை மீளவும் அபிவிருத்தி அடையச் செய்வது சிரமமாக இருந்தமையால் அங்கு இராசதானிகள் தோற்றம் பெற்றன.
- ★ ஈரவலயத்திற்கு பொருத்தமான சிறிய வயல்களில் பயிர்களைப் பயிரிடுவதற்கு மக்கள் பழக்கப்பட்டமையால் புதிய இராசதானிகள் தோற்றம் பெற்றன.

## தம்பதெனியா இராச்சியம்

**தம்பதெனியா**

| | | |
|---|---|---|
| ★ காலம் | - | கி.பி 1232 தொடக்கம் 1272 |
| ★ 1வது அரசர் | - | 3ம் விஜயபாகு |
| ★ இறுதி அரசர் | - | 1ம் புவனேகபாகு |
| ★ வேறு பெயர்கள் | - | தம்பதெனி, தம்புதெனியா, ஜம்புதோணி, தெனியாயபுர |
| ★ புகழ்ப்பெயர் | - | தென்மேற்கின் முதல் நகர், வத்கிமி நகர் |

**15) தம்பதெனியாவின் முதலாவது மன்னரான 3ம் விஜயபாகு பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக.**

- ★ ஆட்சிக்காலம் - கி.பி 1232 தொடக்கம் 1236
- ★ மறுபெயர்கள் - வத்கிமி விஜயபாகு, வன்னிராஜா

**16) தம்பதெனியாவைத் தலைநகராக்கிய 3ம் விஜயபாகுவின் அரசியல் சாதனைகளைக் குறிப்பிடுக.**


- ★ கலிங்கமாகன் பொலநறுவையில் அரசாட்சி புரிந்து கொண்டிருந்த போது மாயரட்டையில் சுதந்திரமான சிங்கள அரசை ஸ்தாபித்தமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17) 3ம் விஜயபாகுவின் சமயப் பணிகளைக் குறிப்பிடுக.**

- ★ கொத்மலையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்த புனித தந்த தாதுவையும் பாத்திர தாதுவையும் பெலிகலை மலையுச்சிக்கு எடுத்து வந்து தலதாமாளிகையை நிறுவியமை.
- ★ வத்தளை விகாரை, விஜயசுந்தர ராமய எனும் விகாரைகளை நிறுவியமை.
- ★ உபசம்பதா சடங்கை நடாத்தி புத்த சாசனத்தைத் தூய்மைப் படுத்தியமை.



தம்பதெனியா அரசமாளிகைக்குள் பிரவேசிக்கும் படிவரிசை

**2ம் பராக்கிரமபாகு**

| | | |
|---|---|---|
| ★ ஆட்சிக்காலம் | - | கி.பி 1236 - 1270 |
| ★ தந்தை | - | 3ம் விஜயபாகு |
| ★ குரு | - | சங்கரக்கிததேரர் |
| ★ உதவி அமைச்சர் | - | தேவபதிராஜ |
| ★ பட்டப்பெயர் | - | கலிகால சாகித்திய சர்வக்ஞ பண்டிதர் |
| ★ எழுதிய நூல் | - | கவிசிலுமின |
| ★ கற்றமொழிகள் | - | பாளி, சிங்களம், சமஸ்கிருதம் |

**18) 2ம் பாராக்கிரமபாகுவின் அரசியல் பணிகளைக் குறிப்பிடுக.**

- ★ 40 வருடங்களாக கலிங்கமாகனிடமிருந்த இராசரட்டையின் ஆட்சியை மீட்டமை (கி.பி. 1255).
- ★ கி.பி. 1247இல் சந்திரபானுவின் 1வது ஆக்கிரமிப்பை வெற்றி கொண்டமை.
- ★ கி.பி. 1261இல் சந்திரபானுவின் 2வது ஆக்கிரமிப்பை வெற்றி கொண்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**19) 2ம் பாராக்கிரமபாகுவின் அரசியல் பணிகளைக் குறிப்பிடுக.**


★ தனது தந்தையால் பெலிகலை விகாரையில் வைக்கப்பட்டிருந்த புனித தந்தத்தை தம்பதெனியாவிற்கு எடுத்து வந்த அங்கு தலதாமாளிகையைக் கட்டிவித்தமை.

★ தேவபதிராஜா என்ற அமைச்சர் மூலம் பொருளாதார ரீதியான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

★ சிவனொலிபாதமலைக்குச் செல்லும் பாதைகளை சீர்திருத்தி அமைத்தமை.

★ நந்தவனங்கள், பாலங்கள் அமைத்தமை.

★ பொருளியல் நடவடிக்கையாக தெங்குப்பயிர்ச்செய்கையை மேற்கொண்டமை.



பெலிகல விகாரை

**கலிங்கமாகன்**

★ ஆட்சிஆண்டு - 1215 தொடக்கம் 1255

★ தோற்கடித்த ஆட்சியாளன் - பராக்கிரம பாண்டியன்

★ தோற்றது - 2ம் பராக்கிரமபாகுவிடம்

★ சொந்த நாடு - கலிங்கதேசம்

**சந்திரபானு**

★ நாடு - தென்கிழக்காசிய மலாயக்குடா நாடு

★ படையெடுத்ததன் நோக்கம் - புனித தந்ததாது, பாத்திரதாது என்பவற்றைக் கைப்பற்றல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாப்பகுவ இராச்சியம்**

- ★ காலம் - 1272 - 1300
- ★ முதல் அரசன் - 1ம் புவனேகபாகு
- ★ வேறுபெயர்கள் - சுபபர்வத, சுபபுரம், சுபகிரி, 2ம் சிகிரியா
- ★ வீழ்ச்சிக்கான காரணம் - ஆரிய சக்கரவர்த்தியின் படையெடுப்பு
- ★ வரலாற்று ஆவணம் - சூளவம்சம்

**20) 2ம் பராக்கிரமபாகுவைத் தொடர்ந்து ஆட்சிப்பீடமேறிய மன்னன் யார்?**

- ★ 4ம் விஜயபாகு (போசத் விஜயபாகு)

**21) தம்பதெனியா இராசதானியில் 4ம் விஜயபாகு எத்தனை ஆண்டுகள் ஆட்சி செய்தார்?**

- ★ 2 ஆண்டுகள்
- ★ அரசமாளிகையில் ஏற்பட்ட சதியில் மித்தன் அல்லது மித்த என்பவனால் கொல்லப்பட்டமை

**22) 4ம் விஜயபாகுவின் பின் ஆட்சிப்பீடமேறிய அவனது சகோதரன் யார்?**

- ★ 1ம் புவனேகபாகு

**23) இலங்கையின் தலைநகராக யாப்பகுவவை மாற்றிய மன்னன் யார்?**

- ★ 1ம் புவனேகபாகு



யாப்பகுவ கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**24) 1ம் புவனேகபாகுவின் பணிகளைக் குறிப்பிடுக?**

- ★ யாப்பகுவவில் தலதாமாளிகையைக் கட்டுவித்தமை.
- ★ பௌத்த நூல்களை எழுதுவித்தமை.
- ★ எகிப்திய மன்னன் குவாலாவுனுடன் வர்த்தகத் தொடர்பை மேற்கொண்டமை.

## குருனாகல் இராச்சியம்

**குருனாகல் இராச்சியம்**

| | |
|---|---|
| ★ காலம் | - கி.பி 1300 - 1347 |
| ★ முதல் அரசன் | - 2ம் புவனேகபாகு |
| ★ வேறுபெயர்கள் | - அத்துக்கல்ய புரம், அத்துக்கல்ய நகரம் |
| ★ புகழ்பெயர் | - இலக்கிய மலர்ச்சி நகரம் |
| ★ வீழ்ச்சியடைந்தது | - போதிமாபா என்ற பிரதானியின் கலகம் |



குருனாகலை இராச்சியத்தின் நகரத்திட்ட வரைபு



கம்பளையிலுள்ள எம்பக்க தேவாலயம்

**25) குருனாகலைத் தலைநகரமாக்கிய மன்னன் யார்?**

- ★ 2ம் புவனேகபாகு

**26) பாரிய கற்குன்றிற்கு அருகில் அமைந்துள்ள குருனாகல் இராச்சியம் வேறு எவ்வாறு அழைக்கப்பட்டது?**

- ★ அத்துக்கல்ய

**27) 2ம் புவனேகபாகுவின் பின்னர் ஆட்சிபீடம் ஏறியவர் யார்?**

- ★ 4ம் பராக்கிரமபாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**28) குருனாகல் இராசதானி காலத்தில் 4ம் பராக்கிரமபாகு மன்னன் மேற்கொண்ட பணிகளைக் குறிப்பிடுக?**

★ பாளி மொழியில் காணப்பட்ட ஜாதக கதை நூலை "பன்சிய பணஸ் ஜாதகய" எனும் பெயரில் சிங்களத்தில் மொழி பெயர்த்தமை.

★ தலதாசிரித, சிங்கள போதி வங்ஸய, அநாகத வங்ஸய போன்ற இலக்கியங்கள் எழுதப்பட்டன.

★ கண்டிய அஸ்கிரிய பீடத்தை உருவாக்கியமை.

**29) கண்டி இராசதானியை "செங்கடகலபுரய" என அழைத்தவர் யார்?**

★ 4ம் பராக்கிரமபாகு

## கம்பளை இராச்சியம்.

**கம்பளை இராச்சியம்.**

★ காலம் - கி.பி 1347 - 1412

★ முதல் அரசன் - 4ம் புவனேகபாகு

★ வேறுபெயர்கள் - கங்கைநகரம், கங்காபுரம், கங்காஶ்ரீபுரம்

★ புகழ்ப்பெயர் - வெள்ளை யானைநகர் தென்மேற்கின் கட்டடக்கலை நகர்

**30) 4ம் புவனேகபாகுவின் தந்தை பெயர் யாது?**


★ 5ம் விஜயபாகு (சவுலு விஜயபாகு)

**31) கம்பளை இராசதானிக்கு சவாலாக விளங்கிய ஏனைய அரசுகளைக் குறிப்பிடுக?**

★ யாழ்ப்பாண அரசு

★ றைகம அரசு

★ தெடிகம அரசு



கடலாதெனிய



லங்காதிலக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**32) கம்பளை இராசதானிக் காலத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகளைக் குறிப்பிடுக?**

★ அரசருக்கு மேலதிகமாக நிஸங்க அழகேஸ்வர, சோனாதிலங்கார எனும் அதிகாரம் மிக்க தலைவர்கள் இருவர் காணப்பட்டமை.

★ நிஸங்க அழகேஸ்வர எனும் அமைச்சர் ஸ்ரீ ஜெயவர்த்தன புரவில் கோட்டை ஒன்றை நிறுவி, யாழ்ப்பாண ஆரிய சக்கரவர்த்திகளின் படைகளை பின்வாங்கச் செய்தமை

★ கடலாதெனியா, லங்காதிலக விகாரைகளும், எம்பக்க தேவாலயமும் கட்டப்பட்டமை.

★ இபன்பதூதா என்ற அரேபியா தேச சஞ்சாரி வருகை தந்தமை.

★ சீனாவின் செங்ஹோ என்ற தளபதி இலங்கையை ஆக்கிரமித்தமை.

**கோட்டை இராச்சியம்**

**கோட்டை இராச்சியம்**

★ முதல் அரசன் - 6ம் பராக்கிரமபாகு

★ இறுதி அரசன் - தர்மபாலன்

★ வேறுபெயர்கள் - ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம், ஜெயவர்த்தனபுரம்

★ புகழ்ப்பெயர் - இலக்கிய பொற்காலநகர், நீர் அரண் அரசு, சொர்க்கவாயில் அரசு

★ வீழ்ச்சிக்கான காரணம் - தர்மபாலனின் மரண சாசனம்

**33) கோட்டை இராசதானியை தலைநகராக்கியவர் யார்?**

★ 6ம் பராக்கிரமபாகு

**6ம் பராக்கிரமபாகு**

★ தந்தை - ஜயமஹலே

★ தாய் - சுனேத்திராதேவி

★ மகள் - உலகுடையதேவி

★ வளர்ப்பு மகன்கள் - அம்புலுகலகுமாரய, சப்புமல்குமாரய

★ புகழ்ப்பெயர் - பன்மொழிக் காவலன்

★ சிறப்பு - இறுதியாக ஒரே குடையின் கீழ் கொண்டுவந்தமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**35) 6ம் பராக்கிரமபாகு நாட்டை ஒன்றுபடுத்திய விதம் பற்றிக் குறிப்பிடுக?**

★ வன்னிப் பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தமை

★ யாழ்ப்பாணத்தில் கனக சூரிய சிங்கை ஆரியனைத் தோற்கடித்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியமை.

★ கண்டியில் ஜோதிய என்பவனால் ஏற்படுத்தப்பட்ட உடரட்டைபுரட்சியை அம்புலுகலகுமாரனை அனுப்பி தோற்கடித்தமை.

**36) 6ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் இடம்பெற்ற முக்கிய விடயங்களைப் பட்டியற்படுத்துக?**

★ ஐக்கியப்பட்ட நாட்டில் அமைதியான ஆட்சியை ஏற்படுத்தியமை.

★ நாட்டில் கல்வித்துறை எழுச்சியுற்றமை. முக்கிய பிரிவெனாக்கள் உருவாக்கப்பட்டமை.

★ கல்விமான்கள் தோற்றம் பெற்றமை.

★ சிறப்பான இலக்கிய ஆக்கங்கள் எழுதப்பட்டமை.

**37) கோட்டையில் 6ம் பராக்கிரமபாகு மன்னரால் நிறுவப்பட்ட பிரிவெனாக்களைக் குறிப்பிடுக.**

★ பெப்பிலியானே சுனேத்ராதேவி பிரிவெனா

★ கேரகல பத்மாவதி பிரிவெனா

**38) கோட்டையில் 6ம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் வாழ்ந்த கல்விமான்களைக் குறிப்பிடுக.**

★ வீதாகம மைத்திரி தேரர்.

★ தொட்டகமுவே ஶ்ரீராகுல தேரர்.

**39) கோட்டையில் 6ம் பராக்கிரமபாகு மன்னனின் காலத்தில் எழுதப்பட்ட நூல்களைக் குறிப்பிடுக.**

★ செலலிஹினி சந்தேச (தூதுபிரபந்தங்கள்).

★ பெரகும்ப சிரித

★ காவிய சேகர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கேரகல பத்மாவதி பிரிவெனா

## யாழ்ப்பாண இராச்சியம்

**40) யாழ்ப்பாணத்தில் பிராந்திய அரசு எவ் இராச்சியத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து உருவானது?**

★ *பொலன்னறுவை*

**41) யாழ்ப்பாண இராசதானி வரலாற்றை அறிய உதவும் இலக்கிய மூலாதாரங்களைக் குறிப்பிடுக?**

★ *யாழ்ப்பாண வைபவமாலை*

★ *செகராசசேகர மாலை*

**42) யாழ்ப்பாணத்தில் அரசாண்ட அரச வம்சம் யாது?**

★ *ஆரியசக்கரவர்த்தி வம்சம்*

**43) யாழ்ப்பாண இராசதானியில் முதல் மன்னன் யார்?.**

★ *விஜயகூழங்கை சிங்கை ஆரியன்*

**44) யாழ்ப்பாணத்தில் ஆரியசக்கரவர்த்திகள் வம்சத்தைச் சேர்ந்த எத்தனை மன்னர்கள் ஆட்சி செய்தார்கள்?**

★ *12*

**45) தனது கட்டுப்பாட்டின் கீழ் யாழ்ப்பாணத்தினை கொண்டு வந்த இராசதானி எது?**

★ *கோட்டை*

**46) போர்த்துக்கேயர் இலங்கை வரும் போது யாழ்ப்பாணத்தில் ஆட்சியாளனாக விளங்கியவர் யார்?**

★ *பரராஜசேகரன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**47) யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய அந்நிய இனம் எது? தளபதி யார்? ஆண்டு எது?**

- ★ இனம் - போர்த்துக்கேயர்
- ★ தளபதி - பிலிப்தஒலிவேரா
- ★ ஆண்டு - கி.பி *1619*

**48) யாழ்ப்பாண இராசதானி எம் மன்னன் காலத்தில் போர்த்துக் கேயருடன் தொடர்பை ஏற்படுத்தியது?**


- ★ சங்கிலியன்

**49) தமிழ், சிங்கள மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்திய அரசன் யார்?**


- ★ வரோதயன்



சங்கிலிமன்னன் சிலை



மந்திரி மனை



நல்லூர் கந்தசுவாமி கோயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயிற்சி - 01

01) பொலநறுவை எம்மன்னனின் ஆட்சிக்கு பிறகு வீழ்ச்சியடைய தொடங்கியது?
i. நிசங்கமல்லன் ii. துட்டகைமுனு
iii. 1ம் விஜயபாகு iv. மகா பராக்கிரமபாகு

02) கலிங்கமாகன் எத்தனையாம் ஆண்டு இலங்கைக்கு படை எடுத்தான்?
i. 1231 ii. 1415 iii. 1215 iv. 1125

03) கலிங்கமாகன் படையெடுத்த போது பொலனறுவை ஆட்சியாளன் யார்?
i. பராக்கிரமபாகு ii. நிஸ்ஸங்கமல்லன்
iii. 1ம் விஜயபாகு iv. பராக்கிரம பாண்டியன்

04) மினிப்பே கந்தெனிய குன்றில் கோட்டை அமைத்தவன் யார்?
i. சுப சேனாதிபதி ii. சங்க சேனாதிபதி
iii. புவனேகபாகு iv. நிஸ்ஸங்கமல்லன்

05) பின்வருவனவற்றுள் வன்னித் தலைவராக புகழ் பெற்றவர் யார்?
i. 3ம் விஜயபாகு ii. 1ம் விஜயபாகு
iii. பராக்கிரமபாகு iv. புவனேகபாகு

06) 3ம் விஜயபாகுவால் தோற்றுவிக்கப்பட்ட இராச்சியம் எது?
i. பொலனறுவை ii. அநுராதபுரம்
iii. தம்பதெனியா iv. கோட்டை

07) இலங்கையில் வாசனைத் திரவியங்கள் விளையும் வலயம் எது?
i. உலர்வலயம் ii. ஈரவலயம்
iii. உயர்வலயம் iv. தாழ்நில ஈரவலயம்

08) தம்பதெனியாவை தலைநகராக கொண்டு அரசனானவர் யார்?
i. 3ம் விஜயபாகு ii. பராக்கிரமபாகு
iii. புவனேகபாகு iv. 1ம் விஜயபாகு

09) 3ம் விஜயபாகுவால் ஐக்கியப்படுத்தப்பட்ட இடம் எது?
i. உருகுணை ii. தம்பதெனியா
iii. மாயரட்டை iv. அநுராதபுரம்

10) பாத்திர தந்ததாதுக்களை கொத்மலைக்கு எடுத்து சென்றோர் யார்?
i. மன்னன்
ii. மக்கள்
iii. பௌத்தகுருமார்
iv. தளபதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) கேகாலை மாவட்டத்தில் தலதாமாளிகையை அமைத்து தந்ததாதுவை பிரதிஷ்டை செய்த மன்னன் யார்?
i. கலிங்கமாகன் ii. சந்திரபானு
iii. 2ம் பராக்கிரமபாகு iv. 3ம் விஜயபாகு

12) சந்திரபானுவின் ஆக்கிரமிப்பை தோற்கடித்தவன் யார்?
i. 3ம் விஜயபாகு ii. கலிங்கமாகன்
iii. 2ம் பராக்கிரமபாகு iv. 6ம் பராக்கிரமபாகு

13) 2ம் பராக்கிரமபாகு எம் மன்னனுடைய மகன்?
i. 6ம் பராக்கிரமபாகு ii. கலிங்கமாகன்
iii. 2ம் பராக்கிரமபாகு iv. 3ம் விஜபாகு

14) சந்திரபானு எந்நாட்டில் இருந்து வந்து ஆக்கிரமிப்புக்களை மேற் கொண்டான்?
i. மலாயாகுடாநாடு ii. பிரித்தானியா
iii. இந்தியா iv. போர்த்துக்கல்

15) "கலிகால சாஹித்ய சர்வக்ஞ பண்டிதர்" எனும் புகழ் நாமத்தையுடையவர் யார்?
i. 3ம் விஜயபாகு ii. துட்டகைமுனு
iii. 2ம் பராக்கிரமபாகு iv. நிஸங்கமல்லன்

16) 2ம் பராக்கிரமபாகுவால் எழுதப்பட்ட நூல் யாது?
i. கவிசிலுமின ii. இராஜவலிய
iii. தீபவம்சம் iv. ஜாதக அட்டகதா

17) 2ம் பராக்கிரமபாகு மரணமடைந்த ஆண்டு எது?
i. 1217 ii. 1360 iii. 1270 iv. 1720

18) 4ம் விஜயபாகுவின் சகோதரன் யார்?
i. 2ம் பராக்கிரமபாகு ii. 3ம் பராக்கிரமபாகு
iii. 1ம் புவனேகபாகு iv. 6ம் பராக்கிரமபாகு

19) 1ம் புவனேகபாகு மன்னன் தலைநகராக கொண்ட இடம் யாது?
i. குருணாகல் ii. தம்பதெனியா
iii. பொலனறுவை iv. யாப்பகுவ

20) 1ம் புவனேகபாகு எவ் நகரத்திற்கு தூதுக்குழுக்களை அனுப்பினான்?
i. மலாய்குடாநாடு ii. கெய்ரோ
iii. பர்மா iv. எகிப்து

21) குருணாகலைத் தலைநகராக்கிக் கொண்ட மன்னன் யார்?
i. 1ம் புவனேகபாக
ii. 2ம் பராக்கிரமபாக
iii. 6ம் பராக்கிரமபாகு
iv. 2ம் புவனேகபாகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22) 2ம் புவனேகபாகுவின் பின் அரசேற்றவன் யார்?
i. 3ம் புவனேகபாகு ii. 4ம் பராக்கிரமபாகு
iii. 6ம் பராக்கிரபாகு iv. 1ம் புவனேகபாகு

23) 4ம் புவனேகபாவால் தோற்றுவிக்கப்பட்ட இராச்சியம் யாது?
i. கம்பளை ii. தம்பதெனியா
iii. அநுராதபுரம் iv. கோட்டை

24) 4ம் புவனேகபாகு மன்னன் காலத்தில் யாழ்ப்பாணம் எவ் வம்சத்தால் ஆட்சி செய்யப்பட்டது?
i. மோரிய வம்சம்
ii. ஆரியச்சக்கரவர்த்தி வம்சம்
iii. அழகேஸ்வர வம்சம்
iv. இலம்பகர்ண வம்சம்

25) 4ம் புவனேகபாகுவின் பின் கம்பளைக்கு அரசனானவன் யார்?
i. 5ம் புவனேகபாகு ii. 6ம் பராக்கிரமபாகு
iii. 3ம் விஜயபாகு iv. 5ம் பராக்கிரமபாகு

26) இபன்பதூதா எந்த நாட்டு தேச சஞ்சாரி?
i. சீனா ii. போர்த்துக்கல்
iii. கிரேக்கம் iv. அரேபியா

27) கோட்டை நகரை தலைநகராக்கிய மன்னன் யார்?
i. 5ம் புவனேகபாகு ii. 6ம் பராக்கிரமபாகு
iii. 2ம் பராக்கிரமபாகு iv. 4ம் புவனேகபாகு

28) ஜயமஹலே என்பவரின் மகன் யார்?
i. 6ம் பராக்கிரமபாகு ii. 4ம் புவனேகபாகு
iii. 5ம் புவனேகபாகு iv. 2ம் பராக்கிரமபாகு

29) 6ம் பராக்கிரமபாகு யாழ்ப்பாணத்தை வெற்றி கொள்வதற்கு யாரை அனுப்பினான்?
i. சந்திரபானுவை
ii. கலிங்கமாகனை
iii. சப்புமல் குமாரனை
iv. ஜோதிய இளவரசனை

30) யாழ்ப்பாண அரசவம்சம் என குறிப்பிடப்படும் பரம்பரை எது?
i. ஆரிய சக்கரவர்த்தி ii. நாயக்கர்
iii. சிங்கள வம்சம் iv. அழகேஸ்வரர்

31) ஆரியசக்கரவர்த்தி வம்சத்தின் முதல் மன்னன் யார்?
i. சங்கிலிமன்னன் ii. விஜயகூழங்கை
iii. பரராஜசேகரன் iv. வசபன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32) போர்த்துக்கேயர் இலங்கை வந்த போது பரராஜசேகர மன்னன் எப்பிரதேசத்தை ஆட்சிசெய்தான்?
i. கண்டி
ii. கோட்டை
iii. யாழ்ப்பாணம்
iv. கம்பளை

33) யாழ்ப்பாணம் போர்த்துக்கேயர் வசமான ஆண்டு யாது?
i. 1619 ii. 1671
iii. 1689 iv. 1769

34) தம்பதெனியா காலத்தில் சிறந்த கல்விமானாக விளங்கியவன் யார்?
i. 3ம் விஜயபாகு
ii. 1ம் புவனேகபாகு
iii. 2ம் பராக்கிரமபாகு
iv. 6ம் பாராக்கிரமபாகு

35) ஜோதிய இளவரசனின் கலவரத்தை அடக்கியவன் யார்?
i. அம்புலுகல குமாரன்
ii. சப்புமல் குமாரன்
iii. கலிங்கமாகன்
iv. சந்திரபானு

36) இலங்கை முழுவதும் இறுதியாக ஒரே ஆட்சியின் கீழ்கொண்டு வரப்பட்டது எக் காலத்திலாகும்?
i. கம்பளை ii. குருணாகல்
iii. கோட்டை iv. தம்பதெனியா

37) தம்பதெனியாவில் இருந்து தன் இராச்சியத்தை யாப்பகூவவிற்கு மாற்றியவன் யார்?
i. 1ம் புவனேகபாகு ii. நிஸ்ஸங்கமல்லன்
iii. 6ம் பராக்கிரமபாகு iv. 3ம் விஜயபாகு

38) பொலனறுவை இராச்சியம் வீழ்ச்சியுற்ற பின் உருவாகிய சுதந்திரமான பிராந்திய அரசு முதலில் எங்கு உருவானது?
i. குருணாகல் ii. தம்பதெனியா
iii. கம்பளை iv. யாழ்ப்பாணம்

39) பொலனறுவை வீழ்ச்சிக்குக் காரணமானவன் யார்?
i. கலிங்கமாகன் ii. ஜோதிய இளவரசன்
iii. நிஸ்ஸங்கமல்லன் iv. 1ம் விஜயபாகு

40) உருகுணையில் கோட்டை அமைத்தவன் யார்?
i. ஜோதிய இளவரசன் ii. சங்கசேனாதிபதி
iii. ஆதிபாத புவனேகபாகு iv. சுபசேனாதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சரியாயின் (✓) பிழையின் (X) எனவும் அடையாளம் இடுக**

41) பெலிகல யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ளது. ( )

42) ஆரிய சக்கரவர்த்திகளால் யாழ்ப்பாணம் ஆட்சி செய்யப்பட்டது. ( )

43) 3ம் விஜயபாகுமன்னன் தந்ததாதுவை பெலிகலவிற்குக் கொண்டு வந்தான். ( )

44) 6ம் பராக்கிரமபாகு ஐக்கிய நாட்டில் அமைதியான ஆட்சியை ஏற்படுத்தவில்லை. ( )

45) ஆரியச்சக்கரவர்த்தி பரம்பரையில் 12 மன்னர்கள் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்துள்ளனர். ( )

**இடைவெளி நிரப்புக.**

46) 40 ஆண்டுகள் ……………………… இலங்கையை ஆட்சி புரிந்தான்.

47) 3ம் விஜயபாகுவின் பின் அவனது மகன் …………………… ஆட்சி செய்தான்.

48) 3ம் விஜபாகு …………………… இராச்சியத்தை தோற்றவித்தார்.

49) கம்பளை இராச்சியம் ……………… அரசனால் தோற்றுவிக்கப்பட்டது

50) நிஸ்ஸங்க அழகேஸ்வர அமைச்சர் ……………………… கோட்டை ஒன்றை நிறுவினார்.

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1) | 1 | 2) | 3 | 3) | 4 | 4) | 2 | 5) | 1 |
| 6) | 3 | 7) | 2 | 8) | 1 | 9) | 3 | 10) | 3 |
| 11) | 4 | 12) | 3 | 13) | 4 | 14) | 1 | 15) | 3 |
| 16) | 1 | 17) | 3 | 18) | 3 | 19) | 4 | 20) | 2 |
| 21) | 4 | 22) | 2 | 23) | 1 | 24) | 2 | 25) | 4 |
| 26) | 4 | 27) | 2 | 28) | 1 | 29) | 3 | 30) | 1 |
| 31) | 2 | 32) | 3 | 33) | 1 | 34) | 3 | 35) | 1 |
| 36) | 3 | 37) | 1 | 38) | 2 | 39) | 1 | 40) | 3 |
| 41) | X | 42) | ✓ | 43) | ✓ | 44) | X | 45) | ✓ |

46) கலிங்கமாகன் 47) 2ம் பராக்கிரமபாகு

48) தம்பதெனியா 49) 4ம் புவனேகபாகு

50) ஸ்ரீஜெயவர்த்தனபுரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலகு 05

# ஐரோப்பாவின் புராதன நாகரிகங்கள்.


**அறிமுகம்**


கிரேக்க உரோம நாகரிகங்கள் மூலம் நவீன ஐரோப்பிய நாகரிகம் ஊட்டம் பெற்றுள்ளது. இந்நாகரிகங்கள் பற்றிய விடயங்களை தொல்பொருள் அகழ்வுகளின் மூலம் கிடைக்கப் பெற்ற சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு மட்டுமல்லாமல் இலக்கிய மூலாதாரங்களினூடாகவே அதிகம் அறிந்து கொள்ள முடிகின்றது.

### கிரேக்க நாகரிகம்

**01) கிரேக்க நாகரிகத்தின் மறுபெயர் என்ன?**

★ ஹெலனிய நாகரிகம்



கிரேக்க நாகரிகம்

**02) கிரேக்க நாகரிகம் ஆரம்பமாவதற்கு முன்னர் நிலவிய நாகரிகம் எது?**

★ மினோவன் நாகரிகம்

**03) மினோவன் நாகரிகம் எத்தீவை மையமாகக் கொண்டு நிலவியது?**

★ கிரீட் தீவை மையமாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04) மினோவன் நாகரிகம் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக?**

★ பல்வேறு கோத்திரங்களினதும், இனக்குழுக்களினதும் ஆக்கிரமிப்பு காரணமாக வீழ்ச்சியடைந்தது.

**05) மினோவன் நாகரிகம் வீழ்ச்சியடைவதற்கு ஏதுவான ஆக்கிரமிப்பை மேற்கொண்ட இனக்குழு எது?**

★ இந்தோ ஐரோப்பிய இனக்குழு

**06) கிரேக்க நாகரிகம் எத்தனையாம் ஆண்டளவில் தோற்றம் பெற்றது?**

★ கி.மு 2000

**07) கிரேக்கத்தின் ஆரம்ப குடிகளாக கருதப்படும் இனக்குழு எது?**

★ இந்தோ ஐரோப்பிய இனக்குழு

**08) கிரேக்க நாகரிகம் தோற்றம் பெற்ற அமைவிடம் யாது?**

★ மேற்காக அயோனியன் கடலுக்கும் கிழக்காக ஈஜியன் கடலுக்கும் மத்தியில் மத்திய தரைக்கடலினுள் துருத்திக் கொண்டுள்ள குடா நாடும் அதற்குத் தெற்காக அமைந்துள்ள கிரீட் தீவு உட்பட ஏனைய தீவுக்கூட்டங்களையும் அடிப்படையாகக் கொண்டு கிரேக்க நாகரிகம் தோற்றம் பெற்றது.

**09) கிரேக்க நாகரிகத்தின் தீவுகளில் மிகப் பெரியது எது?**

★ கிரீட் தீவு

**10) கிரேக்கத்தின் சிறப்பியல்பு யாது?**

★ இரம்மியமான மலைகளைக் கொண்டது

★ பல்லுருவக் கடற்கரைகளைக் கொண்டது

★ இதமான காலநிலை கொண்டது.

★ பள்ளத்தாக்குகளைக் கொண்டது.

**11) கிரேக்கத்தில் காணப்படும் சிறப்பியல்புகளைப் பயன்படுத்தி அந்நாடு அடைந்து கொண்ட நன்மைகளைக் குறிப்பிடுக.**

★ மலைத் தொடர்களில் பாய்ந்தோடும் நதிகளால் விவசாயத்திற்கு உகந்த சூழலைப் பெற்றுக் கொண்டமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சிறந்த காலநிலை மந்தை வளர்ப்புக்கும் மக்கள் வாழ்க்கைக்கும் பொருத்தமானதாக அமைந்தமை.
★ பல்லுருவக் கடற்கரையினால் வெளிநாட்டு உறவுகளையும் வர்த்தக நடவடிக்கைகளையும் சிறப்பாக முன்னெடுத்தமை.

**12) கிரேக்கத்தில் காணப்படும் மலைகளில் மிக இரம்மியமானதும், அழகானதுமான மலை எது?**

★ ஒலிம்பஸ்மலை

**அறிந்து கொள்ளுங்கள்**

கிரேக்க நாகரிகம் பற்றி அறிய உதவும் வரலாற்று மூலாதாரங்கள்

★ கர்ணபரம்பரைக் கதைகள்
★ ஹோமரின் "இலியட்", "ஒடிசி" எனும் காவியங்கள்.
★ ஹெசியட்டின் "வேலையும் நாளும்" எனும் நூல்.
★ ஆதர் இவான்ஸ் முதலிய அறிஞரின் தொல்லியல் ஆய்வுகள்.

**நிர்வாகம்**

**13) நகர அரசு என்றால் என்ன?**

★ நகரங்களை மையமாகக் கொண்டு நிர்வகிக்கப்பட்ட சிறிய சுதந்திர அரசுகள்

**14) நகர அரசு தோற்றம் பெற்ற முறையினைக் குறிப்பிடுக.**

★ கிரேக்கத்தின் ஆரம்பக் குடியினரால் உருவாக்கப்பட்ட கிராமங்கள் அபிவிருத்தி அடைந்து நகரங்கள் தோன்றியமையால் அந்நகரங்களை மையமாக நிர்வாக அலகு ஒன்று தோன்றியது. அதுவே நகர அரசு ஆகும்.

**15) கிரேக்க நாகரிகத்தின் நகர அரசுகள் தோற்றம் பெற்ற காலப்பகுதி யாது?**

★ கி.மு 700

**16) கிரேக்க நாகரிகத்திற்குட்பட்ட நகர அரசுகள் எவை?**

★ எதென்ஸ்
★ ஸ்பாட்டா
} பிரதானமானவை
★ ஒலிம்பியா
★ கிரீட்
★ மயோசின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**17) நகர அரசுக்களின் பண்புகளைக் குறிப்பிடுக?**

★ நிலப்பரப்பு சிறியதாகக் காணப்படும்.
★ சனத்தொகை வரையறுக்கப்பட்டிருக்கும்.
★ ஆண் பிரஜைகளுக்கு மாத்திரமே அரசியல் உரிமை காணப்படும்.
★ நகரினை மையமாகக் கொண்டு காணப்படுகின்றமை.
★ நேரடி ஜனநாயம் நிலவியமை.
★ ஒவ்வொரு நகர அரசுக்கும் அதிபதியாக தெய்வங்கள் காணப்பட்டமை.

**18) நேரடி ஜனநாயகம் என்றால் என்ன?**

★ நகர அரசுகளில் மக்கள் ஒரே இடத்தில் ஒன்றுகூடி அரசியல் தீர்மானங்களை மேற்கொண்டு அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் நேரடி ஜனநாயகம் எனப்படும்.

**அறிந்து கொள்ளுங்கள்**

★ ஜனநாயகம் என்பது மக்களாட்சியைக் குறிக்கின்றது.
★ ஜனநாயகம் இரண்டு வகைப்படும். அவையாவன :- நேரடி ஜனநாயகம், மறைமுக ஜனநாயகம்.
★ நேரடி ஜனநாயகம் என்பது மக்கள் ஒன்று கூடி தீர்மானங்களை எடுத்தல். ஆரம்பத்தில் கிரேக்கத்தில் இம்முறை பயன்படுத்தப்பட்டது.
★ மறைமுக ஜனநாயகம் என்பது மக்கள் அரசியல் தீர்மானங்களில் நேரடியாக பங்குபற்றாமல் தமது பிரதிநிதிகள் மூலம் மறைமுகமாக பங்குபற்றுதல்.

**19) நவீன உலகில் நிலவும் பாராளு மன்ற ஜனநாயகத்திற்கான அடிப் படையை வழங்கிய நாடு எது?**

★ கிரேக்கம்.

**20) கிரேக்கத்தின் பொற்காலமாகக் கருதப் படும் காலத்தில் ஆட்சியாளராக விளங்கியவர் யார்?**

★ பெரிக்ளீஸ்



பெரிக்ளீஸ்



Class No 900
Acc No 308
Arasady Public Library
Municipal Council
Batticaloa.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெரிக்ளீஸ்**

* ★ காலம் - கி.மு. 495 - 429
* ★ பிறப்பிடம் - எதென்ஸ்
* ★ மனைவி - அஸ்பாசியா
* ★ புகழ் பெயர் - மக்கள் தலைவர், பொற்கால அரசர்.

**21) பெரிக்ளீஸ் மன்னரால் உருவாக்கப்பட்ட தலைநகர் எது?**

★ அக்ரோபொலிஸ்

**22) அக்ரோபொலிஸ் எந்த நகர அரசுக்குட்பட்டதாகக் காணப்பட்டது?**

★ எதென்ஸ்

**23) கிரேக்கத்தை ஆக்கிரமித்த பிலிப் மன்னன் எப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்?**

★ மெஸிடோனியா

**24) பிலிப் மன்னனைத் தொடர்ந்து கிரேக்கத்தை ஆக்கிரமித்து கிரேக்கத்தின் அரசனானவர் யார்?**

★ மகா அலெக்ஸ்சாந்தர்

**பொருளாதாரம்**

**25) கிரேக்க மக்களின் வாழ்க்கை முறை அல்லது பொருளாதார முறை எவற்றை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டது?**

★ விவசாயம்

★ மந்தை வளர்ப்பு

★ வர்த்தகம்

**26) கிரேக்க விவசாயத்தில் முக்கியத்துவம் பெற்ற தானியங்களையும் பழவகைகளையும் குறிப்பிடுக?**

★ தானியங்கள்
- கோதுமை
- பார்லி

★ பழவகைகள்
- திராட்சை
- ஒலிவ்



ஒலிவ் மரம்



Public Library Municipal Council Batticaloa. Acc No

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**27) கிரேக்கத்தின் மந்தை வளர்ப்பின் பொருட்டு வளர்க்கப்பட்ட மந்தைகளைக் குறிப்பிடுக?**

- ★ ஆடு
- ★ மாடு
- ★ செம்மறி ஆடு

**28) கிரேக்கத்துடன் வர்த்தக வியாபார தொடர்புகளைப் பேணிய நாடுகளைக் குறிப்பிடுக?**



- ★ இந்தியா
- ★ சீனா
- ★ இலங்கை

**29) கிரேக்கர்கள் இலங்கையை எவ்வாறு அழைத்தார்கள்?**

- ★ தப்ரபேன்
- ★ அழைத்தவர் - குளோடியஸ் தொலமி

**30) கிரேக்கத்தின் வர்த்தக பொருட்களைக் குறிப்பிடுக?**

- ★ வெள்ளியினாலான பொருட்கள்
- ★ நறுமணப்பொருட்கள்
- ★ அலங்கார மட்பாண்டங்கள்
- ★ லினன் துணிவகை
- ★ வைன் பானம்

கிரேக்க அலங்கார மட்பாண்டங்கள்

**31) பிரதான கிரேக்க சமுதாயம் கொண்டிருந்த பிரிவுகளைக் குறிப்பிடுக?**

- ★ பிரபுக்கள்
- ★ சாதாரண குடிமக்கள்
- ★ அடிமைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**32) கிரேக்கரின் வாழ்க்கைமுறை பற்றிய விடயங்களை தருக?**

★ மக்கள் எளிமையான வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்டிருந்தமை.


★ குடும்பம் சிறிய அலகாகக் காணப்பட்டமை

★ மரக்கறி, இறைச்சி, மீன், பார்லி, வைன் என்பன பிரதான உணவுப் பண்டங்களாகக் காணப்பட்டமை.


★ பிரபுக்கள் மாடிவீடுகளில் வாழ்ந்தமை.

★ நடு முற்றத்தைச் சூழ படுக்கையறை, சமயலறை, களஞ்சிய அறை என்பன கட்டப்பட்டிருந்தமை.

★ சாதாரண மக்கள் சிறிய வீடுகளில் வாழ்ந்தமை.



கிரேக்கரின் ஆடை அணிகலன்கள்



கிரேக்கத்தின் புராதன வீடொன்றின் மாதிரி



கிரேக்கரின் ஆடை அணிகலன்கள்

**கலை நடவடிக்கை**

**33) கிரேக்கக் கட்டிடக்கலையின் பண்புகளைத் தருக?**

★ பெரிய கட்டடங்களையும் அழகான தேவாலயங்களையும் அமைப்பதில் திறமை கொண்டிருந்தமை.


★ தேவாலயங்களைக் கட்டும் போது செப்பனிடப்பட்ட சுண்ணாம்புக்கல், வெண்பளிங்குகல், வர்ணச்செங்கற்கள் என்பவற்றைப் பயன்படுத்திமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**34) கிரேக்கக் கட்டிடக்கலையின் சிறப்புக்கு சான்று பகரும் கட்டட நிர்மாணம் எது?**

★ பாதீனன் ஆலயம் (டோரியக் கலைமரபு பின்பற்றப் பட்டுள்ளமை.)



பாதீனன் ஆலயம்

**35) கிரேக்கத்தின் சிற்பங்கள், சிலைகள் கொண்டுள்ள பண்புகளைத் தருக?**

★ மனித சரீர அமைப்புக்களின் இயற்கைத்தன்மை புலனாகும் விதமாக சிலைகளை வடிவமைத்தமை.

★ சிலைகளை நிர்மாணிக்கும் போது யானைத்தந்தம், தங்கம் போன்றவற்றைப் பயன்படுத்தியமை.

**36) கிரேக்க சிற்பக் கலையில் மனித சரீர அமைப்புக்களை தத்ரூபமாக வடிவமைத்தமைக்கு சான்று பகரும் சிலை எது?**

★ பரிதி வட்டம் வீசும் விளையாட்டு வீரனின் சிலை

**37) கிரேக்க சிற்பக்கலையில் தங்கம் மற்றும் யானைத்தந்தம் பயன்படுத்தியமைக்கு சான்று பகரும் சிலை?**

★ அதீனா தேவதையின் சிலை

**கிரேக்க கட்டடக் கலை மரபுகள்**

★ டோரியக் கலைமரபு

★ அயோனியக் கலைமரபு

★ கொரிந்தியக் கலைமரபு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அறிந்து கொள்ளுங்கள்**
கிரேக்கத்தின் புகழ் பெற்ற அதீனா சிலையை நிர்மாணித்தவர் எலியூத்தெரே


**இலக்கியம்**


**38) கிரேக்க நாடகங்களின் பிரதான இரு பிரிவுகளையும் தருக?**


- ★ இன்பியல்
- ★ துன்பியல்

**39) கிரேக்கத்தின் பிரதான நாடகக் கலைஞர்களைக் குறிப்பிடுக?**

- ★ ஈசிகளஸ்
- ★ செபொக்லீஸ்
- ★ யூரிபீடிஸ்
- ★ தெஸ்பிஸ்
- ★ எரிஸ்டோபெனிஸ்


ஈசிகளஸ்


!ரிபீடிஸ்


செபொக்லீஸ்

**40) கிரேக்கர்கள் இலக்கியங்களை எழுதுவதற்குப் பயன்படுத்திய மொழி யாது?**

- ★ கிரேக்க மொழி

**41) கிரேக்கத்தில் படைக்கப்பட்ட உயர் இலக்கியங்கள் யாவை?**

- ★ வரலாற்றுக் கதைகள்
- ★ வீர காவியங்கள்

**42) கிரேக்கத்தில் எழுதப்பட்ட வீரகாவியங்களை எழுதியவருடன் தருக?**

- ★ இலியட்
- ★ ஒடிசி


} எழுதியவர் - ஹோமர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொலமி



ஹோமர்

**43) கிரேக்கத்தில் வாழ்ந்த சிறந்த இலக்கிய கர்த்தாக்களை அல்லது உரைநடை எழுத்தாளர்களைக் குறிப்பிடுக?**

- ★ ஹெரடோரஸ்
- ★ தியூசிடிஸ்
- ★ அரிஸ்டோட்டல்

**கல்வியும் தத்துவமும்**

**44) கிரேக்கத்தில் காணப்பட்ட கல்வி நிலையங்களையும் அதன் ஸ்தாபகர்களையும் தருக?**

- ★ அக்கடமி - பிளேட்டோ
- ★ லைசியம் - அரிஸ்டோட்டல்

**45) கிரேக்கத்தின் தத்துவஞானிகளைக் குறிப்பிடுக?**

- ★ சோக்ரட்டீஸ்
- ★ பிளேட்டோ
- ★ அரிஸ்டோட்டல்

**46) மேற்குலக வைத்திய முறையின் தந்தை யார்?**

- ★ ஹிப்போகிரடீஸ்

**47) கணித, விஞ்ஞானத்துறையின் மகத்துவம் மிக்க தலைவர் யார்?**

- ★ ஆக்கிமிடிஸ்

**ஆக்கிமிடீஸ்ஸின் மூலதத்துவம்**

★ நீரில் ஒரு பொருளை இட்டால் அப்பொருளின் நிறைக்குச் சமனான அளவு நீர் வெளியேற்றப்படும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**கிரேக்க காவியங்கள்**

இலியட் - கிரேக்கர்கள் டிரோய் நகருக்கு எதிராக மேற்கொண்ட போர் தொடர்பான கதை

ஓடிசி - டிரோய் சண்டைக்குச் சென்ற கிரேக்க இளவரசன் ஒருவர் எதிர்நோக்கிய கஷ்டங்களை விபரிக் கின்றது.


ஆக்கிமிடீஸ்


சோக்கிரட்டீஸ்


பிளேட்டோ


அரிஸ்டோட்டல்

**சமயம்**

**48) கிரேக்க நாகரிகத்தின் சமயப் பண்புகளைத் தருக?**

★ புனித யாத்திரைகளை மேற்கொள்ளல் பெருமளவுக்குக் காணக்கூடிதாக இருந்தமை.

★ இங்கு ஒவ்வொரு நகர அரசுக்கும் வெவ்வேறான தெய்வங்கள் காணப்பட்டமை.

★ சியுஸ் கிரேக்க தெய்வங்களுள் முதன்மையானவராகக் கருதப்படுகின்றார்

★ சியுஸின் மகளான அதீனா கிரேக்கரின் வணக்கத்துக்குரிய பிரதான தெய்வமாகும்

**49) கிரேக்கத் தெய்வங்களில் முதன்மையானவரும், பூகோளத்தின் அதிபதியாகவும் கருதப்படுபவர் யார்?**

★ சியுஸ் தெய்வம்

**சியுஸ் தெய்வம்**

★ மனைவி - ஹெராரானா

★ மகள் - அதீனா

★ மகன் - ஹர்ஹியுலிஸ்

★ அதீனா தெய்வத்திற்காக கட்டப்பட்டதே பாதீனன் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரிதி வட்டம் வீசுபவனின் சிலை



அதீனா தேவதை

**விளையாட்டு**

**50) கிரேக்கத்தின் விளையாட்டுக்களைக் குறிப்பிடுக?**

★ ஓட்டம்
★ குத்துச்சண்டை
★ பளுதூக்கல்
★ பரிதிவட்டம் வீசுதல்

**51) இன்றைய ஒலிம்பிக் விளையாட்டு எங்கிருந்து ஆரம்பமானது?**

★ கிரேக்கம்

**52) கிரேக்கத்தின் எத்தெய்வத்தை நினைவு கூர்வதற்காக ஒலிம்பிக் நடத்தப்படுகிறது?**

★ சியுஸ்

**53) கிரேக்கத்தால் இவ்வுலகிற்குக் கிடைத்த அருஞ்செல்வங்களைப் பட்டியற்படுத்துக?**

★ ஐரோப்பாவின் அரசியல், இலக்கியம், விஞ்ஞானம், கலைகள் உருவாவதற்கு கிரேக்க நாகரிகம் பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளது.
★ கிரேக்க தத்துவஞானிகளினதும் சிந்தனையாளர்களினதும் போதனைகள், நவீன ஐரோப்பியச் சிந்தனைகளுக்கு வழிகாட்டியது.
★ நவீன ஜனநாயக ஆட்சிமுறையை உலகிற்குத் தந்துதவியவர்களும் கிரேக்கர்களேயாவர்.
★ ஒலிம்பிக் விளையாட்டு.
★ உடற்பயிற்சி.
★ ஜனநாயக ஆட்சிமுறை.
★ கணித முறைகள் மற்றும் வைத்திய விஞ்ஞானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிளேட்டோ**

- ★ வாழ்ந்த காலம் - கி.மு. 429 - 347
- ★ ஆசிரியர் - சோக்கிரட்டீஸ்
- ★ நிறுவிய கல்விக் கூடம் - அக்கடமி
- ★ மாணவர் - அரிஸ்டோட்டல்

**சோக்கிரட்டீஸ்**

- ★ வாழ்ந்த காலம் - கி.மு. 469 - 399
- ★ பிறந்த இடம் - எதென்ஸ்
- ★ அறிமுகம் செய்த கல்வி முறை - வினா விடை முறை
- ★ சிறப்புப் பெற்ற துறை - தத்துவம்

**அரிஸ்டோட்டல்**

- ★ வாழ்ந்த காலம் - கி.மு. 384 - 322
- ★ புகழ் - அரசியல் விஞ்ஞானத்தின் தந்தை
- ★ ஆசிரியர் - பிளேட்டோ
- ★ நிறுவிய கல்விக் கூடம் - லைசியம்

**கிரேக்க நாகரிகத்தின் புகழ்ப் பெயர்கள்**

- ★ ஹெலனிய நாகரிகம்
- ★ கீரிட் நாகரிகம்
- ★ ஜனநாயக நாகரிகம்
- ★ அறிவியல் நாகரிகம்
- ★ ஹெலனிஸ்டிக் நாகரிகம்

**உரோம நாகரிகம்**

**அமைப்பு**

**54) உரோம நாகரிகம் எப்பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு ஆரம்பமானது?**

- ★ இத்தாலியின் உரோம் நகரை மையமாகக் கொண்டு.


**55) உரோம் நகரத்தின் புகழ் பெயர்களைக் குறிப்பிடுக.**

- ★ பேரரசு நகரம்
- ★ சமய நகரம்
- ★ ஏழு குன்றுகளின் நகரம்
- ★ ஏழு மலை நகரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





உரோம நாகரிகம்

**56) இத்தாலிக் குடா நாடு எக்கடலை நோக்கி நீண்டுள்ளது?**

★ மத்திய தரைக்கடலை நோக்கி நீண்டுள்ளது.

**57) இத்தாலியின் அல்லது உரோம நாகரிகம் பரவிய பிரதேசத்தின் எல்லைகளைக் குறிப்பிடுக?**

★ வடக்கு - அல்ப்ஸ் மலை
★ கிழக்கு - அட்றியாட்டிக் கடல்
★ தெற்கு - அயோனியன் கடல்
★ மேற்கு - மத்தியதரைக் கடல்

**58) ஐரோப்பாவிலிருந்து இத்தாலியைப் பிரிக்கும் மலை எது?**

★ அல்ப்ஸ் மலை

**58) இத்தாலியின் மத்திய பகுதியினூடாக வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நீண்டு செல்லும் மலை எது?**

★ அப்பினைன் மலை

**59) அப்பினைன் மலையில் ஊற்றெடுக்கும் நதி எது?**

★ தைபர் நதி

**60) தைபர் நதியின் சிறப்பம்சம் யாது?**

★ உரோம் நகரம் வரை குறித்த நதியினூடாக பயணத்தை மேற்கொள்ள முடியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**61) உரோமை உருவாக்கியவர்கள் யார்?**
★ ஐரோப்பாவிலிருந்து இத்தாலிக்கு வந்த இலத்தீனியர்கள்

**62) வாய்மொழிக் கதைகளினூடாக உரோம் யாரால் கட்டப்பட்டதாக நம்பப்படுகிறது?**
★ ரொமியுலஸ்

**63) ரொமியுலஸின் உடன் பிறந்த சகோதரர் யார்?**
★ ரீமஸ் (இரட்டைச் சகோதரர்)

**ஆட்சிமுறை**

**64) ஆரம்ப காலத்தில் எதனை அடிப்படையாகக் கொண்ட ஆட்சிமுறை உரோமில் நிலவியது?**
★ கோத்திரம் அல்லது குடும்பத்தை

**65) உரோமில் சமூக ஆட்சி முறை அல்லது குழு ஆட்சி முறை எத்தனையாம் நூற்றாண்டில் உருவாகியது?**
★ கி.மு 509

**66) குழு ஆட்சிமுறையின் கீழ் அதி கூடிய அதிகாரம் யாரிடம் ஒப்படைக்கப்பட்டது?**
★ கொன்சல் எனப்பட்ட அதிகாரிகளிடம்.

**67) கொன்சல் அதிகாரிகளுக்கு உதவுவதற்காக உருவாக்கப்பட்ட சபை எது?**
★ செனட் சபை

**68) கொன்சல் அதிகாரிகள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டனர்?**
★ மக்களால்

**69) தெரிவு செய்யப்படும் கொன்சல் அதிகாரிகள் எத்தனை ஆண்டுகால பதவிக் காலத்தை கொண்டிருந்தனர்?**
★ 1 ஆண்டு

**70) உரோமப் பேரரசு உருவாகிய ஆண்டு எது?**
★ கி.மு. 27



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**71) உரோமப் பேரரசிற்கு உட்பட்டிருந்த பிரதேசங்களைக் குறிப்பிடுக?**
- ★ ஸ்பானியா
- ★ இங்கிலாந்து
- ★ பிரான்ஸ்
- ★ மத்தியதரைக்கடலைச் சூழவுள்ள பிரதேசம்

**72) உரோம நாகரிகத்தில் புகழ் பெற்ற பேரரசர்களைக் குறிப்பிடுக?**
- ★ ஜூலியஸ் சீசர்
- ★ ஒகஸ்டஸ் சீசர்
- ★ நீரோ மன்னன்
- ★ கெரகல்லா பேரரசன்

**73) உரோமில் ஆட்சி செய்த உரோமப் பேரரசரான ஜூலியஸ் சீசர் தொடர்பான விடயங்களைக் குறிப்பிடுக?**
- ★ ஜூலியஸ் சீசர் போர் நடவடிக்கைகளில் திறமையுள்ள ஓர் போர் வீரராவார்
- ★ ஆரம்பத்தில் உரோமப் பேரரசைக் கட்டியெழுப்பியவர்களுள் முதன்மையானவர்.
- ★ இவர் நேர்மையான ஆட்சியாளராகத் திகழ்ந்தார்

**74) உரோமில் ஆட்சி செய்த உரோமப் பேரரசரான ஒகஸ்டஸ் சீசர் பற்றிய விடயங்களைக் குறிப்பிடுக?**
- ★ இவரது ஆட்சிக்காலம் உரோமானிய வரலாற்றின் பொற்காலமாகக் கருதப்படுகிறது.
- ★ உரோமின் பிரதான புராதனமான கட்டடமான கொலோசியம், கெரகெல்லா எனும் பெருங் குளியல் தடாகம் என்பவை இவரது கால நிர்மாணங்களாகும்.
- ★ ஒகஸ்டஸ் சீசரின் ஆட்சிக் காலத்தில் உரோமப் பேரரசுக்கு உட்பட்டிருந்த பெத்லகேம் என்னும் இடத்தில் இயேசு நாதரின் பிறப்பு இடம்பெற்றது.

**ஜூலியஸ் சீசர்**

| | | |
|---|---|---|
| பிறப்பு | - | கி.மு. 100 |
| பிறந்தஇடம் | - | உரோம் |
| இறப்பு | - | கி.மு. 44 |
| குலம் | - | யூலியன் பிரபுக்கள் குலம். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஒகஸ்டஸ் சீசர்**

| | | |
|---|---|---|
| இயற்பெயர் | - | கேயெஸ் ஒக்டேவியஸ் |
| புகழ் பெயர் | - | ஒக்டேவின் |
| பிறப்பு | - | கி.மு. 63 |
| சிறப்பு | - | 1வது உரோமப் பேரரசர் |

**சமூகம்**

**75) உரோமானிய சமூகத்தின் குடும்ப தலைவராக காணப்பட்டவர் யார்**

★ தந்தை

**76) உரோம சமூகத்தில் பெண்களின் நிலையினைக் குறிப்பிடுக?**

★ உயர் அந்தஸ்து காணப்பட்டமை.
★ அவர்கள் உயர் பதவிகளை வகுத்துள்ளனர்.
★ வைத்தியர்களாகத் திகழ்ந்தார்கள்.
★ தாய் தெய்வீகமானவளாகக் கருதப்பட்டாள்.

**77) உரோமானிய சமூகம் கொண்டுள்ள பிரிவுகளைக் குறிப்பிடுக?**

★ பிரபுக்கள்
★ குடிமக்கள்
★ அடிமைகள்

**78) உரோம சமூகத்தின் முதன்மையான பிரிவினர் யார்?**

★ பிரபுக்கள்



ஜூலியஸ் சீசர்



பிரபுக்கள்



அடிமைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நகர நிர்மாணம்**

**79) உரோமநாகரிகத்தின் நகர நிர்மாணமும் வீடமைப்பு தொடர்பான விடயங்களையும் குறிப்பிடுக?**

- ★ திட்டமிட்ட முறையில் நகர்களை நிர்மாணித்தமை
- ★ பிரபுக்கள் நகரங்களில் ஆடம்பரமான மாளிகை, வீடுகளில் வாழ்ந்தமை.
- ★ நீர்வசதி, சுகாதார வழிமுறைகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தியுள்ளமை.
- ★ ஒவ்வொரு நகரமும் வீதித்தொகுதிகளால் இணைக்கப்பட்டிருந்தமை



பெரிய குளியல் தடாகம்

**கலை**

**80) உரோமில் படைக்கப்பட்ட பிரதான இலக்கியப்படைப்பு எது?**

- ★ ஈனிட்

**81) ஈனிட் எனும் இலக்கியத்தை உருவாக்கியவர் யார்?**

- ★ வர்ஜில்

**82) உரோம சிற்பக்கலையின் உயிர்த்துடிப்பான அமைப்புக்குக் குறிப்பிடத்தக்க உதாரணம் எது?**

- ★ நீரோ மன்னனின் செம்பினாலான தலை

**83) உரோம நகரில் அமைக்கப்பட்ட திறந்த வெளி விளையாட்டரங்கு எது?**

- ★ கொலோசியம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**84) கொலோசியம் விளையாட்டரங்கில் ஒரே நேரத்தில் எவ்வளவு பேர் ஒன்று கூட முடியும்?**


★ *50, 000*

**85) கொலோசியம் விளையாட்டரங்கின் சிறப்பம்சம் எது?**

★ உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும்



கொலோசியம் விளையாட்டு அரங்கம்



புராதன உரோமானியப் பாலம்

**86) உரோமானியக் கட்டடக்கலையின் உன்னதத்தைக் காட்டும் பிரமாண்டமான படைப்பு எது?**

★ பெந்தியன் ஆலயம்

**87) உரோமர்களால் வணங்கப்பட்ட அனைத்துத் தெய்வங்களுக் காகவும் நிர்மாணிக்கப்பட்ட படைப்பு எது?**

★ பெந்தியன் ஆலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**88) உரோமர்களின் விளையாட்டின் இயல்புகளைக் குறிப்பிடுக?**

